கோகுலம்


GOKULAM


செப்டெம்பர் 2000 ரூ. 6/-



குழலினாலே மாடுகள் கூடச் செய்த கண்ணனாம்!

புள்ளிகளை இணைத்தால் உருவம் கிடைக்கும்!





இங்குள்ள சதுரங்களில் ஒரே மாதிரியான சதுரங்கள் எவை?

விடை: F


பிங்கி அண்ணனை அடைய வழிகாட்டுங்கள்!



வரைந்து பழகுங்கள்!



பிருந்தாவனம்



கோகுலம்

2000

செப்டெம்பர்

மலர் : 18

இதழ் : 8

அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

திரும்பின பக்கமெல்லாம் வீரப்பனைப் பற்றிய பரபரப்புதான்! நீங்களும் கூட நண்பர்களிடம் ஆச்சர்யப்பட்டுப் பேசியிருப்பீர்கள்!

கன்னட திரைப்பட சூப்பர் ஸ்டாராகக் கருதப்படும் ராஜ்குமாரை கடத்திக் கொண்டு போய் பிணைக்கைதியாக்கியிருக்கிறான் வீரப்பன்.

அவன் செய்துள்ள குற்றங்களுக்கெல்லாம் 'பொது மன்னிப்பு' கோருகிறான். அதாவது அரசு தன் மீது எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருந்து, தான் பொது வாழ்க்கைக்குத் திரும்ப உதவ வேண்டுமென்கிறான்.

ராஜ்குமாரை விடுவிக்குமாறு வீரப்பனை வற்புறுத்த பத்திரிகையாளர் கோபால், தமிழக, கர்நாடக முதல்வர்களால் தூது அனுப்பப்பட்டிருக்கிறார்.


விரைவில் ராஜ்குமாரும் அவருடன் சேர்ந்து பிணைக்கைதிகளாகியுள்ள மூவரும் விடுவிக்கப்படுவார்கள் என்று நம்புவோம். அதற்காகப் பிரார்த்திப்போம்.

ஆனால் ஒன்று. இவர்களுடைய விடுதலைக்காக வீரப்பனுக்குப் பொதுமன்னிப்பு வழங்க வேண்டிய நிலை ஏற்படுமானால் அது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கும். சட்டத்தின் ஆட்சி இங்கு நடைபெறுவது உண்மையெனில் செய்த தவறுகளுக்கு-யாராயினும் சரி- தண்டனை பெற்றேயாகவேண்டும்.



பல கொள்ளைகளையும் கொலைகளையும் செய்து, சட்டத்தைச் சிறிதும் மதிக்காமல் பலமுறை மீறியுள்ள வீரப்பனுக்கு மட்டும் மன்னிப்பு எனில், 'சிறையிலே இருக்கும் ஏராளமான குற்றவாளிகளுக்கு இதே சலுகையை ஏன் காட்டக்கூடாது?' என்ற கேள்வி எழும். அந்நிலை உருவாவது நாட்டுக்கு நல்லதல்ல. அதற்கு கர்நாடக, தமிழக முதல்வர்கள் இடம் தராமல், அதே நேரத்தில் பிணைக்கைதிகளின் விடுதலைக்கும் முயற்சி எடுப்பார்கள் என்று நம்புவோம்.

இதிலே நாம் கவனிக்கவேண்டிய அடிப்படையான விஷயம் ஒன்று இருக்கிறது. வீரப்பனைப் போன்ற சிலர், சட்டத்தை மீறி நடந்து கொள்வதன் மூலம் தங்களை வீராதி வீரர்களாக எண்ணிக் கொள்கிறார்கள். இது முற்றிலும் தவறான கணிப்பு. சட்டத்தையும் தர்மத்தையும் மீறி தன்னிச்சையாக நடந்து கொண்டு பணம் சம்பாதிப்பதில் வீரமோ, பெருமையோ ஒன்றும் கிடையாது.



• வீரப்பன்

நேர்மை, ஒழுக்கம் இவற்றைக் கடைப்பிடித்து, எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் தர்மத்தை மீறமாட்டேன், சத்தியத்தைக் கைவிடமாட்டேன் என்று உறுதியாக இருப்பதுதான் உண்மையான வீரம். இதைத்தான் அரிச்சந்திரனும் பிரஹலாதனும் நமக்கு உணர்த்துகிறார்கள். வேறுபல புராண இதிகாசக் கதைகளும் இதைத்தான் சொல்கின்றன.

சந்தேகமிருந்தால் உங்கள் தாத்தா அல்லது பாட்டியிடம் கதை கேட்டுப் பாருங்களேன்!

அன்புடன்,

கி. ராஜேந்திரன்,
ஆசிரியர்.


உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்.

கோகுலம் செப்டெம்பர் 2000 இந்த இதழில்...









கோகுலம் நியூஸ்

சந்திர கிரகணம்

இந்தியாவில் 150 ஆண்டுகளுக்குப் பின் பூரண சந்திரகிரகணம் ஜூலை 16ந் தேதி தோன்றியது. இதைப் போன்று நீண்ட நேரம் நீடித்த முழுச் சந்திர கிரகணம் இனி 3003ல்தான் தோன்றும் என வானியல் ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள். 2001 ஆம் ஆண்டு ஜனவரி 9ந் தேதி தோன்றும் சந்திர கிரகணம் சாதாரணமாக இருக்குமாம்!

புதிய சந்திரன்

கோள்களியே மிகப் பெரியது வியாழன் கோள். இதற்குச் சந்திரன்களும் அதிகம் உண்டு. கடந்த ஜூலை மாதம் 23ந் தேதி இக் கோளுக்கு மேலும் ஒரு சந்திரன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கடைசி சந்திரன் வியாழனுக்கு 17வது சந்திரன். அமெரிக்க வானியல் விஞ்ஞானிகள் இக் கண்டுபிடிப்பை நிகழ்த்தினர். இந்தச் சந்திரனின் விட்டம் 4.8 கி.மீ. இதுதான் மிகச் சிறிய சந்திரனாக இருக்கும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். வியாழன் கிரகம் சூரியனைச் சுற்றி வர 12 ஆண்டுகள் ஆகின்றன. வியாழன் பூமிக்குப் பக்கமாக வரும் வேளைகளில் விஞ்ஞானிகள் அதை ஆய்வு செய்த போது இந்தக் குட்டிச் சந்திரன் இருப்பது தெரிய வந்துள்ளது. யுரேனஸ் கிரகத்துக்கு 18வது சந்திரன் இருப்பது 1999 ஆம் ஆண்டு மே மாதம் கண்டுபிடிக்கப்பட்டது.

வீர வணக்கம்

1999 ஆம் ஆண்டு மே 6ந் தேதி பாகிஸ்தான் கார்கில், திராஸ் பகுதிகளில் ஊடுருவியது. இந்த ஆக்கிரமிப்புப் போரில் 522 இந்திய வீரர்கள் உயிரிழந்தனர். ஜூலை 26ந் தேதி இந்தியா எதிரிகளை விரட்டியடித்து கார்கில் பகுதியை மீண்டும் கைப்பற்றியது. 2000 ஜூலை 26ந் தேதி உயிர்நீத்த வீரர்களின் நினைவாக கார்கில் வெற்றி நாளாக நாடெங்கும் அனுசரிக்கப்பட்டது.

பட்டினி

உலகம் முழுவதும் 80 கோடிப் பேர் பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஐ.நா உணவு மற்றும் வேளாண் அமைப்பு தெரிவித்துள்ளது. பசிக் கொடுமையை நீக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அழைப்பு விடுத்த ஐ.நா, பசியில்லாத புத்தாயிரம் என்பதுதான் நடப்பு ஆண்டின் சர்வதேச கோஷம் என்று கூறியுள்ளது. உலகம் முழுவதும் பசிக் கொடுமையை அகற்ற, வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்; கிராம மக்களின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும்; வளரும் நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட வேண்டும் என்று கூறியுள்ளது ஐ.நா.






பாதை நிறைய

இந்திய சுதந்திரத்திற்குப் பத்தாண்டாகிய போது எனக்கு வயது நான்கு. நான் பிறந்த மேட்டூர் (அப்போதைய மதுரை மாவட்டம்) மண்ணை இப்போது தொட்டுப் பார்க்க வேண்டுமென்றால் மூச்சடக்கி மூழ்க வேண்டியிருக்கும். ஆம்! 1950களில் வைகை அணை கட்டப்படுவதற்கு திட்டமிட்ட போது அதைச் சுற்றியிருந்த பத்து, பதினைந்து கிராமங்கள் காலி செய்யப்பட வேண்டும் என்று அரசு சொன்னது. அந்தக் கிராமங்களில் எங்கள் மேட்டூரும் ஒன்று.


தாமரைக் குளத்தின் குளக்கரையில் உள்ள ஆரம்பப் பள்ளியில்தான் எனக்கு 'அ'கரம் அறிமுகமானது. பள்ளிக்கூடத்தில் எழுத்துகள் என்னை பயமுறுத்தவில்லை. அவற்றை நான் நேசித்தேன். தமிழ் எழுத்துகளின் வளைவுகளில் ஒரு வசீகரம் உண்டு. பள்ளிக்கூடம் என் சிலேட்டு அளவுக்குக் கூட சுமையாக இல்லை. திரு. ராமலிங்கம் தான் என் முதல் வகுப்பு ஆசிரியர். வடுகப்பட்டியிலிருந்து சைக்கிளில் வருவார். அப்போது கற்பிக்கப்பட்டவை தமிழும் கணிதமும்தான். கணிதத்தை விட தமிழ் எனக்கு ருசியாக இருந்தது. காரணம் என்னவென்று தெரியாது. பள்ளியின் பக்கமாக இருந்த அந்தக் குளத்தின் கரைகள் - குளத்தில் கண்ணடிக்கும் தாமரைப் பூக்கள் - சுற்றியிருந்த பசுமை - இவைதாம் என் மனவெளிகளில் இன்னமும் ஈரமாய் இருக்கின்றன.

தாமரைக்குளத்திலிருந்து உறவினர்களோடு ஒன்றி வாழ நினைத்து வடுகப்பட்டிக்கே வந்து விட்டோம். அங்கு முதல் வகுப்பில் மீண்டும் சேர்த்து விட்டார்கள். வடுகப்பட்டி என்னால் மறக்க முடியாத மண். என் ஆறாவது வயது முதல் பதினாறாவது வயது வரை என் வேர்களுக்கு நீர் வார்த்த நிலம் அது.

எந்த வயதில் நூலகம் அறிமுகமானது என்று துல்லியமாகத் தெரியவில்லை. அதுதான் என்னை ஆளாக்கியது. மொழியின் மீது என்னை மோகிக்க வைத்தது. விவரந் தெரியாத வயதில் என்னுள் நிறைய கற்பனைகளை வளர்த்



தது. சுதந்தர இந்தியாவில் செய்யப்பட்ட மிகச் சிறந்த காரியம் ஊருக்கு ஊர் நூலகம் திறக்கப்பட்டதுதான் என்பேன். எட்டு, அல்லது ஒன்பது வயதில் கதைப் புத்தகங்களின் மேல் எனக்குத் தீராக் காதல். ஈசாப் நீதிக் கதைகளில் வரும் மிருகங்களோடு உறவாடி அவற்றோடு ஒன்றாக உறங்கி, வனாந்திரங்களில் வசித்து... மிருக பாஷை பேசி... அடாடா.... அந்த அனுபவம் அபாரம்! 'அம்புலிமாமா'வில் வரும் ராஜா கதைகளில் லயித்து அவற்றில் வரும் இளவரசர்களோடு வாள் சுழற்றி மாயக் குதிரைகளை மடக்கி, பறக்கும் கம்பளங்களில் பயணித்து,



முட்கள்!

ஐம்பத்தாறு தேசம் கண்டு, ராஜா வீட்டு கல்யாணப் பந்திகளில் பசியாறி பத்து வயதுக்குள் நான் கற்பனா மயக்கத்தில் காலம் கழித்ததுண்டு. சில நேரங்களில் கதையைப் படித்து முடிப்பதற்குள் நூலகம் மூடும் நேரம் வந்து விடும். அப்போதெல்லாம், படித்துக் கொண்டிருந்த பக்கத்தின் ஓரத் தாளை திருகி மடித்து அடையாளம் வைத்து, எனக்கு மட்டும் தெரிந்த இடத்தில் அந்தப் புத்தகத்தை ஒளித்து வைத்து, மறுநாள் நூலகம் திறந்தவுடன் வந்து எடுத்துப் படித்து திருட்டு ருசி கண்டதுண்டு. பல நேரங்களில் நூலகத்தில் முதலில் நுழைபவனாகவும் வெளியேறும் கடைசி நபராகவும் இருந்திருக்கிறேன்.

ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது அனைத்துப் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி வந்தது. தலைமையாசிரியர் கந்தசாமி வினோபா பற்றிக் கட்டுரை தயாரித்துக் கொடுத்து என்னை அந்தப் பேச்சுப் போட்டியில் பங்குபெற அனுப்பினார். அதுதான் என் முதல் மேடை. பேசும் நேரம் நெருங்க, நெருங்க மனப்பாடம் செய்த வரிகள் மறந்து கொண்டிருந்தன.

என்னைத் தவிர எல்லாவற்றையும் மறந்து விட்டேன். வயிற்றிலிருந்த பயம் கால்களுக்குப் பரவியது. என் பெயர் அழைக்கப்பட்டது. 'மேடையில் ஏறிய பிறகு எல்லோரையும் முட்டாள்கள் என்று நினைத்துக் கொள்' என்று ஆசிரியர் அறிவுறுத்தி அனுப்பியிருந்தார். ஆனால் மேடையில் ஏறிய பிறகு, 'நான் ஒருவனே முட்டாள்' என்பதை உணர்ந்து கொண்டேன். சபைக்கு வணக்கம் சொல்லி விட்டுப் பொருளுக்குள் போகும் போது முதல் வரி மறந்து விட்டது. என் இருதயம் மேலே ஏறி வந்து கண்களைப் பிதுக்குவதாகக் கலங்கினேன். அடுத்த வரி நினைவுக்கு வந்தும், நாக்குச் சேற்றில் அவை மாட்டிக் கொண்டன. என்னதான் முயன்றும் வார்த்தைகளை விடுதலை செய்ய முடியவில்லை. நான் எவ்வளவு நேரம் மௌனத்தோடு போராடினேன் என்பது தெரியாது. சபையின் சலசலப்பில் எனக்கு உயிர் இருப்பதை உணர்ந்தேன். அவமானம் என்னை அப்பிக்

என் குழந்தைப் பருவம்

கவிஞர் வைரமுத்து



கொண்டது. எழுதிக் கொடுத்த வரிகளில் எது நினைவுக்கு வருகிறதோ அதைப் பேசுவது என்ற சோக முடிவுக்கு வந்தேன். அச்சமும் வெட்கமும் என்னோடு சரி விகிதத்தில் சண்டையிட்டன. நல்லவேளை வணக்கம் என்ற சொல் மட்டும் நினைவில் வந்தது. அந்த ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டு மேடையை விட்டு மெல்ல இறங்கினேன். அந்தச் சபைக்கு அது ஒரு சாதாரண நிகழ்ச்சிதான். ஆனால் அந்த நிகழ்வு என் பூவின் தலையில் விழுந்த கடப்பாறை மாதிரி, என்னைக் காயப்படுத்தி விட்டது. என் ஆசிரியரும் பிறரும் பூசிய ஆறுதல் மருந்துகளால் என் ரணம் ஆறி விடவில்லை. தனிமையில் சிந்தித்தேன். தோல்வியின் காரணங்களை ஆராய்ந்தேன். அச்சமே மறதியின் ஆணிவேர் என்பதைக் கண்டறிந்தேன். எனவே அச்சத்தைப் போக்க மனிதர்கள் இல்லாத சபைகளைத் தேர்ந்தெடுத்தேன்.

அன்று முதல் வரப்புகளே என் மேடைகள். பயிர்களே என் பார்வையாளர்கள். அடுத்த பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றே தீருவது என்று வைராக்கியமாக முடிவெடுத்தேன். ஆசிரியர் எழுதிக் கொடுத்தால் கணக்கைப் போலவே மறந்து போவதால், நாமே எழுதிக் கொள்வது நல்லதென்று தீர்மானித்தேன்.


ஒரு விடுமுறையில் கரட்டுப் பெட்டியில் உள்ள என் தாத்தா வீட்டிற்குப் போயிருந்தேன். அங்கே பொழுது போகாமல் புரண்டு கொண்டிருந்த போது, பரணில் தினத்தந்திகளுக்கு மத்தியில் அந்தச் சின்னப் புத்தகம் சிக்கியது. ஒரு ராட்சசப் பசியை எனக்குள் தூண்டி விட்ட புத்தகம் அதுதான். அதைப் படிக்கும்போது பக்கங்களை விட இதயம் படபடத்தது. படித்து முடிக்கும் வரை கண்கள் தூக்கத்தைத் தொலைத்து விட்டன. முதன் முதலாக நான் படித்த முழு நாவல் அதுதான். அதுவரை சிறகு முளைத்த தேவதைகளோடு மட்டுமே சஞ்சரித்துக் கொண்டிருந்த நான் ஒரு பூலோக மனிதனின் நிஜத்துயர் கண்டு நெக்குருகினேன். என்னைக் கண்ணீருக்குள் மூச்சுத் திணற வைத்த அந்த நாவல் விக்டர் ஹ்யூகோவின் லா மிராபிளெ (Les Miserables). சுத்தானந்த பாரதியார் அதை 'ஏழை படும்பாடு' என்று மொழிபெயர்த்திருந்தார். கதாநாயகன் ஜீன்வால்ஜீனின் கிழட்டுக் கண்ணீர் ஒரு பூவின் மேல் விழுந்த திராவகமாய் என்னைப் பொசுக்கியது. கனவுகளின் பரண்களிலிருந்து என்னை யதார்த்தத்தின் நடைபாதைக்கு இறக்கி விட்டது அந்தப் படைப்புதான்.

அந்தக் கதை எனக்கு ருசி காட்டிய பின் நாவல்களின் பள்ளத்தாக்குகளில் ஆறாண்டுகள் குடியிருந்தேன். எங்கள் ஊர் வாசகசாலை எனக்கு வாசஸ்தலம் ஆகியது. ஈசாப் கதைகளிலிருந்து இப்சன் வரை, பத்து பேர்கள் தேடிய பத்து கோடி (தமிழ்வாணன்) முதல் பட்டினப்பாலை வரை பசியோடு படித்தது அங்கேதான். நூலகத்திற்கு வரும் அரிய நண்பரான புலவர் புவனேந்திரன் அந்த நேரத்தில் என்சீர்



விருத்தங்களை எழுதிக் காட்டுவார். அப்போது தான் கண்ணதாசனையும் சுரதாவையும் காதலிக்கத் துவங்கியிருந்தேன் நான். எண்சீர் விருத்தங்களை என் மனம் பெரிதும் நேசித்தது. கவிதை எழுதுவது, எழுதினால் இலக்கணம் தப்பாமல் எழுதுவது என்ற திடமான முடிவுக்கு வந்தேன். அவ்





வளவுதான்.

பூமி மஞ்சள் பூசிக் குளிக்கும் மாலை நேரங்களில் வயல் வரப்புகளில், என்னை ஒரு மகாகவியாக கருதிக் கொண்டு, தாளங்களை அளவுகளாய்க் கொண்டு என் மொட்டுக் கவிதைகளைக் கட்டத் துவங்கினேன்.

என்னைக் கவிஞனாக செதுக்கியதில் என் பள்ளிக்கூடத்திற்கும் ஆசிரியர்களுக்கும் பெரும்பங்கு இருக்கிறது. எனக்கு ஆண் அன்னையாக விளங்கியவர் தலைமை ஆசிரியர் விஸ்வேஸ்வரன். எனக்கு முத்தமிழ்ச் சங்கங்களாக விளங்கிய தமிழாசிரியர்கள் திருவாளர்கள் உத்தமன், முத்து கிருஷ்ணன், சுப்பையா. வெளியூரில் நடக்கும் அத்தனை பேச்சுப் போட்டிகளுக்கும் என் தலைமையாசிரியர் என்னை அழைத்துப் போவார். வெற்றி பெறும்போது வசியப் புன்னகையோடு வாழ்த்துவார். தோல்வியில் மூழ்கும் போது தூக்கியெடுத்து துவட்டி விடுவார். தமிழாசிரியர் உத்தமன் அசை பிரிக்கக் கற்றுக் கொடுத்தார்.

ஒருமுறை வகுப்பில் 'வீரம்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுமாறு கட்டளையிடப்பட்டது. முறத்தால் புலியை விரட்டிய மறத்தியின் கதையை என் சொந்தச் சொற்களில் சூத்திரம் போல் எழுதினேன்.

நல்ல மறத்தினால்
உள்ள உரத்தினால்
உடல் திறத்தினால்
சிறிய முறத்தினால்
புலியைத் துரத்தினாள்
ஒரு தமிழ்ப் பெண்.

இந்தச் சொற்சித்திரம் தமிழாசிரியரை சொக்க வைத்து விடும் என்ற கற்பனை போதையில் களித்திருந்தேன். ஆனால் திருத்திய தமிழாசிரியரோ, மற்றவர்களிடம் என்னைப் பாராட்டி விட்டு, "இதெல்லாம் மேடையில் இருக்கட்டும்; தேர்வுக்கு வேண்டாம்" என்று கனிந்த குரலில் கண்டித்தார்.

ஒவ்வொரு நாள் காலையும் பள்ளியில் வகுப்புகள் தொடங்குவதற்கு முன்னால் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறும். ஐநூறு மாணவர்களும் 'ப'கர வரிசையில் அணிவகுத்து மனப்பாடம் செய்து வைத்திருக்கும் உறுதிமொழியையும், தேசிய கீதத்தையும் ஒப்பித்து விட்டு வகுப்புகளுக்குச் செல்வது வழக்கம். அந்தக் கூட்டத்தின் ஒரு அங்கமாக செய்திகள் வாசிக்கும் பொறுப்பை எனக்குத் தந்தார் தலைமை ஆசிரியர். அந்தப் பொறுப்பை செவ்வனே நிறைவேற்ற நூலகத்தைத் தஞ்சமடைந்தேன். நூலகம் திறந்தவுடன் தினசரிகளை அள்ளிக் கொள்வேன். பத்து நிமிடங்களில் செய்திகளை வாசித்து, தமிழ்நாட்டுச் செய்திகள் - இந்தியச் செய்திகள் - உலகச் செய்திகள் என்று இனம் பிரிப்பேன். மூன்று பக்கங்களில் முடியுமாறு நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொள்வேன. காலைக் கூட்டங்களில் என் செய்தி வாசிப்பு ஒரு



ருசிகரமான விஷயமாகி விட்டது.

அந்தக் காலகட்டத்தில் வறுமை தமது கறுப்பு வலையை எங்கள் குடும்பத்தின் மீது வீசியிருந்தது. பள்ளி மாணவனுக்குரிய அடிப்படைத் தேவைகள் கூட என்னிடம் பூர்த்தி செய்யப்படாமலேயே இருந்தன. போன வருஷப் புத்தகங்களை விற்று புதுப் புத்தகங்கள் வாங்கியிருக்கிறோம். சில பொழுதுகளில் அழிக்க ரப்பர் இல்லாமல், புட்டிகளின் ரப்பர் மூடிகளைப் பயன்படுத்தி காகிதங்களை காயப்படுத்தியிருக்கிறேன். மூன்று சட்டைகளுக்கு மேல் என்னிடம் இருந்ததில்லை. ஆனால் செய்தி வாசிக்க வந்த பிறகு அத்தனை கண்களும் என்னை மொய்க்கத் துவங்கிய பிறகு அழகாக உடையணிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.

சிறிது நாள் கழித்து செய்திகள் வாசிப்பதில் புதுமை செய்ய விரும்பினேன். வெறும் செய்திகளை மட்டுமே வாசிப்பதென்பது ருசி இல்லாத விஷயமாக எனக்குப் பட்டது. செய்தி வாசிப்பை இன்னும் நிறமுள்ளதாகவும் மணமுள்ளதாகவும் மாற்ற ஆசைப்பட்டேன். செய்திகளுக்கு முன்னால் இரண்டு புது அம்சங்களைப் புகுத்தினேன். 'குறளும் பொருளும்' என்ற தலைப்பில் ஒவ்வொரு நாளும் திருக்குறள் சொல்லி உரை சொன்னேன். 'கருத்துக் கருவூலம்' என்ற தலைப்பில் உலகத்து அறிஞர்களின் படம் போட்ட சிந்தனைகளைப் படம் போட்டுக் காட்டினேன்.

பள்ளி இறுதியாண்டில் என் உழைப்பை நினைத்தால் இப்போதும் கூட உயிர் சிலிர்க்கிறது. இறுதித் தேர்வுக்கு ஒரு மாதம் முன்பு மேனியெங்கும் மின்சாரம் பாய்ந்தது. டைபாய்ட் காய்ச்சல் வந்து விட்டது. செலவைப் பற்றிக் கவலைப்படாமல் ஆஸ்பத்திரியில் சேர்த்து தீவிர சிகிச்சை கொடுக்கப்பட்டது. முதல் தேர்வின் போது காய்ச்சல் முற்றிலும் குணமாகாத நிலை. மருத்துவரிடம், "நான் தேர்வு எழுதப் போகிறேன். என்னை விடுதலை செய்து விடுங்கள்" என்று விசும்பினேன். என் சோகம் அவரை சுட்டிருக்க வேண்டும். விடுதலை செய்தார். பெரியகுளம்தான் தேர்வு மையம். வடுகப்பட்டியிலிருந்து குதிரை வண்டியில் தேர்வு நடக்கும் பள்ளிக்குச் சென்று இறங்கிய போது கால்களுக்குக் கால்கள் தேவைப்பட்டன. உடம்பின் களைப்பையெல்லாம் மனத்திலிருந்த வெறி துடைக்க முயன்று தோற்றுக் கொண்டிருந்தது. எழுதினேன். கடைசித் தேர்வை எழுதி முடித்து விட்டு படுக்கையில் வந்து விழுந்த போது என் கடைவிழிகளில் நீரொழுகியது.

என் ஞாபகத்தில் ஈரமாகவே இப்போதும் இருக்கிறது. எழுபது விழுக்காடு மதிப்பெண் பெற்ற எனக்கு பச்சையப்பன் கல்லூரியில் இடம் கிடைத்தது. எனது சென்னை பயணத்துக்கும் கல்லூரி படிப்புக்கும் வீட்டிலிருந்த பருத்தி விற்கப்பட்டது. பெற்றோரையும் மற்றோரையும் வணங்கி, எட்டு முழ வேட்டி சட்டையோடு செருப்பில்லாத பாதங்களோடு, அழுது சிவந்த விழிகளை வேட்டி முனையில் துடைத்துக் கொண்டு வடுகப்பட்டியை விட்டுக் கிளம்பி, பெட்டியோடும் இருநூற்று ஐம்பது ரூபாய் பணத்தோடும் என் கவிதை நோட்டுக்களையும் சுமந்து கொண்டு எழும்பூரில் வந்து இறங்கினேன்.

சந்திப்பு : **ப்ரியன்**

இடமிருந்து வலம்


1. மைசூர் அரண்மனை இந்த மாநிலத்தில் உள்ளது (6)
4. நீர் வாழ்விகளில் பெரும்பான்மையான இனம் (2)
7. காற்றடைந்த பதார்த்தம் (2)
10. பூக்களில் ஒன்று. கதம்பத்தில் இடம் பெறும் (3)
11. இது அடித்தால் ஓசை வரும் (2)
15. சாய்ந்த கோபுரம் (2)
16. வரலாறு என்பதை இப்படியும் அழைக்கலாம். (6)

வலமிருந்து இடம்

6. ஒளவைக்கு இது விழுந்திருக்கும் (2)
8. ஏகலைவனின் கையில் இதில் ஒன்று இருக்காது (3)
12. ஆடு, மாடு ______ போடும் பிராணிகள் (3)

மேலிருந்து கீழ்

1. முருகனின் பெயர்களில் ஒன்று (4)
2. பேச்சிற்கும் சுவைக்கும் இது அவசியம் (3)
3. தலையில் கிரீடம் உள்ள காய் (4)
5. இதிலிருந்து கயிறு தயாரிக்கப்படுகிறது (3)
7. வீட்டுப் பிராணி. இதனால் எலி குறையும் (2)
9. வீடுகளில் இருக்கும் நீர்நிலை (2)
10. சட்டியில் இருந்தால்தான் ______ல் வரும் (4)




11. அமைச்சரை இப்படியும் கூறலாம் (4)
12. உச்சி மீது வானிடிந்து விழுகின்ற போதிலும் ______ கொள்ளத் தேவை இல்லை என்கிறார் பாரதி (4)
13. சிவனின் மனைவி (3)

கீழிருந்து மேல்

8. மிகப் பெரிய கோள் (4)
14. வதந்தி (3)

— சு. பிரியா, பதினோராம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப்பள்ளி, ஆண்டிபட்டி.

குறுக்கெழுத்துப் புதிர்




விடை: 61 ம் பக்கம்

எத்தனையோ தடவை சொல்லிப் பார்த்தாயிற்று. கார்த்திக் திருந்துவதாக இல்லை. எப்போதும் அவனையும் அறியாமல் கை விரல்களின் நகங்களைக் கடித்தபடி இருப்பான். கால்களின் விரல் நகங்கள் கூட அவ்வப்போது 'கடி, கடி' என்பதாகக் குறுகுறுப்பது உண்டு. ஆனால் அந்த அளவுக்குக் குனிய முடியாமல், விரல் நகங்களோடு நிறுத்திக் கொண்டான். வகுப்பில் ஆசிரியரும், "கார்த்திகேயன், நகத்தைக் கடிக்காதே" என்று சற்றே தலை தாழ்த்தி, மூக்குக் கண்ணாடி ஃப்ரேமுக்கு மேலாகப் பார்வையைச் செலுத்திச் சொல்லிப் பார்த்தார். அப்போதைக்கு கையை வெடுக்கென்று இறக்கிக் கொண்டானே தவிர, நகம் கடிக்கும் கெட்டப் பழக்கம் அவனை விட்டு விலகவில்லை.

ஏழாம் வகுப்பு படிக்கிறான். படிப்பில் வெகுசுட்டி. ஆசிரியர்களுக்கு அவன் மீது அன்பும் மதிப்பும் உண்டு. ஏதாவது ஒன்றை நினைத்துப் பார்த்துச் சிந்திப்பது அவன் வழக்கம். அப்படி சிந்திக்கும்போது, அவனையும் அறியாது விரல்கள் பற்களை நாடின. 'நகம் கடிப்பதற்கே' என்பதான ஒரு கோட்பாடு அவனுடைய மனத்தின் ஆழத்தில் இருந்தது.

நன்கு வளர்ந்து ஆரோக்கியமாக இருந்தாலும், விரல்கள் மட்டும் குண்டு குண்டாக, தடித்து, குட்டைக் குட்டையாக இருந்தன. 'நீயே பார். நகத்தைக் கடித்துக் கடித்து உன் விரல்களும் குட்டையாகி விட்டன. நீயும் வளராமல் உன் விரல்களைப் போலக் குட்டையாக இருக்கப் போகிறாய்' என்று அம்மா சொல்லிப் பார்த்தார். அப்படி அம்மா சொல்லும்போது அம்மாவின் முகத்தைப் பரிதாபமாகப் பார்ப்பான். அந்த அறிவுரை அடுத்த நிமிடம் மறந்து போகும். தான் நகங்களைக் கடிப்பது அவனுக்கே தெரிவதில்லை!



ஆகவே அவனுடைய விரல் நகங்கள் மிகவும் சிறியதாக இருந்தன. அப்படியா ஒருவன் வேரோடு நகங்களைக் கடிப்பான் என்று அவனுடைய விரல்களைப் பார்ப்பவருக்குத் தோன்றும்.

ஒருநாள் இரவு அவனுடைய தங்கை காயத்ரிக்கு அம்மா, கைகளில் மருதாணி இட்டுவிட்டபோது, தனக்கும் இட அம்மாவிடம் கெஞ்சினான். 'போ,போ, உன் விரல்களில் நகங்களே இல்லை. அவற்றுக்கு மருதாணி ஒரு கேடாக்கும்' என்று சொல்லி விட்டார் அம்மா. அப்படியாவது அவன் நகங்களைக் கடிக்காமல்

நகம் கடிப்பதில் சிறந்தவன்!



திருவாழத்தான்

இருக்க மாட்டானா என்பது அம்மாவின் எண்ணம். எடுபடவில்லை.

யாரோ ஒரு செல்வந்தர் அமெரிக்காவில் ஒரு பரிசுத் திட்டம் ஏற்படுத்தினாராம். பத்திரிகைகளிலும் டி.வி.யிலும் இந்தப் பரிசுத் திட்டத்தைப் பற்றிய விவரங்கள் வெளிவந்தன. எதுக்கெல்லாம் பரிசுத் திட்டம் என்பது விவஸ்தை இல்லாமல் போய்விட்ட காலம் இது.

உலகில் எவர் நகங்களைக் கடித்து, மிகச் சிறிய விரல் நகங்களை உடையவராக இருக்கிறாரோ, அவருக்கு ஒரு லட்சம் டாலர் பரிசு என்பதாக அச் செய்தி தெரிவித்தது. உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டின் தலைநகரிலும் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டு, நகங்களைக் கடிப்போரை வரவழைத்துப் பார்த்து, மிகச் சிறிய நகங்களைக் கொண்டவர்களைப் பரிந்துரை செய்ய அந்தச் செல்வந்தர் ஏற்பாடு செய்தார். அந்தந்த நாட்டிலிருந்து மிகச் சிறந்த நகம் கடிப்பவர், அந்தச் செல்வந்தர் செலவில் அமெரிக்கா அனுப்பப்படுவார். அங்கு கூடும் அனைத்து நாட்டு நகம் கடிப்போரையும் நிறுத்தி வைத்து, அவர்களில் மிகச் சிறந்த நகம் கடிப்பவரை அமெரிக்கக் குழு தேர்ந்தெடுக்கும் என்பதாகச் செய்தி தெரிவித்தது. செல்வந்தரும் நகம் கடிப்பவர்!

கார்த்திக் படிக்கும் பள்ளியின் தலைமையாசிரியர் பள்ளியில் ஒரு சுற்றறிக்கை அனுப்பினார். அப்பள்ளியில் நகம் கடிப்பவர்கள் அனைவரும் இன்று மாலை விளையாட்டு மைதானத்தில் கூட வேண்டும் என்று சுற்றறிக்கை சொல்லியது.

கார்த்திக்கும் வேறு இரு மேல் வகுப்பு மாணவர்களும் விளையாட்டு மைதானத்தில் கூடினர். தலைமையாசிரியரும் மற்றும் இரு ஆசிரியர்களும் வந்தனர். அவர்கள் அந்த மூவருடைய விரல் நகங்களையும் சோதித்துப் பார்த்தனர். கார்த்திக் வென்றான். அவன்தான் தன் நகங்களை அதிகமாகக் கடித்து, சிறியதாக வைத்திருந்தவன்.

சில நாட்களுக்குப் பிறகு, புது டெல்லியிலிருந்து கடிதம் வந்திருப்பதாகச் சொல்லி, தலைமையாசிரியர் அவனை அழைப்பதாகப் பள்ளி சேவகர் வந்து, அழைத்துச் சென்றார். அங்கு அலுவலக அறையில் அவனை வரவேற்று, முதுகில் தட்டிக் கொடுத்து, தமிழ்நாட்டிலிருந்து மிகச் சிறந்த நகம் கடிப்பவனாக அவன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறான் என்று தலைமையாசிரியர் சொன்னார். அவனுக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. அந்த மகிழ்ச்சியில் அவனையும் அறியாது அவன் தன் விரல் நகங்களை தலைமையாசிரியர் எதிரில் கடித்தான்!

தமிழ்நாட்டின் மிகச் சிறந்த நகம் கடிப்பவன் என்று அவனை புதுடெல்லிக்கு அனுப்பி வைத்தார்கள். அவனுடைய அப்பா உடன் சென்றார். பயணத்தின் போது, 'நகத்தைக் கடியடா, நகத்தைக் கடியடா' என்று ரயிலில் சொல்லிக் கொண்டே சென்றார். கடிக்க அவன் மறந்து விட்டாலும், அவர் நினைவுபடுத்திக் கடிக்கச் சொன்னார்.

"வேணாம் அப்பா. இனிமேல் கடித்தால் ரத்தம் வந்து விடும். இப்பவே விரல் நுனிகள் எல்லாம் எரியுது'' என்றான் கார்த்திக்.

புதுடெல்லியில், பெரிய ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இருபத்தாறு நகம் கடிப்பவர்கள் கூடி இருந்தனர். அவர்களில் இவன்தான் சிறியவன். மற்றவர்கள் தாத்தாக்களாகவும் மாமாக்களாகவும் வயது முதிர்ந்தவர்களாக இருந்தனர்.



''ஒவ்வொரு மாசமும் ஒண்ணாந்தேதி வந்தா போதும். கரெக்டா காசைக் கறந்திடுவார்!''

''யாரு?''

''எங்கள் பால்காரர்!''

– புலவர் கணேசன்



ஒரு மத்திய அமைச்சர், பாதுகாவலர்கள் சூழ வந்து, ஒவ்வொருவரின் நகங்களையும் ஆராய்ந்தார். ஆராய்ந்துவிட்டு சில மத்திய அரசு அதிகாரிகளுடன் ஆலோசித்தார். முடிவு அறிவிக்கப்பட்டபோது, கார்த்திக் வென்றதாகத் தெரிந்தது. கூடி இருந்தவர்கள் கை தட்டிப் பாராட்டினர்.

அடுத்து அமெரிக்காவிலுள்ள ஸான்ஃபிரான்ஸிஸ்கோ நகருக்குப் பயணம். அப்பாதான் உடன் வந்தார். பாஸ்போர்ட், விஸா கெடுபிடிகள் பயங்கரமாக இருந்தன.

ஸான்ஃபிரான்ஸிஸ்கோவில் ஒரு நட்சத்திர ஹோட்டலில் கார்த்திக்கையும், அவனுடைய அப்பாவையும் தங்க வைத்தார்கள். இந்த நகம் கடிக்கும் போட்டியில் உலக நாடுகள் அனைத்துமே கலந்து கொண்டதாகத் தெரிந்தது. அத்தனை பேரும் ஆண்கள். இந்தியன் அவன் ஒருவன்தான். அனைவரையும் குரூப்பாக நிற்க, உட்கார வைத்து, புகைப்படம் பிடித்தார்கள். அப்படிப் படம் பிடிக்கும் போது, எல்லாரையும் விரல் நகங்களைக் கடிப்பதாக நடிக்கச் சொன்னார்கள்.

அமெரிக்க அதிபர் 'உலகில் சிறந்த நகம் கடிப்பவரை'த் தேர்ந்தெடுக்க வந்தார். உடன் வெள்ளை மாளிகை அதிகாரிகள். காமிராக்கள் பளிச், பளிச் என்று கிளிக் செய்தன.

'கின்னஸ் புக் ஆஃப் ரிகார்ட்ஸ்' தன் பிரதிநிதியை அனுப்பி வைத்திருந்தது.

சொல்லவா வேண்டும்? நமது கார்த்திகேயன் சிறந்த நகம் கடிப்பாளனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். காமிராக்களின் மின்னல் ஒளிகள் அவனுடைய கண்களைக் கூசச் செய்தன. டி.வி. காமிராக்கள் படம் எடுத்தன. மார்பின் குறுக்கே 'தி வோர்ல்ட்ஸ் பெஸ்ட் ஃபிங்கர் நெயில் பைட்டர்' என்பதான அறிவிப்பு குறுக்காக மாட்டப்பட்டது.

தலையில் வைரங்கள் முதலான ரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட பொன் கிரீடம். கின்னஸ் புக் ஆஃப் ரிகார்ட்ஸ்ஸில் அவனுடைய பெயர் இடம்பெறும் என்று சொன்னார்கள்.

ஒரு லட்சம் டாலருக்கு செக் கொடுக்கப்பட்டது.


அவன் இந்தியா திரும்பியபோது, ஏறி இருந்த விமானம் அட்லான்டிக் கடலின் மேலாகப் பறந்தது. அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாகக் கப்பல்கள் கடலில் மிதப்பது தெரிந்தது. ஸீ கல் என்ற வெண்ணிறப் பறவைக் கூட்டங்கள் குறுக்கும் நெடுக்குமாகப் பறப்பதைப் பார்த்தான்.

திடீரென ஒரு தீவிரவாதி கார்த்திக்கைப் பிணைக்கைதியாகப் பிடித்தான். அவன் உடல் நடுங்கியது. செய்வதறியாது அவன் அப்பா திகைத்தார்.

“தூங்கறியா, படிக்கறியா?” என்று மேஜைமீது பால் டம்ளரை வைத்துவிட்டு அம்மா கேட்டார்.

கார்த்திக் விழித்தான். அவன் முன் மேஜைமீது விரிக்கப்பட்டிருந்த அட்லஸ்ஸில் உலகப் படம்.

ஏனோ, அவனுக்கே தெரியவில்லை. அன்றிலிருந்து அவன் விரல் நகங்களைக் கடிப்பதில்லை!



புதிர் உலகம்

I. ஒரு அரசன் கோடை காலத்தைப் கழிக்க மலைப்பகுதிக்குப் புறப்பட்டான். அவனுக்கு ஒன்பது மனைவிகள். அந்த ஒன்பது பேரும் அரசனுடன் புறப்பட்டார்கள். ஒவ்வொரு மனைவிக்கும் ஒன்பது குழந்தைகள். அந்தக் குழந்தைகள் அனைவரும் தாயாருடன் புறப்பட்டார்கள். ஒவ்வொரு குழந்தையும் ஒன்பது நாய்கள் வளர்த்தனர். அந்த நாய்கள் அனைத்தும் குழந்தைகளுடன் புறப்பட்டன. ஒவ்வொரு நாய்க்கும் ஒன்பது குட்டிகள் இருந்தன. இந்த குட்டிகள் எல்லாம் நாய்களுடன் புறப்பட்டன. மலைக்குச் சென்ற அரசனுடன் புறப்பட்டுச் சென்றவர் நாய்கள், குட்டிகள் உட்பட மொத்தம் எத்தனை?

- **ஆறுபாதி புகழேந்தி.**

II. ***2519.*** இந்த எண்ணின் சிறப்பு என்ன தெரியுமா?

இந்த எண்ணை 1 முதல் 10 வரை எண்களால் வகுக்கும்போது எந்த எண்ணால் வகுக்கிறோமோ அந்த எண்ணைவிட மீதி ஒன்று குறைவாக வரும்.

2519 ÷ 1 = மீதி 0
2519 ÷ 2 = மீதி 1
2519 ÷ 3 = மீதி 2
2519 ÷ 4 = மீதி 3
2519 ÷ 5 = மீதி 4
2519 ÷ 6 = மீதி 5
2519 ÷ 7 = மீதி 6
2519 ÷ 8 = மீதி 7
2519 ÷ 9 = மீதி 8
2519 ÷ 10 = மீதி 9

— எஸ்.சுந்தராம்மாள், காக்காபாளையம் அஞ்சல், சேலம் மாவட்டம்.

III. ஒரு மளிகைக் கடையில் 4 படிக்கற்கள் இருந்தன. அதன் மொத்த நிறை 40 கிலோ. அந்தப் படிக்கற்களின் உதவியால் 40 கிலோகளுக்கு உட்பட்டதும், ஒரு கிலோவிற்கு மேற்பட்டதுமான எந்த நிறைக்கும் ஒரே தடவையில் சாமான்

நிறுத்துப் போடலாம். தராசுத் தட்டு இரண்டிலும் படிக்கற்களை மாற்றிப் போட்டு நிறுத்துக் கொள்ளலாம். அப்படியெனில் ஒவ்வொரு படிக்கற்களின் நிறை என்ன?

— பெ. ராமசாமி, செந்துறை

IV. ஏதேனும் ஒரு மூன்றிலக்க எண்ணை எழுதுங்கள். அதைத் திருப்பி எழுதி பெரியதிலிருந்து சிறியதைக் கழித்து வந்த விடையைத் திருப்பி அதன் கீழே எழுதுங்கள். இரண்டு எண்களையும் கூட்டினால் விடை 1089 தான் வரும். முயன்று பாருங்கள்.

(நூறாம் ஒன்றாம் இட இலக்கங்களின் வித்தியாசம் 1ஐவிட அதிகமாக இருத்தல் வேண்டும்)

— மா. மணி, பன்னிரண்டாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, செந்துறை, திண்டுக்கல் மாவட்டம்

V. 1. இந்தியாவை ஆண்ட மொகலாய மன்னர்களில் புகழ் பெற்றவர்.

2. தேசியக் கொடி நடுவில் இருக்கும் சக்கரம்.

3. உலகிலுள்ள சமுத்திரங்களுள் இரண்டாவது இடத்தை வகிப்பது.


4. ஒரு தனிமத்தின் மிகமிகச் சிறிய பகுதி.

5. பஞ்சாப் மாநிலத்தில் உள்ள சீக்கியர்களின் புண்ணியஸ்தலம்.

6. முஸ்லீம்களின் புண்ணிய ஸ்தலங்களான மக்கா, மதினா ஆகிய நகரங்கள் அமைந்துள்ள இடம்.

- ம. கபிலன், ஆறாம் வகுப்பு 'உ' பிரிவு, சபாநாயகர் மேல்நிலைப் பள்ளி, சீர்காழி.

VI. கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்களை மாற்றி அமைத்து எந்தப் பக்கம் கூட்டினாலும் விடை 23 வருமாறு அமைக்கவும். ஒரு எண்ணை ஒரு முறைதான் மாற்ற வேண்டும்.



— ச. கண்ணன், ஒன்பதாம் வகுப்பு 'இ' பிரிவு, சர்வ சேவா மேல்நிலை பள்ளி, அய்யனார்புரம், குட்டிபட்டி, திண்டுக்கல்.

VII. 5-ல் முடியும் ஒரே எண்கள் இரண்டையும் பெருக்கி விடை தெரிய, 5-க்கு பக்கத்தில் உள்ள எண், மற்றும் அந்த எண்ணின் அடுத்த தொடர் எண்ணின் பெருக்குத் தொகையைப் போட்டு அதற்கு பக்கத்தில் 25ஐ போட்டு விட்டால் விடை எளிதில் கிடைத்துவிடும்.

15 × 15 = 1 × 2 / 25 = 225

25 × 25 = 2 × 3 / 25 = 625

35 × 35 = 3 × 4 / 25 = 1225

வை.முத்தையன், லாங்பேட்டை, புதுவை



விடைகள்


I. 7380

III. 1 கிலோ படிக்கல் 1, 3 கிலோ படிக்கல் 1, 9 கிலோ படிக்கல் 1, 27 கிலோ படிக்கல் 1.

IV.

மூன்றிலக்க எண்	:	821
திருப்பி எழுதிய எண் (-)	:	128
கழித்துவந்த விடை	:	693
திருப்பி எழுதிய எண்	: +	396
	:	1089

VI.



V.


1. அக்பர் 2. அசோகச் சக்கரம் 3. அட்லாண்டிக், 4. அணு 5. அமிர்தசரஸ், 6. அரேபியா

பிருந்தாவனம்

சிலந்தி வலையில் இரண்டு விதமான இழைகள் உள்ளன. ஓரிழை மட்டும் ஒட்டும் தன்மையுடையது. மற்றொன்று ஒட்டாத தன்மை உடையதாக இருக்கும். சிலந்தி உடம்பிலுள்ள வெவ்வேறு உறுப்புகளால் இந்த இரண்டு இழைகளும் உற்பத்தியாகின்றன. சிலந்திக்கு எது ஒட்டும் தன்மையுடைய இழை, எது ஒட்டாத தன்மையுடைய இழை என்று தெரியும். ஆதலால், சிலந்தி தன் வலையில் ஒட்டிக் கொள்வதில்லை. ஆனால் பூச்சிகளுக்கு எது ஒட்டும் தன்மையுடைய இழை என்று தெரியாது. அதனால், சிலந்தி வலையில் பூச்சிகள் ஒட்டிக் கொள்கின்றன. பிறகு, சிலந்தி அதனைத் தின்று விடும்.


ஆதாரம் : அது ஏன்? இது ஏன்?

– ஏ.எல். பாத்திமா, காரைக்கால்.



தைவானைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஒரு குடையைக் கண்டுபிடித்துள்ளனர். இது பார்வைக்குச் சாதாரண குடை போல்தான் உள்ளது. எனினும் இது விசேஷத் திறன் கொண்டதாகும். இக் குடையின் மீது செராமிக் துணுக்குகள் பதிக்கப்பட்டுள்ளன. எனவே இது தீப்பிடிக்காது. ஒருவர் தீயில் மாட்டிக் கொண்டால் இக் குடையை விரித்து தலையைப் பாதுகாத்துக் கொள்ளலாம். மாடியில் தீப்பற்றிக் கொண்டால் என்ன செய்வது? தீப்பிடித்த மாடிக் கட்டடத்திலிருந்து உயிர் தப்ப, இக் குடையை விரித்து பாராசூட் போல பயன்படுத்தலாம் என்று கூறுகின்றனர்.

– ஆர். ராஜேஷ், திருப்பூர்.



டார்ஜான் கதை உருவானது எப்படி?

குழந்தைகள் அனைவரும் 'டார்ஜான்' கதைகளை மிகவும் விரும்பிப் படிப்பார்கள். இந்த டார்ஜான் கதைகளை எழுதியவர் பாரோ என்பவர். இவர் உறங்கும் போது சில சமயங்களில் கெட்ட கனவு கண்டு விழித்துக் கொள்வார். அப்படி தான் கண்ட கெட்ட கனவைப் பற்றி விடாமல் சிந்தித்தார். கனவை மையமாக வைத்து ஒரு கதை எழுத முடிவெடுத்தார். 'டார்ஜான்' கதை என்று தொடர்ந்து பத்திரிகையில் எழுதினார். இவரால்தான் டார்ஜான் கதை உலகப் புகழ்பெற்றது.

– பாளை பசும்பொன், திருநெல்வேலி.


கி.மு. 7-ம் நூற்றாண்டில் வாழ்ந்த அரசன் ஆகர்பனிபால் முப்பதாயிரம் களிமண் பலகைகள் கொண்ட நூல் நிலையம் ஒன்றை அமைத்தார். அதன் பின்பு செங்கல் ஏடுகளில் நூல்கள் தயாரிக்கப்பட்டன.

– ஆர். பிரகாசம், திருமலை.




ஒட்டகச்சிவிங்கிக்கு மிக நீளமான கழுத்து இருந்தபோதிலும் அதில் எலும்புகள் குறைவு. குருவியின் கழுத்தில் 14 எலும்புகள், வாத்தின் கழுத்தில் 16, அன்னத்தின் கழுத்தில் 23 எலும்புகளும் இருக்கும். ஆனால் ஒட்டகச்சிவிங்கியின் கழுத்திலோ 7 எலும்புகள் மட்டுமே உள்ளன.

- எஸ். மோகன்ராஜ், சீர்காழி.







● ஒரு ஹெக்டேர் பரப்பில் கிட்டத்தட்ட அறுபது லட்சம் மண் புழுக்களைக் காண முடியும்.

● ஒரு கிலோ தேனைச் சேகரிப்பதற்கு தேனீக்கள், 50 லட்சம் மலர்களின் ரசத்தை எடுத்து வர வேண்டும்.

● வண்ணத்துப் பூச்சிகள், பூச்சியாகத் தோன்றும் போது என்ன அளவு இருக்குமோ, அதே அளவுதான் இறுதி வரை இருக்கும். மேற்கொண்டு வளராது.

● எல்லாப் பறவைகளும் முன்னோக்கிதான் பறக்கும். ஆனால் 'ஹம்மிங் பேர்ட்' என்ற பறவை ஒன்றுதான் பின்னோக்கிப் பறக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளது.


– பி. சதீஷ்குமார், திருப்பூர்.




சூரியனை விட பெரிய நட்சத்திரங்கள் நூற்றுக்கணக்கில் அல்ல கோடிக்கணக்கில் இருக்கின்றன. ரொம்ப ரொம்பப் பெரிய நட்சத்திரம் JRS5. இது சூரியனை விட அளவில் 10,000 மடங்கு பெரியது எனக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

ஆதாரம் : ஏன்? எதற்கு? எப்படி?

– ப. ரவிச்சந்திரன், தருமபுரி.






70 முதல் 106 நாட்கள் வரை எறும்புகளால் வெறும் தண்ணீரை மட்டுமே குடித்துக் கொண்டு உயிர் வாழ முடியும். ஒரு வாரம் வரையிலும் எறும்புகள் தண்ணீருக்கடியில் இருந்து விட்டு உயிரோடு வந்து விடும்.

இரண்டு புற்றுகள் அருகருகே இருந்தாலும் ஒரு புற்றில் உள்ள எறும்புகள் அடுத்த புற்றில் நுழையாது.

– தேனி முருகேசன், தேனி.



தொட்டாச்சிணுங்கி இலைகளைத் தொடும் போது செல்களிலிருந்து தண்ணீர் தண்டுக்குச் சென்று விடுவதன் பயனாக செல்கள் சுருங்க, விரிந்த இலைகள் அப்படியே மடங்கி ஒட்டிக் கொள்கின்றன. இது உலகப் புகழ்பெற்ற செடியாகும். இதன் மருத்துவப் பெயர் 'மிமோஸாபுடிகா' என்பதாகும்.

ஆதாரம் : தாவரங்களைப் பற்றிய அறிவியல் உண்மைகள்.

– ஹமீதா உபைத், லால்பேட்டை.




கிழக்கு ஆப்பிரிக்காவில் வளரும் 'பாவோபாப்' என்ற மரம் உயரமாக வளர்வது இல்லை. ஆனால் அடி மரம் சுமார் 35 அடி சுற்றளவிற்கு வளரும். அடி மரம் லேசாக இருக்கும். இதனால் அதனைக் குடைந்து அறை போல் மாற்றி மக்கள் குடியிருக்கிறார்கள்!

– பி. கமல்நாத், இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்.

உலகிலேயே மிகப் பெரிய பூ தென் கிழக்கு ஆசியக் காடுகளில் காணப் படுகிறது. இதன் பெயர் ராஃப்ளீசியா அர்னால்டி. (Rafflesia Arnoldi). இதன் குறுக்களவு 1 மீட்டர். எடை 5 - 10 கிலோ. மரங்களின் மீது ஒட்டுண்ணித் தாவர மாக வளருகிறது. இதற்கு நறுமணம் இல்லை. ஆனால் துர்நாற்றம் மிகுந்தது. அழுகிய இறைச்சியின் வாசனையுடை யது. ஆரஞ்சு நிறப் பூவிதழ்களில் வெள் ளைப் புள்ளிகளுடன் காணப்படும் இந்தப் பூ பார்வைக்கு மிகவும் அழ கானது.

– க. பூங்கொடி, ஈரோடு மாவட்டம்.






கிரேக்கத்தில் நடைபெற்று வந்த பழைய ஒலிம்பிக் பந்தயத்தை தடை செய்து அழித்தவர் முதலாம் 'தியோடசிஸ்' என்ற ரோம் நாட்டு சக்கரவர்த்தி. தடைசெய்த ஆண்டு கி.மு. 394.

அதே கிரேக்க மண்ணில், ஏதென்ஸ் நகரத்தில் புதிய ஒலிம்பிக் பந்தயத்தைத் தோற்றுவித்து நடத்தி புகழ்பெற்றவர், பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த 'பியரி கூபர்ட்டின் பிரபு' என்பவர். இப்படி மீண்டும் ஒலிம்பிக் தொடங்கிய ஆண்டு 1896, ஏப்ரல் மாதம் ஆறாம் நாள்.

– சி. வருண்பிரகாஷ், கோவை.

உங்கள் நூலகம்



வந்தனாவைப் பார்ப்பதற்காக அவள் வீட்டிற்குச் சென்றாள் நித்யா.

"வா நித்யா. என்ன இந்தப் பக்கம் ரொம்ப நாளா வரலை. வந்தனா மாடியில் இருக்கா. போய்ப் பார்" என்றார் வந்தனாவின் அம்மா.

"மழலை மணம், ஆ. கோவிந்தராசலு" என்று வந்தனாவின் கையிலிருந்த புத்தகத்தைச் சத்தம் போட்டுப் படித்த நித்யாவின் குரல் கேட்டு நிமிர்ந்தாள் வந்தனா.

"டூர் எல்லாம் எப்படியிருந்தது?"

"ம்... ரொம்ப ஜாலியா இருந்தது. உனக்கு ஒரு புத்தகம், பென் செட் வாங்கிட்டு வந்திருக்கேன். அதுக்கு முன்னாலே உன் கையில் இருக்கிற புத்தகத்தைப் பற்றிச் சொல்" என்றாள் நித்யா.

"இது குழந்தைகளுக்கான பாடல்களின் தொகுப்பு. மொத்தம் 50 பாடல்கள் இருக்கு. ஓட்டுநர், அது என்ன பூச்சி? புற்று நோய், அமைச்சராக நாமானால்...., இதயத் துடிப்பு கருவி என பல புதிய பொருள்களில் பாடல்கள் அமைந்திருப்பது சிறப்பு. சரி அந்தப் புத்தகத்தைக் கொடு."

"இது எம்.வி. வெங்கட்ராம் எழுதிய மகாத்மா காந்தி பற்றிய புத்தகம். நாட்டுக்கு உழைத்த நல்லவர் என்ற நூல்களின் வரிசையில் இதுவும் ஒன்று. புகழ்பெற்ற எழுத்தாளர் சிறுவர்களுக்காக எழுதியிருக்கிறார்" என்று நிறுத்தினாள் நித்யா.

"போதும். மீதியை நான் படிச்சிக்கிறேன்" என்று புத்தகத்தை வாங்கினாள் வந்தனா.

"நித்யா, எனக்கு ஒண்ணும் வாங்கிட்டு வரலையா?" என்றபடி வந்தான் வினோத்.

"உனக்கு ஒரு சாவிக் கொத்து. அதோடு இந்தப் புத்தகம்."

"வியப்பூட்டும் செய்திகள். இதைப் பற்றிச் சொல்லேன்" என்றான் வினோத்.

"இந்த மாதிரி செய்திகளைப் படித்திருக்க மாட்டே. நோய்களைத் தீர்க்கும் டால்பின்கள், யானைக்கு எங்காவது பிறந்த நாள் கொண்டாடியிருக்கிறார்களா? என இது போன்ற ஏராளமானச் செய்திகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார் ஆசிரியர். ஆசிரியரே ஓவியர் என்பதால் படங்களும் உள்ளன."

"கார்கில் போருக்கு அடிப்படையான காரணம் என்ன? நாட்டுக்காக கார்கில் போரில் வீரமரணமடைந்தவர்களின் மெய்

கார்கில் வீரர்கள்!


சிலிர்க்க வைக்கும் செயல்கள், அவர்களின் புகைப் படங்கள் இந்தப் புத்தகத்தில் இருக்கு. படிச்சிட்டு திருப்பிக் கொடு நித்யா" என்றான் வினோத்.

"வந்தனா, நான் விமலா வீட்டுக்கும் போகணும். நாளைக்குப் பள்ளிக்கூடத்தில் பார்க்கலாம். வரேன் வினோத்" என்றபடி வேகமாக நடந்தாள் நித்யா.

– ரே

* மழலை மணம், கவிஞர். ஆ. கோவிந்தராசலு, பக். 96, ரூ. 19/- அம்சா பதிப்பகம், 34, கோட்டை மேடு வீதி, கரிக்கலாம்பாக்கம், புதுவை – 605 007.
* மகாத்மா காந்தி, எம்.வி. வெங்கட்ராம், பக். 72, ரூ. 15/- பழனியப்பா பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் சாலை, சென்னை – 14.
* பள்ளி மாணவர்களுக்கு வியப்பூட்டும் செய்திகள், ஓவியர். பாரதிவாணர் சிவா, பக். 112, ரூ. 25/- மனா புத்தகப் பண்ணை, 7, வில்லியம் லே அவுட், 2வதுதெரு, கே. கே. சாலை, விழுப்புரம் – 605 602.
* கார்கில் கண்மணிகள், ஆர்.பி. சாரதி, பக். 96, ரூ. 20/- ராஜேஸ்வரி புத்தக நிலையம், 8, முத்து கிருஷ்ணன் தெரு, பாண்டிபஜார் அருகே, தி.நகர், சென்னை – 600 017.

ஜானகி மணாளன்



எருமை கொடுத்த பரிசு!

கைலாசபுரி என்று ஒரு கிராமம். அங்கு சூரியதேவர் என்ற புலவர் வறுமையில் மிகவும் அல்லல்பட்டு வந்தார். இருப்பினும், தன்மானத்தை விட்டுக் கொடுக்காதவர். எவரிடமும் போய்ப் பல்லைக் காட்டி யாசிப்பதை அவர் விரும்பவில்லை.

ஊரில் உள்ள அனைவரும் பலமுறை சொல்லிப் பார்த்து விட்டனர். "ஏன் இப்படி இந்தக் கிராமத்திலேயே அடைந்து கிடக்கிறீர்கள்? ஏதேனும் ஒரு அரசருடைய அவையை நாடிச் செல்லக் கூடாதா? செல்வம் கொழிக்கத் தொடங்கி விடுமே. பணம் காசு உங்களுக்கு வேண்டாமல் இருக்கலாம். வீட்டில் மனைவி மக்களுக்கு அது வேண்டுமே..."

ஆனால், சூரியதேவர் அதையெல்லாம் கேட்பதாக இல்லை. நாளாக ஆக, அவருடைய வறுமை மேலும் மேலும் மோசமாகிக் கொண்டிருந்தது.

ஒரு சமயம், குழந்தைகளுக்குப் பால் வாங்கிக் கொடுக்கக் கூட வழியில்லாது போயிற்று. எல்லாரும் கொலைப் பட்டினி. பொறுக்க முடியாது போன புலவரின் மனைவி சொன்னாள் : "உஜ்ஜயினியில் ஒரு அரசர் இருக்கிறாராமே! பெரிய கொடைவள்ளல் என்கிறார்களே.. அவரிடம் போய்க் கேட்டு, ஒரு எருமை மாட்டையாவது வாங்கி வாருங்களேன்."

சூரியதேவரால் மனைவியின் சொல்லைத் தட்ட முடியவில்லை. எனவே, உஜ்ஜயினிக்குக் கிளம்பினார். பல நாட்கள் நடந்து அந் நகரை அடைந்தார். அரசரைச் சந்திக்க அரண்மனைக்குப் போனார். ஆனால், வாயிற் காப்போன் அவரை உள்ளே நுழைய விடவில்லை. எனவே, ராஜவீதியிலேயே சில நாட்கள் சுற்றிக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் அந்த வீதி வழியே அரசர் யானை மீது அமர்ந்து பவனி வந்தார். அவருக்கு முன்னும் பின்னும் பரிவாரங்கள். சூரிய தேவருக்கு அதுவே நல்ல வாய்ப்பாகி விட்டது. அதை அவர் பயன்படுத்திக் கொண்டார்.

அரசர் அருகில் வந்ததும், ஓடிச் சென்று நடுச் சாலையில் அமர்ந்து விட்டார். அரசரும் அவரைப் பார்த்து விட்டார். யானையும் நின்று விட்டது. உடனே அரசரின் படையினர் அவரைச் சூழ்ந்து கொண்டு விட்டனர்.

"யார் நீ?" என்றார் அரசர்.


அதற்குப் புலவர், "நான் ஒரு கவிஞன். பெயர் சூரியன்" என்றார்.

அரசனிடம் புன்முறுவல். "ஆச்சர்யமாக இருக்கிறதே...! தாங்கள், நான் இதுவரையில் பார்த்திராத எந்தச் சூரியனோ?" என்றார் கவிதை நயத்துடன்.

புலவரும் என்ன சளைத்தவரா? "அரசே! எப்போது பார்த்தாலும் கவிஞர்கள் என்ற மேகத்தால் நீங்கள் சூழப்பட்டுள்ள நிலையில், இந்தச் சூரியன் எப்படி உங்கள் பார்வையில் படுவேன்?" என்றார்.

அரசருக்குக் கவிஞர் சூரியன் சாதாரணமானவர் அல்ல என்பது புரிந்து விட்டது. எனவே, ஒரு படைத்தலைவனை அழைத்து, "கவிஞர் சூரியனை ரதத்தில் ஏற்றி அமர்த்தி, மிகுந்த மரியாதையுடன் அரண்மனைக்கு அழைத்து வாருங்கள்" என உத்தரவிட்டார்.

அரண்மனையில் சபை கூடியது. அரசர், கவி சூரி



யனை சபைக்கு அறிமுகம் செய்தார். அவரைச் சில கவிதைகளைக் கூறச் சொல்லிக் கேட்டார். பிறகு கவிஞரிடம், "நீங்கள் வசிக்கும் இடம் எதுவோ...?" என்றார்.

"நான் கைலாசபுரியைச் சேர்ந்தவன்" இது புலவர்.

அரசரிடம் லேசான முறுவல். அவரும் தான் ஒரு புலவர் ஆயிற்றே! எனவே, "ஓஹோ! நீங்கள் ஜடா முடி தரித்த இறைவன் வாழும் சிவலோகத்தில் இருந்து வருபவரா? அவ்விடத்துச் செய்தி ஏதாவது உண்டா?" என்றார் நயமாக.

அதைக் கேட்ட சபையினர், அரசர் புலவரைக் கேலி செய்வதாக நினைத்து விட்டனர். எனவே எல்லோரும் 'கொல்' என்று சிரித்து விட்டனர்.

பயந்து போன சூரியதேவர், முதலில் சற்றுத் தடுமாறினார். பிறகு சமாளித்துக் கொண்டார். "அரசே! சிவலோகத்தின் எந்தச் செய்தியை இங்கு நான் சொல்வேன்? கைலாயபுரியில் வறுமை பெருகி விட்டது. பாவம், சிவபெருமான்! அவர் முற்றிலும் ஏழையாகி விட்டார். எல்லாச் சொத்தும் பறிபோய் விட்டது" என்றார்.

அரசரிடம் திடுக்கிட்ட உணர்வு. "ஏன்? எப்படி ஆயிற்று இப்படி? சிவன் பரமேஸ்வரன் ஆயிற்றே... இந்தப் பிரும்மாண்டமே அவருடைய விருப்பப்படித்தானே இயங்குகிறது...?"

சூரியதேவர் ஆச்சர்யத்தை வெளிப்படுத்தியவாறு சொன்னார்: "நானும் அப்படித்தான் நினைத்தேன். அதனால் என்னிடம் ஒரு ஆசை; நமக்கும் அவரிடமிருந்து ஏதாவது கிடைக்காதா என்ற சபலம்! அங்கு போனேன். ஆனால்..." புலவரின் பேச்சில் மர்மம் மிளிர்ந்தது.

"ஆனால் என்ன? சீக்கிரம் கூறுங்கள் புலவரே!"

"அரசே! முடியில் இருந்த சந்திரப் பிறை, சந்திரனுடன் போய் விட்டது. உடலில் நெளிந்த பாம்பு கூடப் பாதாளத்துக்குப் போய்விட்டது" - இது புலவர்.

"அப்படியானால் உமக்கு என்னதான் கிடைத்திருக்கப் போகிறது? அவரிடம் எதுவுமே மிஞ்சியிருக்கவில்லை போல் தெரிகிறதே?" என்றார் அரசர்.

"அரசே! கடைசியில் சிவன் கையில் திருவோடு மட்டுமே எஞ்சியிருந்தது. அதையும் அவர் என்னிடம் கொடுத்து விட்டு, உங்கள் பெயரைச் சொல்லி, என்னை இங்கு அனுப்பி விட்டார். ஆகவேதான், நான் இங்கு வந்து விட்டேன்" என்ற புலவர், தான் அந்த அரசனிடம் யாசகம் பெற வந்துள்ளதை வெகு சாதுர்யமாக உணர்த்தி விட்டார்.

அரசருக்குச் சூரியதேவரின் அறிவுக் கூர்மை நன்கு புலப்பட்டு விட்டது. அத்துடன் அப்புலவர் தன்மானம் மிக்கவர், யாசிக்கக் கூச்சப்படுகிறார் என்பதையும் புரிந்து கொண்டு விட்டார். அவருடைய வறுமை தீர ஏதாவது செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார். எனவே, "கவிஞரே! உம் பேச்சு மிகவும் நன்றாக உள்ளது. அதற்குப் பரிசாக என்ன வேண்டும் உங்களுக்கு?" என்றார்.

"வேறு ஒன்றும் வேண்டாம். என் குழந்தைகளின் பசிக்குப் பால் கிடைக்கும்படி ஒரு எருமை மாட்டைத் தாருங்கள் அது போதும்" என்றார் புலவர்.

உடனே அரசர் தனது அரண்மனைக் கோசாலைத் தலைவரை அழைத்தார். "இந்தச் சூரியதேவருக்கு ஒரு எருமை மாட்டைக் கொடுங்கள்" என்று உத்தரவிட்டார்.

அந்தக் கோசாலைத் தலைவன் பலே பேர்வழி! பிறருக்கு நடக்கும் நல்லதைக் கண்டு சகிக்காதவன். எனவே, அவன்

"எங்க அண்ணன்கிட்டே என்ன வேலை சொன்னாலும் 'நைசா' செஞ்சுருவாரு."

"எங்க வேலை செய்யறார்?"

"மாவு மில்லில்!"

- கவிமணி செந்தில்



100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு!

தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்ட வாசகர்களுக்கான போட்டி. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு வழங்க இருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதுடன் விரைவில் அனுப்பியும் வைக்க வேண்டும். இந்த மாதப் போட்டி: பணம் சம்பந்தப்பட்ட பொன்மொழிகள். மேற்கண்ட மாவட்டங்களுக்கான போட்டி இத்துடன் நிறைவடைகிறது. அடுத்த மாதப் போட்டி எந்தெந்த மாவட்டங்களுக்கு? காத்திருங்கள், பரிசை வெல்லுங்கள்!



புலவரைத் தன் கோசாலைக்கு அழைத்துச் சென்று, இருப்பதிலேயே கறவை நின்று போன, தொத்தல் எருமையாகப் பார்த்துக் கொடுத்தான். மாடு மிகவும் இளைத்துப் போய் எலும்பும் தோலுமாக இருந்தது. அதை மறைப்பதற்காக அதன் மீது ஒரு துணியைப் போர்த்திக் கொடுத்து விட்டான். வெளிப்பார்வைக்குக் 'கொழு கொழு' என்றிருந்தது.

மாட்டைப் பார்த்ததும் சூரிய தேவருக்கு எல்லாம் புரிந்து விட்டது. ஆயினும் அதிகாரியிடம் எதுவும் பேசவில்லை. எருமையை ஓட்டிக் கொண்டு, நேராக அவர் அரசரிடம் போனார்.

"சொல்லுங்கள் என்ன விஷயம்?" என்றார் அரசர்.

"ஒன்றுமில்லை... எனக்கு எருமை கிடைத்து விட்டது. மிக்க நன்றி... ஆனால், இந்த எருமைக்கு அரண்மனைப் பாசம் அதிகம் போல் இருக்கிறது. என்னுடன் வர விரும்பவில்லை."

"எருமைக்கு அரண்மனைப் பாசமா? விவரமாகச் சொல்லுங்கள்."

உடனே சூரியதேவர், எருமையின் காதோடு தன் வாயை வைத்து ஏதோ சொன்னார். பிறகு எருமை தன்னிடம் காதோடு ஏதோ ஒரு செய்தியைச் சொல்வது போலத் தன் காதை எருமையின் வாயருகில் வைத்துக் கொண்டார். பிறகு மன்னரிடம் உரக்க, "மகாராஜா! எருமை சொல்கிறது. தன் மீது போர்த்திய துணியை உங்களுக்குப் பரிசாகத் தர வேண்டுமாம். அப்போதுதான் என்னுடன் வருமாம்!" என்றார்.

"எருமை அப்படியா சொல்கிறது?"

"ஆம் அரசே! எனக்கு மிருகங்களின் பேச்சு மொழி புரியும். அப்படித்தான் இது சொல்கிறது."

"சரி. அப்படியென்றால் எடுத்துக் கொடுங்கள்."

எருமை எலும்பும் தோலுமாக இருந்ததை மன்னர் பார்த்து விட்டார். அவருக்குக் கோசாலைத் தலைவனின் கபடம் புரிந்து விட்டது. அவன் கைது செய்யப்பட்டான்.

பிறகு சூரியதேவருக்கு ஒரு நல்ல எருமை மாட்டைக் கொடுத்தார் அரசர். கூடவே ஏராளமான பொன்னும் பொருளும் வாரி வழங்கினார். புலவர் மகிழ்ந்தார்.

அவரைப் பார்த்து அரசர், "புலவரே! இப்போது நான் மேகத்தால் சூழப்பட்டிருக்கவில்லை. சூரியனின் ஒளியால் என்னால் எல்லாவற்றையும் பார்க்க முடிகிறது. இந்தச் சூரிய ஒளி கைலாசபுரிக்கு மட்டும்தானா? உஜ்ஜயினிக்குக் கிடைக்காதா?" என்றார்.

சூரியதேவர் அரசனின் அழைப்பை ஏற்று உஜ்ஜயினிக்கே வந்து தங்கி விட்டார். மன்னர் மகிழ்ந்தார். அவர்தான் விக்கிரமாதித்தன்!



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

உங்களுக்குக் கதை, கவிதை, ஜோக் எழுதவும் படம் வரையவும் தெரியுமா? அப்படியென்றால் உங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வர கோகுலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உடனே சந்தா செலுத்துங்கள். உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....


....


ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :


சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

அலியின் தங்க நாணயங்கள்!


வேணுவாரியத்














மறுநாள் அலி எகிப்திற்குப் புறப்பட்டான்.
அல்லா உன்னுடன் இருப்பாராக!
நன்றி. நண்பர்களே விரைவில் சந்திப்போம்.
ஆண்டுகள் கழிந்தன. ஒரு நாள் ஹசன் வீட்டில்–
ஆலிவ் சாப்பிட்டு பல மாதங்களாச்சு. சாயங்காலம் வாங்கிட்டு வர்றீங்களா?
கண்டிப்பா வாங்கிட்டு வரேன்.
ஹசன் கண்களில் அலியின் பானை தென்பட்டது.
அலி வருவதற்குள் இந்தப் பானையில் உள்ள ஆலிவ்கள் கெட்டுப் போகப் போகின்றன. நாம் கொஞ்சம் எடுத்துக்கலாம்.
ஹசன் பானையைத் திறந்தான்.
சே! என்ன நாற்றம்! கெட்டுப் போய் விட்டன. வெளியே கொட்டலாம்.


பானையைக் கவிழ்த்த ஹசனால் தனது கண்களை நம்ப முடியவில்லை.
ஆஹா! எல்லாம் தங்க நாணயங்கள்!
ஹசன் தங்க நாணயங்களை எடுத்துக் கொண்டு புது ஆலிவ்களை நிரப்பினான்.
சில நாட்களில் அலி திரும்பி வந்தான்.
வா அலி! உலகப் பயணம் எப்படி இருந்தது?
இதோ உன் பானை!
ரொம்ப நன்றி ஹசன்.
வீட்டிற்கு வந்து பானையைத் திறந்த அலி அதிர்ச்சியடைந்தான்.
என்னுடைய தங்க நாண யங்களைக் காணோமே! ஹசன்தான் எடுத்திருக்கணும்.
அலி, ஹசன் கடையை அடைந்தான்.
பானையில் இருந்த தங்க நாணயங்கள் எங்கே?
நாணயங்களா? நீ ஆலிவ்களைத்தானே போட்டதாகச் சொன்னே.



என்னை ஏமாற்ற நினைக்காதே! தங்க நாணயங்களைக் கொடு.
என்ன பேசறே? நீதான் பானையை வச்சே. நீயே எடுத்துட்டு போயிட்டே. எதுக்காக என்னைக் கேட்கறே?
சீற்றம் அடைந்த அலி காலிப்பைச் சந்தித்து புகார் கூறினான்.
ஏதாவது ஆதாரம் இருக்கா? நாளைக்கு அந்தப் பானையுடன் வா.
அப்படியே செய்கிறேன்.
காலிப் மாறுவேடத்தில் நகர்வலம் சென்றார். அப்போது—
ஐயா! நேற்று இவன் என்னிடம் கொஞ்சம் புதிய ஆலிவ்களைக் கடன் வாங்கினான். இன்று பழைய ஆலிவ்களைத் திருப்பித் தர்றான்.
இது ரொம்பப் பழசு. நீ சொல்வது சரிதான். இவனுக்குப் புது ஆலிவ்களை வாங்கிக் கொடு.


மறுநாள் காலிப் பழ வியாபாரிகளைச் சந்தித்தார்.
ஆலிவ் எவ்வளவு காலத்திற்கு நன்றாக இருக்கும்?
அதிகபட்சம் இரண்டு ஆண்டுகள் வரை...
ஆமாம்!
காலிப் அலியின் பானையிலிருந்த ஆலிவ்களை வியாபாரியிடம் காட்டினார்.
இது எவ்வளவு பழையது?
ம்... இரண்டு மாதங்களுக்கு முன்னால் வாங்கப்பட்டவை.
ஹசன்! உண்மை நிரூபணமாகிவிட்டது. பழைய ஆலிவ்களைக் கொட்டிவிட்டுப் புதிய ஆலிவ்களை நிரப்பி இருக்கிறாய். அலி ஊருக்குச் சென்று 2 வருடங்களுக்கு மேலாகிவிட்டது.
என்னை மன்னித்து விடுங்கள்...
www.kuttu.com
1000 தங்க நாணயங்களை ஹசன் அலிக்குக் கொடுக்கும்படியும் ஹசனுக்கு 100 சவுக்கடி கொடுக்குமாறும் தீர்ப்புக் கூறினார் காலிப்.




ஏன், எப்படி?


கனவில் உருவங்கள்

நாம் விழித்துக் கொண்டிருக்கும்போது, பார்க்கும் பொருட்களின் உருவங்கள் விழித்திரையில் உருவாகின்றன. அதிலிருந்து மூளைக்குக் குறியீடுகள் செலுத்தப்படுகின்றன; பின்னர் மூளையில் அந்தப் பிம்பங்கள் பதிவு செய்யப்படுகின்றன. எனவே நாம் ஒரு பொருளைப் பார்க்க முடிகிறது. உண்மையாகவே பொருட்களின் உருவத்தைப் பார்ப்பது மூளையே; கண் ஓர் ஊடகம் மட்டும்தான்.

ஆனால் நாம் கனவு காணும்போது பொருட்களை நிஜமாகவே பார்ப்பது இல்லை! பின் எப்படி உருவங்கள் மூளைக்குள் உருவாகின்றன தெரியுமா? ஏற்கெனவே மூளைக்குள் பதிவு செய்யப்பட்ட உருவங்களே, நாம் தூக்கத்தில் காணும் கனவின்போது வலம் வருகின்றன. மூளையின் தூண்டுதல் இயக்கத்தால் தான் கனவு உண்டாகிறது. நாம் தூங்கும்போது, இமைகள் மூடியிருந்தாலும், கண்கள் உருளுவதை நீங்கள் கவனித்திருக்கலாம். இதனைக் 'கண் உருளல் உறக்கம்!' என்பர். இந்நிலையின்போதுதான் கனவு ஏற்படுகிறது.



நாம் விழித்துக் கொண்டிருக்கும்போது சுற்றிலுமுள்ள பொருட்களைக் கண்ணைச் சுழற்றிப் பார்ப்பது போலவே, நமது தூக்கத்தின் போதும் மூடிய கண்ணிமைக்குள், கண்மணி வெகு வேகமாய் அங்குமிங்கும் எதனையோ பார்ப்பதுபோல் உருளுகிறது. எனவே நாமும் கனவில் உருவங்களைப் பார்க்கிறோம். சுயநினைவுடன் இருக்கும்போது உள்ள சுய நினைவும் தூக்கத்தில் கனவு காணும்போது இருக்கும் சுய நினைவும் வெவ்வேறானவை.



பொதுவாக நாம் கனவு காணும்போது உருவங்களைக் கண்டாலும்கூட, வண்ணங்களைக் காண்பது இல்லை; மேலும் கனவில் 'ஒலியைக் கேட்பதாக'



தோன்றுவது எப்படி?

கனவு காண்பது இல்லை. இருந்தாலும் கலர் கனவு காண்பவர்களும் அரிதாக உண்டு!

நாம் கண்களை மூடிக்கொண்டு உறங்குவது ஏன்?

நம் உடல் செயல்பாடு தளர்ந்த நிலையில்தான் தூக்கம் வருகிறது. தூக்கத்தின்போது நாம் எந்த வேலையும் செய்வதில்லை; நம் உடலும் மூளையும் ஓய்வெடுக்கின்றன. உடல் தளர்ந்த நிலையில் கண்ணிமைகளும் அதனைத் தாங்கும் தசைகளும்கூட தளர்ந்த நிலையில்தான் இருக்கும். எனவே தூக்கத்தின்போது கண்ணிமைத் தசைகளும் ஓய்வாக இருக்கின்றன.

தூக்கத்திற்கு சில முன்னேற்பாடும் உண்டு! தூக்கத்தின் முன்னோடியான நிலை என்பது, உடல் தளர்ந்த நிலையில், தசைகள் ஓய்வெடுக்க, கண்களைச் சொக்கிக் கொண்டு தூக்கம் வரும். உடலில் முதன் முதலில் தளரும் தசைகள் கால் தசைகளே! (நடந்து, நடந்து ஓய்ந்து போகின்றன! அதிகம் வேலை செய்பவை இவைதான்) பின் ஓய்வு உணர்வு கால்களிலிருந்து மெதுவாக ஊர்ந்து போய், உடலின் மையப் பகுதியான வயிறு, மார்பு போன்ற பகுதிகளை அடைகிறது. பின்னர் கைகள், கழுத்து, தாடை, முகம் என தளர்ச்சி நகர்ந்து செல்கிறது. இப்போது கண்ணிமைகளும் சோர்ந்து போய், கண்கள் தானாக மூட, நித்திரை நம்மைத் தழுவிக் கொள்கிறது.

நாம் விழித்திருக்கும்போது, அயராமல் வேலை செய்த தசைகள் நன்கு ஓய்வெடுக்கவே, கண்ணிமைகளை



மூடித் தூங்குகிறோம். கண்கள் விழித்திருந்தால், மூளைக்குத் தூண்டுதல் ஏற்பட்டு, கண்கள் பார்க்க நேரிடும்; தூக்கத்திற்கு இடையூறாக இருக்கும். மூளையும் கண்ணும் ஓய்வெடுக்க இயலாது. கண்கள் மூடியிருப்பதால் மூளைக்குச் செல்லும் தூண்டுதல் தடுக்கப்பட்டு, தூக்கம் பாதுகாக்கப்படுகிறது.

மேலும் இருட்டறை, அமைதியான சூழ்நிலை போன்றவையும் தூக்கத்தைத் தூண்டும் காரணிகளாக இருக்கின்றன. நல்ல உடல் நலமும் மன நலமும் உள்ள ஒருவருக்கு, படுத்த ஏழு நிமிடங்களுக்குள் உறக்கம் குடி கொண்டு விடும்.

— **மோகனா**

ஒலிம்பிக்ஸ்... ஒலிம்பிக்ஸ்...

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் ஒலிம்பிக்ஸ் போட்டிகள் இந்த ஆண்டு ஆஸ்திரேலியாவின் தலைநகர் சிட்னியில் நடைபெற உள்ளது.

நவீன ஒலிம்பிக்ஸ் ஆரம்பித்து 104 ஆண்டுகள் தான் ஆகின்றன. ஆனால் ஒலிம்பிக்ஸ் ஆரம்பித்து கிட்டத்தட்ட மூவாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒலிம்பிக்ஸின் தாயகம் கிரேக்கம் தான். அந்தக் கால கிரேக்க மக்கள் ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலம் வரும்போது பயந்து நடுங்குவார்கள். மழைக்காலத்தில் ஏற்படப் போகும் பேரபாயத்திலிருந்து தங்களைக் காக்குமாறு ஜீயஸ் என்ற கடவுளை வேண்டுவார்கள். ஜீயஸ் கடவுளின் அருள் பெற்றவனை எப்படி கண்டுபிடித்து நம்மைக் காத்துக் கொள்வது என்று யோசித்தவர்கள் ஓட்டப் பந்தயம் நடத்தினார்கள். இந்தப் பந்தயத்தில் வெற்றி பெற்றவனை கடவுளின் அவதாரமாகக் கொண்டாடினார்கள். அவனைப் புகழ்ந்து பாடல்கள் இயற்றப்பட்டன. சிலைகள் வைக்கப்பட்டன.




இப்படி கிரேக்க நாட்டில் ஒலிம்பியா நகரில் நடந்து வந்த இந்த விளையாட்டில் ஆண்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.

கிரேக்க நாடு ரோமாபுரியின் கட்டுப்பாட்டிற்குக் கீழ் வந்த காலத்தில் ஒலிம்பிக்ஸ் போட்டிகளுக்கு சர்வதேச அந்தஸ்து கிடைத்தது. ஆனால் கி.பி. 393 ஆம் ஆண்டு ரோமாபுரி மன்னன் ஒருவனால் ஒலிம்பிக்ஸ் போட்டி தடை செய்யப்பட்டது.

ஒலிம்பிக்ஸ் பற்றிய நினைப்பே இல்லாமல் போன சுமார் 1500 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஒலிம்பிக்ஸ் அவதாரம் எடுத்தது. பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த கோபர்ட்டின் என்ற கல்வியாளர் நாடு நாடாகச் சென்று விளையாட்டின் அவசியத்தை எடுத்துரைத்தார். மேலும் ஒலிம்பிக்ஸ் போட்டிகளின் மூலம் உலகம் முழுவதும் அமைதியும் சமாதானமும் நிலவும் என்று







உறுதியாக நம்பினார் கோபர்ட்டின். 1896 ஆம் ஆண்டு ஏதென்ஸ் நகரில் முதல் நவீன ஒலிம்பிக்ஸ் கோலாகலமாகத் துவங்கியது.


நவீன ஒலிம்பிக்ஸில் கூட 1916, 1940, 1944ஆம் ஆண்டுகளில் நடந்த உலகப் போர்களின் விளைவால் மூன்று முறை போட்டிகள் நடைபெறவில்லை.

1936 ஆம் ஆண்டு ஜெர்மன் தலைநகர் பெர்லினில் நடந்த ஒலிம்பிக்ஸ் போட்டியில் ஒலிம்பிக்ஸ் ஜோதி உருவாக்கப்பட்டது.




ஆண்கள் மட்டுமே பங்கு பெற்ற ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் 1928 ஆம் ஆண்டிலிருந்து பெண்களும் பங்கு பெற்றனர்.

மத வழிபாடாக இருந்த போது ஒலிம்பிக்ஸில் வெற்றி பெற்றவர்களுக்கு ஆலிவ் இலைகள் கிரீடமாகச் சூட்டப்பட்டன. இன்று வெள்ளியால் செய்யப்பட்டு தங்கமுலாம் பூசப்பட்ட பதக்கங்கள் அணிவிக்கப்படுகின்றன.









• கோபர்ட்டின்

ஆரம்ப காலத்தில் ஓட்டப் பந்தயம் மட்டுமே ஒலிம்பிக்ஸில் நடத்தப்பட்டது. இன்றோ குத்துச்சண்டை, நீச்சல், கூடைப் பந்து, டென்னிஸ், ஹாக்கி, ஜிம்னாஸ்டிக் போன்ற எண்ணற்ற விளையாட்டுகள் இடம் பெற்றுள்ளன.

ஒலிம்பிக்ஸ் போட்டிகளின் துவக்க நாளும் நிறைவு நாளும் போட்டி நடத்தும் நாட்டின் மரபுப்படி மிகுந்த கோலாகலமாக நடத்தப்படுகின்றன. இதற்கு ஏராளமான பணம் செலவழிக்கப் படுகிறது.

இரண்டாயிரமாவது ஆண்டில் நடைபெறும் இந்த ஒலிம்பிக்ஸ், 27வது போட்டியாகும். செப்டெம்பர் மாதம் 15ந் தேதி ஆரம்பித்து அக்டோபர் முதல் தேதி வரை போட்டிகள் நடைபெற உள்ளன. கிட்டத்தட்ட 200 நாடுகளைச் சேர்ந்த 15,000க்கும் மேற்பட்டோர் கலந்து கொள்கின்றனர்.

சில ஒலிம்பிக்ஸ் போட்டிகளுக்கு முன்புவரை ஒன்றாக இருந்த ரஷ்யா, பதக்கப்பட்டியலில் முதல் இடத்தில் வீற்றிருந்தது. இப்போது அமெரிக்கா முதல் இடத்தைப் பிடித்துக்கொண்டது.

ஒலிம்பிக்ஸில் வெற்றி, தோல்வி சகஜம். ஆனால் களத்தில் எப்படி போராடுகிறோம் என்பது மட்டுமே முக்கியம். போராட்டமே வாழ்க்கை என்பதை முக்கியமாகக் கொண்டு ஒலிம்பிக்ஸ் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

220 நாடுகளைச் சேர்ந்த 400 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் ஒலிம்பிக்ஸ் போட்டிகளை டீ.வி.யில் ஆர்வத்துடன் கண்டு களிக்க இருக்கிறார்கள். ஒவ்வொரு விளையாட்டிலும் நாடு, இன, மொழி பார்க்காமல் திறமையானவர் வெற்றி பெற வேண்டும் என்று மக்கள் நினைக்கிறார்கள். இப்படி நினைக்கும்போது பிரிவினைகளுக்கு இடமேது? நவீன ஒலிம்பிக்ஸின் தந்தை கோபர்ட்டீனின் கனவும் இது தானே?



பறவைகள்

எல்லை இல்லா வானிலே
எங்கும் பறந்து போய் வரும்
அல்லல் ஒன்றும் இன்றியே
அகிலம் எங்கும் சுற்றிடும்!

நாடு விட்டு நாடுகள்
நாடிச் சென்று வந்திடும்
கூடு கட்டி எளிமையாய்
குஞ்சை ஊட்டிப் போற்றிடும்!

பசிக்கும்போது உணவினை
பறந்து சென்று தேடிடும்
வசிக்கும் கூட்டை அடிக்கடி
மாற்றி மாற்றிக் கட்டிடும்!

நாளைக் கென்று சேர்க்கிற
நமது பழக்கம் இல்லைதான்
வேளையானால் கொஞ்சமாய்
விரும்பி விரும்பி உண்டிடும்

மரங்கள் உள்ள இடத்திலே
வந்து நாளும் தங்கிடும்
பறந்து பறந்து வானிலே
பாடிப் பாடிச் சுற்றிடும்!

– அழகனார்





ஹார்தினியின் அரிய சேவை!

கார் தபால்

✉ எங்கள் ஊர் கோட்டைப் பட்டியில் கோகுலம் சிறுவர் சங்கம் அமைத்திருக்கிறோம். இச் சங்கத்தில் மாதம் ஒருமுறை கூட்டம் நடத்தவும் ஊர்த் தலைவர்களை அழைத்துப் பேசச் சொல்லவும் ஏற்பாடு செய்து வருகிறோம். எங்கள் கூட்டத்தில் கோகுலத்தை வாசித்தல், விமர்சனம் செய்தல், படைப்புகளை அனுப்பி வைத்தல் போன்ற நிகழ்ச்சிகள் பிரதானமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– பொ. மகாதேவன்,
சிறுவர் சங்கம்,
கோட்டைப்பட்டி,
திண்டுக்கல் மாவட்டம்.

சிறுவர் சங்கம் அமைத்திருக்கும் மகாதேவனும் நண்பர்களும் சிறப்பாகச் செயல்பட வாழ்த்துகிறோம்.

– ஆர்

✉ ஆகஸ்ட் மாதம் வெளிவந்த மதிப்பு கதை சிறியதாக இருந்தாலும் அதன் மதிப்பு அதிகம். பிருந்தாவனம், புதிர் உலகம், எங்கள் ஊரில் நடந்தது, பகை ஏன்? படக்கதை என்னை மிகவும் கவர்ந்தன.

– ர. விஸ்வநாதன், புதுவை.

✉ நான் கோகுலம் பிரியன். கோகுலத்தை அறிமுகப்படுத்தி, வாசிக்க உற்சாக மூட்டியவர்கள் என் சகோதரிகள். படித்தேன்; ஜாமெட்ரி பாக்ஸ் போட்டியிலும் கலந்து கொண்டேன்; பரிசும் பெற்றேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

– டி.எஸ்.எஸ். ஜோசன், குரும்பூர்,
தூத்துக்குடி மாவட்டம்.

✉ சிந்துபாத்தின் ஏழு பயணங்களும் நாங்களும் பயணம் செய்த உணர்வை ஏற்படுத்தின. 'ஆளப்பிறந்தவன்' படக்கதையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

– கே. பாலாஜி, கோவை,
எல். சௌந்தர்யா, திருச்சி.

✉ ஆகஸ்ட் இதழில் எங்கள் பாளையங் கோட்டையைப் பற்றி கௌரி நன்றாக எழுதியிருந்தார். பாளையங்கோட்டைச் சிறைச் சாலைக்கும் கூட சிறப்பு உண்டு. வீரபாண்டிய கட்ட பொம்மனின் தம்பி ஊமைத் துரை இங்குதான் சிறை வைக்கப்பட்டிருந்தார். இங்கிருந்து தப்பிச் சென்றுதான் தரை மட்டமாகியிருந்த பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை மக்களின் துணையுடன் மீண்டும் எழுப்பி ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார். ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்தின் போது கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் இந்தச் சிறையில் இருந்திருக்கிறார்.

– தி.சு. பாலசுப்ரமணியன்,
திருவண்ணாதபுரம்,
நெல்லை மாவட்டம்.

✉ செந்தில் அவர்களின் குழந்தைப் பருவ அனுபவங்கள் சுவையாக இருந்தன. ஆனால், 'திருடாதே பாப்பா திருடாதே' என்ற பாடல் நம் நாடு என்ற படத்தில் இடம் பெற்றிருந்ததாகக் கூறியுள்ளார். அந்தப் பாடல் 'திருடாதே' என்ற படத்தில்தான் வருகிறது.


– எஸ். ராஜகுமார்,ஏழாம் வகுப்பு,
புனித வளனார் நடுநிலைப்பள்ளி,
போத்தனூர் அஞ்சல்,
கோவை மாவட்டம்.

தவறைச் சுட்டிக் காட்டியதற்கு நன்றி. தவறுக்கு வருந்துகிறோம்.

– ஆர்

✉கோகுலம் நியூஸ் பகுதியில் வெளியான ஹர்தினிகதாவுக்கு என் வயது தான். ஆனால் அந்தப் பெண் செய்துள்ள சேவை என்னை மிகவும் பிரமிப்பில் ஆழ்த்தியது. நானும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியது.

– மா. சுமித்ரா, எட்டாம் வகுப்பு,
அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
பரமக்குடி.



முதல் பரிசு

ஆர். அஸ்வின்,


ராமவர்மாபுரம், நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

ஜூலை மாத ஓவியப் போட்டியில் ‘மான்’ என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.


இரண்டாம் பரிசு

என்.எஸ். கோபால்,

பத்தாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப்பள்ளி, இராஜா நகரம்,
திருவள்ளூர் மாவட்டம்.



ஓவியப் போட்டி முடிவுகள்



மூன்றாம் பரிசு
இரா. சங்கர்
அரசு உயர்நிலைப்பள்ளி,
சித்தரேவு, திண்டுக்கல் மாவட்டம்.

ஆறுதல் பரிசு
ஹெச். பாலு,
பத்தாம் வகுப்பு, போளூர்,
திருவண்ணாமலை மாவட்டம்.





ஆறுதல் பரிசு
பி. அரிஷ்,
ஏழாம் வகுப்பு,
ஏழாம்நாள் அட்வெந்து
ஆங்கில மேல்நிலைபள்ளி,
மதுரை.

எங்கள் பள்ளியில் நடந்தது!

என்ன வருகிறது?

அறிவியல் பாடவேளை. ஆசிரியர் வெப்பவியலைப் பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மாணவன் எங்கோ வெறித்துப் பார்த்தபடி இருந்தான். ஆசிரியர் அவனை எழுப்பி "இப்ப எதைப் பற்றிப் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறேன்?'' என்று கேட்டார். அவன் திருதிருவென விழிக்கவே "உன் கைகளை உரசித் தேய்" என்றார். அவனும் தேய்த்தான். "இப்போது என்ன வருகிறது?'' என்று கேட்டார் ஆசிரியர். அவனோ "அழுக்கு வருகிறது சார்" என்றான். நாங்கள் சட்டென்று சிரித்து விட்டோம். ஆசிரியர் அவனைக் கண்டித்து உட்கார வைத்தார்.

– பி. மணிகண்டன்,
புதுக்கோட்டை.

வெயில் எப்போ வரும்?

தமிழாசிரியர் பழமொழிகளைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார். "ஈசல் பறந்தால் மழை. அதாவது மழை வருவதற்கு முன் புற்றிலிருந்து ஈசல் வெளியே வரும். அப்போது மழை நிச்சயம் வரும் என்று நம்பலாம். இதைத்தான் இந்தப் பழமொழி கூறுகிறது'' என்று நிறுத்தினார். உடனே என் குறும்புக்கார நண்பன் எழுந்து "எது பறந்தால் மீண்டும் வெயில் வரும் சார்?" என்றான். ஆசிரியர் திகைக்க நாங்கள் சிரித்தோம். "நீ தான் மழை கொஞ்சம் பெய்தாலே மட்டம் போட்டிடுவியே, எப்ப நீ பள்ளிக் கூடத்துக்குக் கிளம்புவியோ அன்னிக்கு வெயில் வரும்னு அர்த்தம்" என்றபடி சிரித்தார் ஆசிரியர். கேள்வி கேட்டவனோ அமைதியாக உட்கார்ந்து விட்டான்.


– ஏ.எல். சாதிக்,
காரைக்கால்.

முள்

ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். காலை நொண்டியபடி எங்கள் வகுப்பு மாணவன் ஒருவன் தாமதமாக வந்து வகுப்பு வாசலில் நின்றான். அவனைப் பார்த்து "ஏன் லேட்?" என்றார் ஆசிரியர். "உங்களால் தான் சார் லேட்" என்றான் அவன்.

முள்ளை முள்ளாலே

ஆசிரியருக்கு ஒன்றும் புரியவில்லை. "என்னடா சொல்றே?'' என்றார் வியப்புடன். "நீங்க நேற்றுப் பாடம் நடத்தும் போது முள்ளை முள்ளாலே எடுக்கணும்னு சொன்னீங்க. வருகிற வழியில் முள் குத்திடுச்சு. இன்னொரு முள்ளால்



எடுக்கணும்!

எடுக்க முயற்சிக்கும் போது அந்த முள்ளும் உள்ளே போயிடுச்சு சார். அதான் நொண்டி நொண்டி வர்றதுக்கு லேட்டாயிடுச்சு'' என்றான். "நான் எதுக்கு அந்தப் பழமொழியைச் சொன்னேன்னு புரிஞ்சுக்காமல் இப்படி பண்ணிட்டியே! சரி, யாராவது பின் வைத்து முள்ளை எடுத்து விடுங்கப்பா'' என்றார் ஆசிரியர்.

– ப. ரவிச்சந்திரன்,
பத்தாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
பென்னகரம், தருமபுரி.

கற்பிக்கப் போகும்...


எங்கள் பள்ளியில் காலையில் அரை மணி நேரம் நன்னெறி பாட வேளை இருக்கும். ஜெபம் முடிந்தவுடன் ஆசிரியர் "இறைவா! நான் இப்பொழுது கற்பிக்கப் போகும் பாடங்களை நல்ல முறையில் கற்பிக்க அருள் தாரும்'' என்று கூறிவிட்டு பாடத்தைத் துவங்குவார். ஒரு நாள் ஆசிரியருக்கு உடல் நிலை சரியில்லை என்று வகுப்புத் தலைவனிடம் "ஜெபம் முடிந்தவுடன் இந்தக் கதையை எழுதிப் போடு'' என்று கூறினார். அவன் ஜெபம் முடிந்ததும் "இறைவா நாங்கள் கற்பிக்கப் போகும் பாடங்களை நல்ல முறையில் கற்பிக்க அருளும்'' என்றான் ஆசிரியரைப் போல். நாங்கள் சிரித்து விட்டோம். உடனே ஆசிரியர் "நீ இந்த நாற்காலியில் உட்கார்ந்து கற்பி. நான் கற்றுக் கொள்கிறேன்'' என்றார். அவன் வருத்தம் தெரிவித்தான்.

– ஜெ. திவ்யா,
எட்டாம் வகுப்பு,
புனித ஓரசியர் உயர்நிலைப் பள்ளி,
குரும்பூர், தூத்துக்குடி.

புதுப்புத்தகம்!

நான் வல்லநாடு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் இரண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். புத்தகத்தை நான் மிகவும் மோசமாகப் பராமரிப்பேன். அதனால் காலாண்டுத் தேர்வு நெருங்கும் போதே புத்தகத்தின் அட்டை மற்றும் நாலைந்து பக்கங்கள் கிழிந்து விட்டன. நன்றாகப் படிப்பவன் என்ற முறையில் என்மீது அன்பு கொண்ட ஆசிரியர் தன்னிடமிருந்த புத்தகம் ஒன்றைத் தந்தார். முழு ஆண்டுத் தேர்வு நெருங்கும் நேரம் மீண்டும் கிழிந்த நிலையில் இருந்த என் புத்தகத்தைப் பார்த்து விட்டு "நான் வாங்கிக் கொடுத்த புத்தகத்தை அதற்குள் கிழித்து விட்டாயா?'' என்றார் ஆசிரியர். "இது நீங்க வாங்கிக் கொடுத்த புத்தகமல்ல. அதற்குப் பின் என் அப்பா வாங்கிக் கொடுத்த மூன்றாவது புத்தகம்'' என்றதும் ஆசிரியர் திகைத்து விட்டார்.

– தி.சு.பாலசுப்பிரமணியன்,
நெல்லை மாவட்டம்.





சிலந்தி வலை பின்னுவது ஏன்?

• சிலந்தி வலையில் சிக்கிய இரைகள்

சுறுசுறுப்பிற்கு எறும்புகளையும் விடாமுயற்சிக்கு சிலந்திகளையும் உதாரணமாகச் சொல்வதுண்டு. எத்தனை தடவை தன் வலை அறுந்து விழுந்தாலும் தொடர்ந்து வலை பின்னும் சிலந்திகளைப் பார்த்து அரசர்கள் தங்கள் முயற்சிகளை முனைப்பாக்கி வெற்றி கண்டுள்ளதை வரலாறு தெரிவிக்கிறது.


நாம் எட்டுக்கால் பூச்சி என சாதாரணமாக அழைக்கும் சிலந்திகள் அர்ச்சனீஸ் என்னும் தனிப்பிரிவைச் சேர்ந்தவை.

உலகெங்கும் சிலந்திகள் காணப்படுகின்றன. பாலைவனம், துருவப்பிரதேசம், காடு, மலை, சதுப்பு நிலம், புல்வெளி, தரை, வீடுகள், மலை உச்சி என எங்கும் வாழ்க்கை நடத்துகின்றன.

22,000 அடி உயரமுள்ள மலை உச்சியிலும் பூமிக்குள் இருக்கும் காரிருள் குகைகள் மற்றும் சுரங்கங்களிலும் கூட இவை வாழ்கின்றன.

நீருக்கு மேல் நடமாடும் சிலந்திகளும் நீருக்குள்ளேயே வாழும் சிலந்திகளும் கூட உண்டு.

• தென் ஆப்பிரிக்கச் சிலந்தி





• ஆப்பிரிக்கச் சிலந்தி



• மணல் சிலந்தி

இவற்றில் 40,000 இனங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் உருவம், நிறம், பழக்கங்களில் வேறுபட்டவை.

சிலந்தியின் உடல் மிகவும் சிறியது. சில சிலந்திகள் 4.செ.மீ. நீளமிருக்கும். மிகப் பெரிய சிலந்தி 6.செ.மீ. வரை இருக்கும். சிலந்தியின் உடல் முன்னுடல், பின்னுடல் என இரு பிரிவுகளால் ஆனது.

• மெக்சிகோ- தாவும் சிலந்தி



இவற்றிற்கு எட்டுக்கால்களும் எட்டுக் கண்களும் உண்டு. இத்தனை கண்கள் இருந்தாலும் வலை பின்னும் சிலந்திக்குப் பார்வைத் திறன் குறைவு தான்! ஒவ்வொரு காலின் முனையிலும் சிறிய கொடுக்கு இருக்கும். மேல் தாடையில் கோரைப் பற்கள் உண்டு. இதில் விஷப்பை இணைந்திருக்கும். இதனால் இரையைக் கடித்து நஞ்சைப் பாய்ச்சி இரையைச் செயலிழக்கச் செய்து விடும். சிலந்தியால் இரையை விழுங்க முடியாது. இரையின் மீது நஞ்சையும் உமிழ்நீரையும் பாய்ச்சி வைத்திருக்கும். சிறிது நேரத்தில் இரை கூழ் போல் ஆகிவிடும். நாம் இளநீர் உறிஞ்சுவதுபோல் சிலந்தி இரையை உறிஞ்சிக் குடித்து விடும். எல்லா சிலந்திகளுக்கும்

• வளை தோண்டும் சிலந்தி



• நீர்ச்சிலந்தி



எஸ். சுஜாதா



நச்சு சுரப்பிகள் உண்டு. ஒரு சில சிலந்திகள் கடுமையான விஷமுடையவை.

சிலந்திகளின் சிறப்பே அவை பின்னும் வலைகள்தான்! வலை பின்னப் பயன்படும் பிசின் இதன் அடிவயிற்றில் உள்ள சுரப்பிகளிலிருந்து வெளிவருகிறது. வெளிவரும் போது இது திரவமாக இருக்கும். காற்றுப் பட்டதும் திடப் பொருளாகி விடும். இதில் மூன்று வகை பிசின்கள் சுரக்கின்றன. ஒன்று ஒட்டாத வகை. இதைத்தான் வலையின் வெளிப்புறச் சட்டங்களுக்கும் குறுக்குச் சட்டங்களுக்கும் சிலந்தி பயன்படுத்தும். இரண்டாவது வகை ஒட்டும் தன்மையுடையது. இதைக் கொண்டுதான் இழைகளைப் பின்னும். இதில் தான் பூச்சிகள் சிக்கிக் கொண்டு சிலந்திக்கு இரையாகும். மூன்றாவது வகை இரைகளைத் திரவப் பொருளாக்கப் பயன்படும்.

சிலந்திக்கு ஒட்டும் இழையும் ஒட்டாத இழையும் நன்றாகத் தெரியும். எனவே சிலந்தி வலைக்குள் சிக்கிக் கொள்ளாது. வலையைப் பின்னி முடித்த உடன் சிலந்தி வலைக்கு அடியிலோ, மூலையிலோ மறைவாக அமர்ந்து கொள்ளும். இரை வலையில் வந்து விழுந்தவுடன் வலை அதிரும். உடனே அதை உணர்ந்த சிலந்தி பாய்ந்து சென்று கடித்து விஷத்தைச் செலுத்தி விடும்.

ஆண் சிலந்தியை விடப் பெண் சிலந்தி பெரியதாக இருக்கும். ஆணும் பெண்ணும் குடும்பம் நடத்திய பிறகு பெண் சிலந்தி முட்டையிடும்.

சிலந்தியின் வயிற்றுப் பைக்குக் கீழே முட்டைப்பை இருக்கும். அதில் 200 முட்டைகள் வரை இடும். குஞ்சுகள் பைக்குள்ளேயே பொரிந்து, ஒன்றை ஒன்று சண்டையிட்டுச் சாப்பிட்டு வளரும். இறுதியில் பெரிதாக ஒரு சில சிலந்திகளே வெளிவரும். வெளிவந்த குஞ்சுகள் தாயின் வாயிலிருந்து உணவை உறிஞ்சிக் குடிக்கும். வலை பின்னுவதையும் இரை பிடிப்பதையும் கற்றுக் கொண்ட பிறகு தாயிடமிருந்து பிரிந்து சென்றுவிடும். பெரும்பாலும் சிலந்திகள் தனித்து வாழும் இயல்புடையவை. சில கூட்டமாக வாழ்வதும் உண்டு.

சில சிலந்திகள் வலைகட்டி சுவர்கள், மரங்கள் போன்ற பகுதிகளிலும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதுண்டு.

எல்லா சிலந்திகளும் வலை பின்னுவதில்லை. சில மண்ணைத் தோண்டி அதன் மேல் நூலால் கதவு அமைத்து பாதுக்காப்பாக வாழ்கின்றன. சில பகலில் இருட்டான இடங்களில் ஒளிந்து இருந்து விட்டு இரவில் இரை தேடுகின்றன.

இவற்றின் ரத்தம் நிறமில்லாதது. தண்ணீர் போன்று இருக்கும். தன் வாழ் நாளில் ஒன்பது முறை சிலந்தி தோலுரிக்கும். எதிரியிடமிருந்து தப்பிக்கும் போது கால்களை இழந்திருந்தால் அடுத்த முறை தோல் உரிக்கும் போது ஒடிந்த கால் வளர்ந்து விடும்.

சிலந்திகள் வாழுமிடத்திற்கேற்ப உடல் அமைப்பையும் நிறத்தையும் பெற்றுள்ளன. புல்வெளிகளில் வாழும் சிலந்தி புல் போன்ற உருவத்திலும், மணலில் வாழும் சிலந்தி மணல் நிறத்திலும் மறைந்து வாழ்கின்றன. சில குச்சிப் போன்றும் முள் போன்ற உருவத்திலும்கூடக் காணப்படுகின்றன.

நீண்ட நாட்களுக்குக்கூட சிலந்திகளால் உணவின்றிப் பட்டினியாக வாழ முடியும். இவற்றின் உடலில் ஏராளமான உணவு சேமித்து வைக்கப்படுகிறது. இதனால் எந்தச் சூழ்நிலையையும் சுலபமாகச் சமாளித்துக் கொள்கின்றன.

சாதாரண சிலந்திகளின் ஆயுட்காலம் ஓராண்டுதான்! ஆனால் 15 முதல் 20 வருடங்கள் வாழக் கூடிய சிலந்திகளும் உண்டு.

கரும்கைம்பெண் சிலந்தி, ஓநாய்ச் சிலந்தி, கண்ணி வலைச் சிலந்தி- இந்தியாவில் காணப்படுகின்றன. கரும்கைம்பெண் சிலந்தியின் விஷம் கடுமையானது.

சிலந்தியின் வலையை எத்தனை முறை கலைத்தாலும் மீண்டும் மீண்டும் அதே போன்ற வலையைப் பொறுமையாகப் பின்னும்.

ஜூலை மாத க்விஸ் போட்டியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் சுலபமாக இருந்திருக்கின்றன என்பது பங்கு பெற்றவர்களின் எண்ணிக்கையிலிருந்தே தெரிகிறது. நிறையப் பேர் சரியான விடைகளை அளித்திருந்ததால் பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:

1. ஆர்.கே. தேவநாராயணன், வத்திராயிருப்பு, விருதுநகர் மாவட்டம்.

2. ஹெச். பாலு, போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

கோகுலம் க்விஸ் முடிவு



3. ஆர். கண்ணன், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.

4. எஸ். ஸ்ரீதேவி, சுந்தரப் பெருமாள் கோயில், தஞ்சை மாவட்டம்.

5. ஏ. இல்லை கோவிந்தன், பெரிய தச்சூர், திண்டிவனம் வட்டம்.

6. பி.பி. கிருஷ்ணபிரசாத், சேலம்.

7. சா.ஆ. பவித்ர செல்வி, கோபி செட்டிபாளையம்.

8. எம்.கே. பாலசுந்தர், விக்கிரம சிங்கபுரம், நெல்லை மாவட்டம்.

9. எஸ். காசி விஸ்வநாதன், பன்னிரண்டாம் வகுப்பு, பாரதியார் அரசு மேல்நிலைப்பள்ளி, வீரவநல்லூர்.

10. ஆர். கிருத்திகா, ராணிப்பேட்டை.

11. கு. பாக்கியலட்சுமி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, நொச்சலூர், செஞ்சி தாலுகா.

12. எம். கணேஷ், எடப்பாடி, சேலம் மாவட்டம்.

13. ச.வினோத்குமார், பத்தாம் வகுப்பு, பி.வி. மெட்ரிகுலேஷன் பள்ளி, போடி நாயக்கன்பட்டி.

14. கே. கனிமுத்து ராஜ், சங்கரபாண்டியபுரம், விருதுநகர் மாவட்டம்.

15. எஸ். எஸ். காயத்ரி, ஏழாம் வகுப்பு, திருச்சி.

16. ஜி. தமிழன்பன், ஐந்தாம் வகுப்பு, ஊ.ஒ. தொ.பள்ளி, வாழைப்பந்தல், வேலூர் மாவட்டம்.

17. பா. கவிதா, பத்தாம் வகுப்பு, ஸ்ரைன் வேளாங்கண்ணி பள்ளி, தி.நகர், சென்னை.

18. ரா. விக்னிஷா, ஏழாம் வகுப்பு, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஏரல், தூத்துக்குடி மாவட்டம்.

19. எம். தினேஷ், காஞ்சிபுரம்.

20. வி. சேஷாத்ரி, திருவேந்திரபுரம், கடலூர் மாவட்டம்.

சரியான விடை

1. புற்று நோயைக் குணப்படுத்த உதவும் கதிர்வீச்சு ரேடியம்.

2. ஐரோப்பாவையும் இங்கிலாந்தையும் பிரிக்கும் கால்வாய் இங்கிலீஸ் கால்வாய்.

3. கு[illegible] மன்னரின் புகழ் பாடும் நூல் கலிங்கத்துப் பரணி.

4. மரபியலின் தந்தை கிரிகர் மெண்டல்.

5. உலகின் மிக ஆழமான கடல் பசிபிக்.

6. இந்தியாவின் தேசிய விளையாட்டு ஹாக்கி.

7. உடல் பாதுகாப்புப் போர் வீரர்கள் இரத்த வெள்ளை அணுக்கள்.

8. பறக்கும் பாலூட்டி வௌவால்.

9. மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூர்.

10. பாரதரத்னா பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த அணுவியல் விஞ்ஞானி டாக்டர் அப்துல் கலாம்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.


ஆளப்பிறந்தவன்! 1

கதை: ராஜி   படம்: லலிதா




சிறுவர்கள் விளையாட்டை ஒருவன் கவனித்துக் கொண்டிருந்தான்.
திடீரென்று –
டேய் குப்பன் விழுந்துட்டான்!
குப்புற விழுந்த குப்பா. கரையேறு சீக்கிரம்.
சே! இந்த மோகன் பயலை என்ன செய்றேன் பார்!
தம்பி அந்த மோகன் யார்?
அடடா, அம்மா யாருன்னு கூடத் தெரியாது. பெரிய பலசாலியாம் எல்லாம் சும்மா.


அந்த இருவரில் மோகன் யாருன்னு எனக்குக் காட்டறியா தம்பி?
கொஞ்சம் அழகா, சிரிச்ச முகமா இருக்கானே, அவன்தான். நாளைக்குப் பிள்ளையார் கோயில் பக்கம் வாங்க. அடையாளம் காட்டறேன்.
இதை வச்சுக்க. நாளைக்கு மோகனை அடையாளம் காட்டினால் இன்னும் நிறையப் பொருள் தரேன்.
சரிங்க, ஐயா.
மறுநாள் பிள்ளையார் கோயில் அருகில்-
நான் அங்கு சென்று ஒரு பையனை இறுக்கக் கட்டிக்கிறேன். அவன்தான் மோகன்.


டேய் குப்பன் வர்றான்.
குப்பா! நேற்று ஆற்றில் விழுந்தியே அடிபடலையா?
டேய் குப்பா, விடுடா.
முடிஞ்சா உன்னை விடுவிச்சுக்கப் பார்க்கலாம்.
அப்போது பல வீரர்கள் குதிரைகளில் வந்தனர்.
மோகனைக் கதற கதற தூக்கிச் சென்றனர்.
யார் நீங்கள்? விடுங்க என்னை.

(தொடரும்)

4. நெருங்கும் மர்மம்!

அழகன் கிடந்த நிலை, பரிதாபகரமாக இருந்தது.


தரையில் மல்லாக்க விழுந்திருந்தான் அழகன். சுத்தமாக நினைவற்றிருந்தான். ஒரு கையும் காலும் விலுக் விலுக்கென்று வெட்டி இழுத்துக் கொண்டிருந்தது. வாயின் ஓரம் நுரை தள்ளத் தொடங்கியிருந்தது.

செந்தில் திகைத்துப் போய்ப் பார்த்தான்.

அழகன் எவ்வளவு கம்பீரமாக விளையாடிக் கொண்டிருந்தான்... திடுமென்று இவனுக்கு இப்படி ஒரு நிலைமையா?

சட்டென்று பிரமிப்பிலிருந்து விடுபட்டான் செந்தில். முதலில் அழகனைக் காப்பாற்றியாக வேண்டும். இப்போது என்ன செய்வது? நிச்சயம் பள்ளியினுள் ஆசிரியர் எவரேனும் இருப்பர். அவசர உதவிக்குச் சடுதியில் ஓடிப் போய் அழைத்து வரலாமா?

உடனேயே அந்த யோசனையை நிராகரித்தான். பள்ளிக் கட்டடங்கள் தொலைவில் உள்ளன. போய் வர நேரமாகும். அழகனுக்கு உதவி தேவை. அதுவும் அவசரமாக. அழகனை இந்த நிலையில் தனியே இப்படியே விட்டுச் செல்வதும் ஆபத்து.



அழகன், செந்தில், குமரன்!



என்ன செய்யலாம்? தவிப்புடன் யோசித்தான் செந்தில்.

அழகனுக்கு வந்திருப்பது காக்காய் வலிப்பு நோய் என்பது செந்திலுக்குப் புரிந்தது. இதற்கு இரும்புச் சாவியைக் கொடுத்தால் உடனே சரியாகும் என்று கேள்விப்பட்டிருக்கிறான்.

செந்திலிடம் தற்சமயம் இரும்புச்சாவி எதுவும் இல்லை. பரபரப்பாகச் சுற்றிலும் பார்த்தான். சிறிய இரும்புச் சாமான் எதுவுமே கண்ணில் படவில்லை. அழகன் இன்னமும் இழுத்துக் கொண்டிருந்தான். ஐயோ, அழகா! உன்னை எப்படி காப்பாற்றுவேன்?

சட்டென்று அந்த விஷயம் செந்திலுக்கு ஞாபகம் வந்தது! அவனுடைய ஜியாமட்ரி பாக்ஸ்! அதனுள் ஒரு பழைய அரையடி இரும்பு ஸ்கேல் இருக்கிறது! அது போதுமே!

சற்றும் தாமதிக்காமல் அந்த ஸ்கேலைப் பையிலிருந்து வெளியே எடுத்தான். லேசாக முனைகள் தேய்ந்து, எழுத்துகள் மங்கியிருந்த பழைய ஸ்கேல் அது. பாஸ்கருக்குப் புதிய பிளாஸ்டிக் ஸ்கேல் வாங்கியபோது, புதிய ஸ்கேலுக்காக அப்பாவிடம் கெஞ்சியதும், இந்த இரும்பு ஸ்கேல் இன்னும் தேயட்டும் என்று அவர் சொன்னதும் செந்திலுக்கு ஞாபகம் வந்தது.

அன்று அப்பா வாங்கித் தர மறுத்தது எவ்வளவு நல்லதாகப் போயிற்று!

அழகனின் கை விரல்களைப் பிரித்து, அந்த இரும்பு ஸ்கேலை உள்ளங்கையில் வைத்து, பிடித்துக் கொள்ளச் செய்தான்.

பின், செந்தில் தரையில் அமர்ந்தான். அழகனின் தலையைத் தன் மடி மீது வைத்துக்கொண்டான். வாட்டர் பாட்டிலிலிருந்து கொஞ்சம் தண்ணீர் எடுத்து, அழகனின் முகத்தை மெல்லத் துடைத்து விட்டான்.

அழகனுக்கு எவ்வளவு அழகான முகம்! எத்தனை மென்மையான, சிவந்த சருமம்! அந்தச் சூழ்நிலையிலும் செந்தில் வியந்தான். ஆனால், இவனுக்கும் இப்படி ஒரு குறை இருக்கிறதே...!

சற்று முன் அழகன் விளையாடும் போது, 'உன் படைப்பில் ஏன் இந்த ஓரவஞ்சனை?' என்று ஆண்டவனிடம் கோபமுடன் முறையிட்டதை நினைத்து செந்தில் வெட்கமுற்றான். இறைவன் எல்லோருக்கும் ஏதோ ஒரு குறை வைக்கத்தான் செய்கிறான்.

புத்தகம் எடுத்து மெல்ல அழகனுக்கு விசிறினான். இப்போது வலிப்பு சுத்தமாக

பத்மா ரவிசங்கர்

நின்றிருந்தது. இப்போதும் இரும்பு ஸ்கேலை அழகனின் கரம் இறுகப் பற்றியிருந்தது. ஒருமுறை விழித்துப் பார்த்து விட்டு, சோர்வுடன் கண் மூடிக் கொண்டான்.

அவன் வாயில் கொஞ்சம் நீர் புகட்டினான் செந்தில்.

சில நிமிடங்கள் சென்றதும், அழகன் முழுவதுமாகக் கண் விழித்தான். எழுந்திருக்க முயன்றான்.

"உடனே எழுந்திரிக்காதே அழகா!" என்று எச்சரித்தான் செந்தில்.

இரண்டு நிமிடம் கழிந்ததும், அழகன் மெதுவாக எழுந்து உட்கார்ந்தான். தன் குடிநீரைப் பருகத் தந்தான் செந்தில்.

செந்தில் கையைப் பற்றிக் கொண்ட அழகன் "தேங்ஸ்!" என்றான் தழுதழுக்கும் குரலில்.

"'தேங்ஸ் எல்லாம் சொல்லாதே. நான் ஒண்ணும் பெரிசாச் செய்யலையே. ஒருத்தருக்கொருத்தர் செய்யக் கூடிய சாதாரண உதவிதான் இது"

"இந்தச் சமயத்தில் நீ மட்டும் இங்கே இல்லைன்னா.... நினைச்சுப் பார்க்கவே நடுக்கமா இருக்கு!" என்று எழுந்துகொண்டான் அழகன். "நீ ஏன் இன்னும் வீட்டுக்குப் போகலை செந்தில்?"

"சும்மா ஹோம்வொர்க் பண்ணிக்கிட்டிருந்தேன்."

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

"இவர்தான் உனக்கு, கண் ஆபரேஷன் செய்த டாக்டர்..."

"முதற்கண் என் நன்றியை உங்களுக்குத் தெரிவிக்கிறேன், டாக்டர்!"

— எஸ். மோகன் மனோகர்



"கடவுள்தான் உன்னை இன்னிக்கு இங்க தாமதப்படுத்தித் தங்க வெச்சிருக்கார் செந்தில்!"

"சரி! நீ ஏன் தனியா இவ்வளவு நேரம் பயிற்சி செய்துக்கிட்டிருந்தே?"

"பாஸ்கட் பால் விளையாட்டுல ஒரு பெரிய சாம்பியன் ஆக ரொம்ப ஆசை..."

சொன்ன அழகனின் கண்கள் கனவுத் தீயில் பளபளத்ததைக் கவனித்தான் செந்தில்.

"வலிப்பு நோய் வர்ற என்னால சாம்பியன் ஆக முடியுமா செந்தில்?" ஏக்கம் தொனிக்கக் கேட்டான்.

செந்தில் நம்பிக்கை தரும் குரலில், "ஏன் முடியாது? காச நோய், கான்சர் பிடிச்சவங்ககூட மீண்டும் ஒலிம்பிக் சாம்பியன் ஆகியிருக்காங்க! எந்தச் சாதனை செய்யவும் தேவை தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும்தான்னு என் அம்மா சொல்வாங்க! உன்கிட்ட அந்த ரெண்டுமே இருக்கு. பாஸ்கட் பாலுக்குத் தேவையான நல்ல உயரமும் இருக்கு! நீ நிச்சயம் ஒரு சாம்பியன் ஆகப்போறே!" என்றான் உறுதியாக.

மகிழ்ந்த அழகன் முகம் மிகவும் பிரகாசமாகியிருந்தது.

"செந்தில்! உன்கிட்ட நேர்மை இருக்கு. மனிதாபிமானம் இருக்கு. நம்பிக்கை தர்ற பேச்சு இருக்கு. முதல் ரேங்க் எடுக்கிற படிப்பு இருக்கு. இந்த ஸ்கூல்ல சேர்ந்து உன்னைச் சந்திச்சதுல எனக்குச் சந்தோஷமாகவும் பெருமையாவும் இருக்கு."


அழகன் உண்மையாகவா சொல்கிறான்...! அவன் வரிசைப்படுத்திப் பட்டியலிட்டதில் செந்தில் பரவசமானான்.

"அன்னிக்கு என் பர்சைக் கொடுத்துட்டு ஏன் உடனே காணாமப் போயிட்டே?"

"ஓ... அதுவா? ஊர்ல, ஸ்கூல்ல என் கிட்ட யாருமே பேசறதில்லை; என்னை ஒரு பொருட்டாவே மதிக்கிறதில்லை. நானும் ஒதுங்கி ஓடிடறேன்! ஒளியறேன்!".

அழகன் இடைமறித்து, "ஏன்...ஏன் உன்னை எல்லோரும் ஒதுக்குறாங்க?" என்றான் புரியாமல்.

"உண்மையாவே உனக்குத் தெரியலையா?" என்றான் ஆச்சரியத்துடன்.



"தெரியலை செந்தில்!"

"அசிங்கமான என் முகம்தான் காரணம்!" என்றான் தலைகுனிந்தபடி. "அழகற்ற என்னை எவருக்குமே பிடிக்கறதில்லை."

"ப்பூ! இதான் காரணமா! உனக்கு ஒரு உண்மை சொல்லட்டுமா? நீ அழகற்ற வன்னு இதுவரை எனக்குத் தோணினதே இல்லை. இப்பவும் நீ சொல்லியும் கூட, எனக்கு அப்படி தோணலை."

சட்டென்று செந்தில் நெகிழ்ந்தான். அழகன், எவ்வளவு அப்பாவி! அழகில் அரைகுறையானவர்களே அலட்டல் ஆட்டம் போடும் இந்த உலகில், அழகன் ஓர் அபூர்வப் பிறவி! அவ்வளவு அழகுக்கு, சிறிதளவும் கர்வம் இல்லாமல் எப்படிப் பழகுகிறான்!

அழகன் தீவிரமான முகத்துடன், "எல்லோரும் உன்னை வெறுத்து ஒதுக்க்றாங்கன்னு இனிமே கவலைப்படாதே செந்தில். இனி, நீதான் என் நெருங்கிய நண்பன்!" என்றான் தீர்மானமாக.

அழகன் நேசமுடன் நீட்டிய கரத்தைப் பற்றிக் கொண்ட செந்தில் உச்சபட்ச மகிழ்ச்சியில் திளைத்தான். தனக்கு இப்படி ஓர் அதிர்ஷ்டமா...! தக்க சமயம் நல்ல நட்பு கிடைக்கும் என்ற அம்மாவின் வார்த்தை பலித்துவிட்டது! கடவுளே உனக்கு நன்றி!

இருவரும் பேசிக்கொண்டே நடந்தனர். நன்றாக இருட்டி விட்டிருந்தது. வழியில் வாகனப் போக்குவரத்தும் மக்கள் நடமாட்டமும் அதிகமிருந்தது.

"உன் வீடு வரைக்கும் வந்துட்டுப் போறேன்" என்றான் செந்தில்.

"வேணாம் செந்தில். உனக்கு எதுக்கு சிரமம்?"

"சிரமம் எதுவும் இல்லை. உன் வீடு வரை வந்தா, எனக்கு நிம்மதியா இருக்கும்."

திடுதிடுப்பென்று செந்தில் மனத்தினுள் சிவப்பு விளக்கு ஒன்று ஒளிர்ந்தது! அவன் புலன்கள் யாவும் உஷாராயின.

அந்த மலை உச்சியில் மர்மமாக ஏதோ நடப்பதை அறிந்த தினத்திலிருந்தே அவன் உள்ளுணர்வு அதீத எச்சரிக்கையில்தான் இருந்து வருகிறது. இப்போதும் அவன் உள்ளுணர்வு விழித்துக்கொண்டு ஏதோ ஆபத்து என்று எச்சரிக்கிறது. என்னவாக



ஓவியப்போட்டி

இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: அன்பும் கருணையும் கொண்ட காந்தி தாத்தா. காந்தியடிகளின் படத்தை வண்ணத்தில் வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். உங்கள் முகவரியை அவசியம் குறிப்பிட வேண்டும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசி தேதி: 20.9.2000

இருக்கும்!

அழகனிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டே காஷுவலாகத் திரும்பிப் பார்த்தான். பின்னால் நிறைய பேர்கள் தென்பட்டனர். அவர்களில், அந்த மர்ம ஆசாமி கலந்திருப்பானோ?

பின்னால் எங்கோ இருக்கிறான் என்று அவன் மனம் உறுதியாகக் கூறியது. யார் அவன்? எப்படி இருப்பான்? என்ன அவன் நோக்கம்? எவரையாவது வேவு பார்க்கிறானோ? குமரன் அருகில் இல்லையே என்று வருந்தினான் செந்தில். இந்நேரம் நாய் நிச்சயம் அவனை அடையாளம் கண்டுபிடித்திருக்கும்.

மலையின் மர்மங்களை அழகனிடம் சொல்லலாமா என்று ஒருகணம் யோசித்தான். சரியாக எதுவும் தெரியாமல், இப்போது சொல்ல வேண்டாம் என்று முடிவெடுத்தான். வீணாக அவனை எதற்குக் கலவரப்படுத்த வேண்டும்?

தொலைவில் நீளமான காம்பவுண்டு சுவரும், நெடிதுயர்ந்த மரங்களும் உள்ளே பெரிய பங்களாவும் தென்பட்டன. அது தான் அழகனின் இல்லம் என்பது சொல்லாமலே தெரிந்தது. அருகே நெருங்குகையில் விரிந்த பிரும்மாண்டம் செந்திலை ஆச்சரியப்படுத்தவில்லை. ஊரிலேயே பெரும் பணக்காரரும் அழகன் தொழிலக அதிபருமானவரின் வீடு வேறு எப்படி இருக்குமாம்... இவ்வளவு செல்வத்துக்குச் சொந்தக்காரனான அழகனின் எளிமை தான் அவனை ஆச்சரியப்படுத்தியது.

வெளி கேட் வாசலிலேயே நின்று விட்டான் செந்தில்.

"ஏன் நின்னுட்டே? உள்ளே வா செந்தில்."

"ம்கூம். ரொம்ப நேரமாயிடுச்சு. இன்னொரு நாள் வர்றேன்."

"சரி" என்ற அழகன், செந்தில் கரத்தைப் பற்றிக்கொண்டு "இன்னிக்கு எனக்கு ஒரு முக்கியமான நாள். உன் நட்பு கிடைச்சதை என் பாக்கியமா நினைக்கிறேன்" என்றான்.

வீடு திரும்புகையில், செந்தில் வானத்தில் மிதப்பது போல உணர்ந்தான். ஒரு தூய நட்பு அல்லவா அவனுக்குக் கிடைத்திருக்கிறது - காலையில் தமிழாசிரியர் சொன்னது போல! அழகனுக்குத்தான் எவ்வளவு பெரிய மனம்...!

வீட்டினுள் நுழைந்ததும் எதிர்ப்பட்ட தங்கைப் பாப்பாவைத் தூக்கித் தட்டாமாலை சுற்றினான் செந்தில்.

"என்ன செந்தில் ரொம்ப சந்தோஷமா இருக்கே?"

விசாரித்த அம்மாவிடம் நடந்ததைச் சொன்னான் செந்தில். அம்மா பூரணி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்.

மறுநாள், அம்மாவுக்குச் சற்று உடல் நிலை சரியில்லாமல் இருந்தது. பூரணி தடுத்தும், செந்தில் பிடிவாதமாக ஸ்கூல் செல்ல மறுத்து விட்டான். மாத்திரை வாங்கி வந்து தந்தான். அம்மாவுக்கு மிக உதவிகரமாக இருந்தான்.

மதியம் அம்மா இயல்பு நிலைக்கு வந்துவிட, செந்தில் உற்சாகமாகக் கிளம்பி மலை ஏறத் தொடங்கினான். இந்த முறை, மலை உச்சியில் -

செந்தில் கண்ணில் சிக்கினான் அந்த மர்ம ஆசாமி!

(தொடரும்)

அழ. வள்ளியப்பா
நினைவுப் பரிசுப்
போட்டியில் மூன்றாம்
பரிசு பெறும்
மூன்றாவது கவிதை!



கணினிக் காலம்!

கணினிக் காலம் நம்காலம் - மிகக்
கருத்தாய்க் கற்போம் நற்காலம்
பணிகள் பெருகும் வருங்காலம் - பெரும்
பயன்தர வாழ்வோம் நெடுங்காலம்!

மின்னல் வேகம் தன்னாடும் - உயர்
விண்ணும் நம்முன் விளையாடும்
கண்வழி மனமோ வளமாகும் - நம்
கல்வித் திறனோ களமாகும்!

தோழமை பெருகும் துணிவுவரும் - மனச்
சோர்வே இல்லை துணை வளரும்
'பேழை'யும் செல்வப் பெட்டகமே - சிறு
பிழை நிகழ்ந்தாலும் அற்புதமே!

பரிதி வேங்கடேசன், புதுவை.




எங்கள் ஊரில் நடந்தது!

துப்பாக்கி எதற்கு?

நாங்கள் கோவில் திருவிழாவிற்குச் சென்றிருந்தோம். கூட்டம் அதிகமாக இருந்ததால் பாதுகாப்பிற்கு போலீசார் துப்பாக்கியுடன் நின்றிருந்தார்கள். அதைப் பார்த்த என் தங்கை அப்பாவிடம் "இவர்கள் சுடுவதற்காகவா துப்பாக்கி வைத்திருக்கிறார்கள்?" என்றாள். என் அப்பாவோ "இல்லை சும்மாதான் வைத்திருக்கிறார்கள்" என்று கூறினார். உடனே தங்கை "சும்மாதான் வச்சிருப்பாங்களா? தீபாவளிக்குக் கூட சுட மாட்டாங்களா?" என்றாளே பார்க்கலாம்! எங்கள் குடும்பம் மட்டுமின்றி அருகில் நின்ற போலீஸ்காரர்கூட சிரித்து விட்டார்.


– வ. ரெங்காஷினி
பத்தாம் வகுப்பு,
மகளிர் மேல் நிலைப்பள்ளி,
நாகர்கோவில்.



என்னாச்சு?

அன்று ஞாயிற்றுக் கிழமை. எங்கள் தெரு மாணவர்கள் எல்லாம் திரண்டு என் நண்பன் வீட்டிற்குச் சென்று அவனை கிரிக்கெட் விளையாட அழைத்தோம். அவனுக்கு

யப்பா, யப்பா, ஐயப்பா!




பக்திப் பாடல்...


எங்களுக்கு மேல நத்தம் சாஸ்தா குலதெய்வம். விடுமுறையில் குல தெய்வ வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். எல்லோரும் சந்தோஷமாக வேனில் பயணம் செய்து கொண்டிருந்தோம். எங்கள் பாட்டி ''யாராவது ஐயப்பன் பாடல் – பக்திப் பாடல்களைப் பாடுங்களேன்'' என்றார். ஒவ்வொருவரும் யோசித்துக் கொண்டிருந்தனர். நான்கு வயது சித்திப் பெண் ''யப்பா, யப்பா ஐயப்பா, கண்ணுல காசைக் காட்டப்பா'' என்று பாட ஆரம்பித்தாள். பாட்டி, தாத்தாவைத் தவிர அனைவரும் சிரித்து விட்டோம். பாட்டி கோபத்துடன் ''ஐயப்பன் பாட்டுல என்ன சிரிப்பு?'' என்றார். நாங்கள் அது சினிமா பாட்டு என்று விளக்கியதும் ''வேறு யாராவது பாடுங்கள்'' என்றார்.

– பாளை பாலு, பாளையங்கோட்டை.

வேலை இருப்பதாகக் கூறி பேட்டையும் பந்தையும் கொடுத்து விளையாடச் சொன்னான். நாங்கள் விளையாட ஆரம்பித்த சிறிது நேரத்தில் மைதானத்திற்கு அருகில் உள்ள கிணற்றில் பந்து விழுந்துவிட்டது. நாங்கள் என்ன செய்வது என்று கவலையுடன் நின்றிருந்தோம். அப்போது நண்பன் வந்தான். நான் ''பந்து கிணற்றில் விழுந்துருச்சுடா'' என்றேன் கவலையுடன். ''என்னடா சொல்றே? அப்புறம் என்னாச்சு?'' என்று பதறினான் நண்பன். அருகில் இருந்தவர்கள் கிண்டலாக ''அப்புறம் நனைஞ்சுப் போயிடுச்சு'' என்றார்கள். அவன் முறைக்க மற்றவர்கள் சார்பாக நான் மன்னிப்புக் கேட்டேன்.

– எல். சீனிவாசன், தாரமங்கலம்.





பெயர் போனது?

திருநெல்வேலியிலிருந்து மாமா குடும்பத்துடன் வந்திருந்தார். மாமா பையன் படு சுட்டி. பையைத் திறந்து அல்வா பொட்டலத்தைப் பிரித்து எல்லோருக்கும் கொடுத்தான். சித்தப்பா அவனிடம் ''உங்கள் ஊர் அல்வாவிற்குப் பெயர் போனதுதானே?'' என்றார். ''இல்லை. இன்னும் எங்கள் ஊர் அல்வாவின் புகழ் எங்கும் நிலைச்சிருக்கு. நீங்க சொல்ற மாதிரி பெயர் எங்கும் போய் விடவில்லை'' என்றான். எல்லோரும் சிரித்தனர். பின் சித்தப்பா அவனை அழைத்து ''பெயர் போனது என்றால் போனது என்று அர்த்தமில்லை. பெயர் நிலைச்சிருக்குன்னுதான் அர்த்தம்'' என்றார். அவன் சிரித்தபடி அல்வாவை வாயில் போட்டுக் கொண்டான்.

– வி. ராஜசேகரன், ராஜபாளையம்.

இறக்கி விட்டால்...

மழை நேரம். தனியார் பள்ளியின் பேருந்து ஒன்று நீர் நிறைந்த பள்ளத்தில் மாட்டிக் கொண்டு விட்டது. மாணவர்கள் பயத்தில் அழ ஆரம்பித்தார்கள். நானும் மாமாவும் உதவிக்குச் சென்றோம். ஒவ்வொருவராய் ஜன்னல் வழியே தூக்கிக் கீழே இறக்கி விட்டோம். எல்லோரும் இறக்கி விடச் சொல்லி முட்டி மோதினார்கள். பேருந்திலிருந்த ரொம்பச் சிறிய பையன் கையை நீட்டி என் மாமாவிடம் '''அங்கிள்! என்னை உடனே இறக்கி விட்டால் ஃபைவ் ஸ்டார் சாக்லேட் தர்றேன்'' என்றான். எங்களுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. விளையாட்டிற்குச் சொல்கிறான் என்று நினைத்தோம். அவனை இறக்கி விட்டவுடனே பையிலிருந்து சாக்லேட் எடுத்துக் கொடுத்தான். மாமா ''நீ புத்திசாலிடா. நல்லா பிழைச்சுக்குவே. இதை நீயே



வச்சுக்க... '' என்று பாராட்டி அனுப்பி வைத்தார்.

– ப. கிருஷ்ணன், காயக்காடு,
புதுக்கோட்டை மாவட்டம்.



⌘ HARRY POTTER NOVELS

— Why are they successful?

⌘ THE SKELETON'S SLAP EXPERIENCE

IS BITING NAILS A BAD HABIT?

— Hello, Doctor!

Plus Strange Facts, Stories and Fun Puzzles

GOKULAM

SEPTEMBER 2000

The monthly magazine for children

Rs.6/-

17, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 97



நிலத்தில் பிறந்து நீரில் வாழ்வான் -அவன் யார்?

I 1) காதிலே கச்சேரி செய்வான்; கைதட்டினால் செத்து விடுவான்– அவன் யார்?

2) நெற்றிக் கண்ணால் ஒளியைப் பாய்ச்சுவான்; ஒற்றைக் கண்ணைத் திறந்து மூடுவான்– அவன் யார்?

3) வீட்டில் இருப்பான் ஒரு காவலாளி; வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி– அவர்கள் யார்?

4) ஒழுங்காய் செல்லும் ஊர்வலம்; காலால் மிதித்தால் கலவரம்–அது என்ன?

5) வாசலில் கிடக்கும் வண்ணத்துப் பூச்சி; மழையில் மறையும் வண்ணத்துப் பூச்சி–அது என்ன?

— எஸ். கவிதா,
ஏழாம் வகுப்பு,
திருநகர், திருநெல்வேலி .

II 1) உடலைச் சீவினால் தலையை நீட்டுவான்- அவன் யார்?

2) முதல் நாள் பெய்த மழைக்கு அடுத்த நாள் குடை பிடிப்பான். ஆனால் மடையன் அல்ல -அவன் யார்?

3) உயிரே இல்லாதவனுக்கு ஒற்றைக் காது-அவன் யார்?

4) அத்தை வீட்டுத் தோட்டத்தில் பச்சை முத்து தொங்குது, வாயில் எடுத்துப் போட்டால் கண் கலங்க வைக்குது-அது என்ன?

5) புதைத்த பின் உயிர் வரும்-அது என்ன?

- க. பூங்கொடி,
சித்தோடு, ஈரோடு.

III *1) நிலத்தில் பிறந்து நீரில் வாழ்வான் –அவன் யார்?*

2) எவ்வளவு அழகாக இருந்தாலும் கண நேரம்தான் பார்ப்பார்கள்–அவன் யார்?

3) கால் உண்டு அரை உண்டு முக்கால் இல்லை முழுசு உண்டு– அது என்ன?

— சு. துர்கா காத்யாயனி,
எட்டாம் வகுப்பு, 'அ' பிரிவு,
புனித அலாய்சியஸ் ம.மே.நி. பள்ளி,
தூத்துக்குடி.

IV 1) அம்மா தந்த தட்டிலே தண்ணீர் விட்டால் நிற்காது – அது என்ன?

2) மொட்டைத் தாத்தாவுக்குத் தலையில் இரட்டைப் பிளவு–அது என்ன?

3) கோணக் கொண்டை போட்டிருப்பாள். கொழுத்த மஞ்சள் பூசியிருப்பாள். வாயைத் திறந்தால் வெற்றிலைச் சிவப்போடு ஆயிரம் பற்கள்– அது என்ன?

4) ஓஹோ மரமே, உயர்ந்த மரமே, ஒரு இலை போட விதியற்ற மரமே!–அது என்ன?

5) பெட்டியைத் திறந்தால் பெருங்காயம் மணக்கும்–அது என்ன?

— கே. தமிழ்நிலா,
ஒன்பதாம் வகுப்பு 'அ' பிரிவு,
காந்தி கிராமம், கரூர்.

விடைகள்:

I 1) கொசு 2.கேமரா 3) பூட்டு. சாவி 4) எறும்பு வரிசை 5) வண்ணக் கோலம்

II 1) பென்சில் 2) காளான் 3) ஊசி 4) மிளகாய் 5) விதை.

III 1) கப்பல் 2) கடிகாரம் 3) ஆண்டுத் தேர்வு

IV 1) தாமரை இலை 2) பட்டாணி 3) மாதுளம் பழம் 4) திருக்கள்ளிச்செடி 5) பலாப்பழம்


தேவகிரி என்ற மலையின் அருகில் உள்ள ஒரு கிராமத்தில் பாரத்வாஜ கோத்திரத்தில் பிறந்தவர் சுதன்மா. அவரது மனைவியின் பெயர் சுதேகை. இருவரும் பெரும் சிவ பக்தர்கள். எல்லாச் செல்வங்களும் இருந்தும் புத்திர பாக்கியம் இல்லாமல் வருந்தினர்.

குசுமைக்கு அருளிய

சுதேகையின் மனம் வருந்தியது. சுதன்மாவை தினம் நச்சரிக்கத் தொடங்கினாள்.

“பித்ருக்கள் சாபத்துக்கு நான் ஆளாகப் போகிறேன். நான்தான் பாக்கியமற்றவள். தங்கள் ஜாதகத்தில் சந்தான பாக்கியம் இருப்பதாகச் சொல்கிறார்களே! என் தமையன் மகள் குசுமை பரம சாது. அத்தையும் மருமகளும் எங்காவது சண்டை போடுவார்களா? அயல் பெண் வந்தால் தானே பிரச்னை!'' என்றெல்லாம் வாதிட்டாள்.

அவள் தொல்லை தாங்காமல் திருமணத்துக்குச் சம்மதித்தார் சுதன்மா. குசுமையை அன்போடு நடத்தினாள் சுதேகை.



சுதன்மா மண்ணால் நூற்று எட்டு லிங்கங்கள் அமைத்து தினமும் பூஜை செய்து அதை அருகிலுள்ள தடாகத்தில் விட்டு வரும்படி குசுமையிடம் சொல்லி இருந்தார். குசுமையும் கணவன் சொல் மாறாமல் செய்து வந்தாள். இப்படியே அவள் பூஜித்த லிங்கங்களின் எண்ணிக்கை லட்சமானதும் குசுமை கருவுற்றாள். அவளைச் சுதன்மா

குசுமேஸ்வரன்!

ஆர். பொன்னம்மாள்

வும் சுதேகையும் அன்புடன் கவனித்துக் கொண்டனர்.

உரிய காலத்தில் குகமைக்கு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு 'சுப்பிரியன்' என்று பெயர் சூட்டினார்கள்.

சிவபூஜை செய்த புண்ணியத்தால் சுப்பிரியன் சிவபக்தி உடையவனாகவும் நற்குண நற்செய்கைகள் கொண்டவனாகவும் இருந்தான்.

வேதங்களெல்லாம் சுலபமாய் கற்றுக் கொண்டு தந்தைக்கு உதவியாய் அவனும் போதிக்கலானான்.



"சுதன்மா! இன்னும் சீக்கிரமாகத் திருமணம் செய்து கொண்டிருந்தால் இதற்குள் மருமகள் வந்திருப்பாள்''



"தொலைந்து போன நூற்றி ஒரு ரூபாயில் நூறு ரூபாய் கிடைச்சிடுச்சே, அப்புறம் ஏன் ஒரு ரூபாய் நாணயத்தைப் போய் விடாமல் தேடிக் கிட்டு இருக்கே?"

"வாழ்க்கையில் எதை இழந்தாலும் நாணயத்தை மட்டும் இழக்கக் கூடாதுன்னு எங்க அப்பா சொல்லியிருக்காரே!"

—சு. தட்சிணாமூர்த்தி

என்று ஒரு நண்பர் சுதன்மாவைக் கேலி செய்வதைக் கேட்டுக்கொண்டே வந்தாள் சுதேகை. அவளுக்கு மனம் சுருங்கியது.

"சுப்பிரியனுக்கு சீக்கிரம் கல்யாணம் ஆகி குழந்தை பிறக்கட்டும், நாங்கள் சீமந்தம் செய்கிறோம். கட்டாயம் குசுமையோடு வா" என்று ரிஷி பத்தினி ஒருத்தி அழைக்கவும் 'சுருக்'கென்று தைத்தது சுதேகைக்கு.

மலடி என்று தன்னை உலகம் ஒதுக்குவதைக் கண்டு மனம் கொந்தளித்தாள். குசுமையோடு சாப்பிடுவதில்லை! எதற்கெடுத்தாலும் சண்டை. அழகிய பெண்ணைப் பெற்றவர்கள் நான், நீ என்று சுப்ரியனுக்குப் பெண் கொடுக்கப் போட்டியிட்டனர்.

"இவங்க மாமியார்; இவங்க மூத்தாள்..." என்று பெண்ணிடம் அறிமுகப்படுத்தும்போது எரிச்சல் மூண்டது. "குசும்மா, உங்களுக்குப் பிடிச்சிருக்கா! பிள்ளையோட மனசு அம்மாவுக்குத் தானே தெரியும்'' என்பன போன்ற பேச்சுகளைப் பேசக் கூடாதென்று அயல் மனிதர்களைத் தடை செய்ய முடியுமா?

கடைசியில் ஒருவாறாக திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

சதா கோபப்படும் சுதேகையிடம் அப்பெண் பேசவே பயந்தாள். குசுமையும் புதுமருமகளும் இழைவது சுதேகைக்கு மேலும் பொறாமையை வளர்த்தது.

மருமகள் கருவுற வேண்டுமென்று முன்புபோல் 108 மண் சிவலிங்கங்கள் அமைத்து தடாகத்தில் விட்டாள் குசுமை.

"ஐயோ! அம்மா இந்த அநியாயத்தைப் பாருங்களேன்! உங்கள் பிள்ளையின் படுக்கையெல்லாம் ரத்தமாக இருக்கிறது! ஐயையோ! இங்கே ஒரு விரலும் கிடக்கிறதே'' என்று அலறினாள் மருமகள்.

சுதேகை ஓடி வந்தாள்.

போலியாக வயிற்றிலும், வாயிலும் அடித்துக்கொண்டு ''குலத்துக்கு ஒரு கொடியாக இருந்தவனை எந்தப் பாவியோ கொன்று விட்டானே! சடலமும் கிடைக்கவில்லையே! இந்த அநியாயத்தைக் கேட்காமல் என்ன சிவபூஜை வேண்டிக் கிடக்கிறது! வீட்டுக்கு வந்த பெண்ணின் கண்ணீரைத் துடைப்பது நமது கடமை அல்லவா'' என்று அலறினாள்.

பூஜை முடிந்து வந்த சுதன்மா, "சிவ நிந்தனை செய்யாதே! பிள்ளையைக் கொடுத்தவனுக்கு அதை எப்படி காப்பாற்றுவது என்று தெரியும். காப்பாற்றா விட்டால் நாம் முற் பிறவியில் செய்த பாவம்" என்றார்.

வெட்டிப் போட்டவளே அவள்தான் என்று அறியாமல் சமாதானம் சொன்னார் சுதன்மா. வழக்கம்போல் பூஜை செய்த லிங்கங்களை தடாகத்தில் விட்ட குசுமை, "பேரன் பிறக்க பூஜை செய்தேன். பிள்ளையையும் பறித்துக் கொள்ள என்ன பாவம் செய்தேன்'' என்று கண்ணீர் விட்டாள்.

அப்போது நடுக்குளத்திலிருந்து ''அம்மா!'' என்றபடி எழுந்து வந்தான் சுப்பிரியன். குசுமையும் அவள் மருமகளும் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை.

''மகனே! என்ன நடந்தது?'' என்று

விசாரித்தார் சுதன்மா.

"அப்பா! நல்ல உறக்கத்தில் மூச்சு முட்டியது. முகம் ஒரு கனத்த போர்வையால் மூடப்பட்டிருந்தது. கழுத்தில் கத்திக் குத்து விழுந்ததும் நினைவிழந்தேன். இப்போதுதான் குளத்திலிருந்து மீண்டும் வருகிறேன்" என்றான் மைந்தன்.

சுதேகை தான் இனி உயிரோடு இருந்தால் அவமானம் என்று தற்கொலை செய்து கொள்ள முனைந்தாள். சுதன்மா அவளைத் தடுத்து, "சுதேகா! இரண்டாம் திருமணம் வேண்டாமென்று தடுத்தது இப்படியெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்த்துதான்! வம்சம் விளங்க நீயே திருமணம் செய்து வைத்துவிட்டு இன்று கிளைகளை வெட்டலாமா?'' என்று ஆறுதல் கூறினார்.

அப்போது சிவபெருமான் தோன்றி, "சுதன்மா! தடுக்காதே! அவள் வதைக் கப்பட வேண்டியவள்தான். கருணை வடிவான பெண் கூசாமல் பிள்ளையை வெட்டுகிறாள் என்றால் அவள் அரக்கி" என்று சுதேகையின் மீது சூலத்தை வீச முனைந்தார்.

குசுமை ஓடி வந்து சிவன் பாதத்தில் விழுந்தாள். "ஸ்வாமி! என் அத்தைக்கு நல்ல புத்தியைக் கொடுங்கள். அவள் பாவங்களை நீக்குங்கள்" என்று வேண்டினாள்.

குசுமையின் நற்குணத்தை எண்ணி கண்ணீர் சிந்தினாள் சுதேகை.

"உனக்காக அவளை விட்டு விடுகிறேன். குசுமை! உனக்குச் சீக்கிரமே பேரன் பிறப்பான். உன் வம்சம் நசியாது. ஆல் போல் தழைத்திருக்கும். இன்னொரு வரம் கேள்" என்றார் கைலாச நாதர்.


"சர்வேஸ்வரா! தாங்கள் என் போன்ற பக்தர்களைக் காக்க இங்கேயே எழுந்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.

"உன் நற்குணமும் பக்தியும் புகழ் பெற உன் பெயராலேயே குசுமேஸ்வரன் என்ற நாமத்தோடு லட்சக்கணக்கில் சிவலிங்கங்களைக் கரைத்த இந்தத் தடாகத்தையே இருப்பிடமாக்கி ஜோதிர்லிங்கமாக அருள் பாலிக்கிறேன்'' என்று கூறி மறைந்தார்.

பன்னிரண்டாவது ஜோதிர் லிங்கமான குசுமேஸ்வர லிங்கம் கோபத்தை அடக்கிக் கொண்டதால் சிவப்பாக இருக்கிறது. 'எல்லோரா'வுக்கு அருகில் உள்ளது.

குறுக்கெழுத்துப் புதிர் விடை!

1 க	ர்	2 நா	ட	3 க	ம்	■	4 மீ	ன்
ந்	■	க்	■	த்	■	5 ச	■	ழ
த	■	கு	■	த	■	ண	■	யா
ன்	6 கூ	■	7 பூ	ரி	■	ல்	ர	8 வி
■	■	■	னை	■	9 கே	■	■	■
10 அ	ர	ளி	■	11 ம	ணி	■	சை	12 அ
க	■	ர	■	ந்	■	13 ச	■	ச்
ப்	■	14 பு	■	தி	■	க்	■	ச
15 பை	சா	■	16 ச	ரி	த்	தி	ர	ம்



விட்டு, விட்டுக் கண்ணாடி அணிவது நல்லதா?

டாக்டர். கு. கணேசன்

● காழி.ஆர். சீதாராமன், தென்பாதி.

? விட்டு விட்டுக் கண்ணாடி அணிவது கண்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா, டாக்டர்?

! பாதிப்பு ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. கண்ணின் பார்வைத்திறன் குறையும் போது விழிலென்ஸுக்கு உதவுவதற்காகத்தான் கண்ணாடி அணியச் சொல்கிறார்கள், மருத்துவர்கள். அந்தக் கண்ணாடியை விட்டு விட்டு அணிந்தால் பார்வைத்திறன் மேலும் குறைந்து விடும். அப்போது ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்ட கண்ணாடியை விட அதிகத் திறனுள்ள (power) கண்ணாடியைத்தான் அணிய வேண்டியது வரும். இதையும் தொடர்ந்து அணிந்தால்தான் பார்வை சரியாக இருக்கும். இதற்கு, முதலில் பரிந்துரைக்கப்பட்ட கண்ணாடியையே தொடர்ந்து அணிந்து விட்டால் கண் பாதிப்பும் அதிகமாகாது. மருத்துவச் செலவும் ஏற்படாது. சரியா, சீதாராமன்?





● இ.சே. அறிவழகன், இருப்புலிவனம்.

? மாரடைப்பு, இதயச் செயலிழப்பு இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

! இதயத் தசையில் ஒரு பகுதி போதிய பிராணவாயு கிடைக்காமல் சிதைந்து போகும் போது ஏற்படுவது, மாரடைப்பு (Heart Attack). இதயத் தசைகளுக்கு ரத்தம் கொண்டு வரும் கரோனரித் தமனிகளில் கொழுப்புப் படிந்து அடைத்துக் கொள்ளும் போதும், அவற்றில் ரத்தம் உறைந்து கட்டியாகி விடும் போதும் மாரடைப்பு ஏற்படும். நடுமார்பில் வலி உண்டாவது, அது கழுத்து, தாடை, இரு கைகள், மணிக்கட்டு வரை பரவுவது, உடல் வியர்ப்பது, மயக்கம் வருவது போன்றவை மாரடைப்புக்கு அறிகுறிகள். இந்த நோய்க்கு உடனடியாகச் சிகிச்சை பெறாவிட்டால் உயிருக்கு ஆபத்து ஏற்பட அதிக வாய்ப்புண்டு. இதயச் செயலிழப்பு (Heart Failure) என்பது உயர் ரத்த அழுத்தத்தின் விளைவாக வருவது. இதில் இதயம் விரிந்து, நலிவடையும். இதனால் இளைப்பு, மூச்சுத்திணறல் போன்ற சுவாசக் கோளாறுகள் மற்றும் கால் வீக்கம், முக வீக்கம் முதலியன தோன்றுகின்றன. இதில் உடனடி மரணம் ஏற்படாது.



● எஸ். நாகராஜன், மேலப்பாதி.

? ரத்தப் பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை போன்றவற்றை அதிகாலையில், வெறும் வயிற்றில் செய்வது ஏன்?

! பொதுவாக ரத்தத்தில் சர்க்கரையின் அளவைப் பரிசோதிப்பதற்கு இம்முறையைப் பின்பற்றுவார்கள். காரணம், உணவு உண்டபின் 12 மணி நேர இடைவெளிக்குப் பிறகு இந்தப் பரிசோதனைகளைச் செய்ய வேண்டும். அப்போது ரத்தத்தில் சர்க்கரையின் அளவு 120 மி.கி.க்குக் கீழும், சிறுநீரில் சர்க்கரை இல்லை என்றும் இருந்தால் அது

கேட்கட்டுமா டாக்டர்?

இயல்பு அளவு. இந்த அளவு அதிகமாக இருந்தால் அந்த நபருக்குச் சர்க்கரை நோய் இருக்க வாய்ப்புள்ளது என்று எடுத்துக் கொள்ளலாம். இந்த இடைவெளியில் பரிசோதனைக்கு உள்ளாகும் நபர் ஏதேனும் உண்டு விட்டால் இந்த அளவுகள் அதிகமாகி விடும்.

அப்பொழுது உணவு உண்டதால் சர்க்கரையின் அளவு அதிகமானதா, நோயின் காரணமாக அதிகமானதா என்ற ஐயம் எழும். இதனைத் தவிர்க்கவே இவ்வாறு பரிசோதிக்கிறார்கள்.



● **எம்.கே. நாகலட்சுமி, விக்கிரமசிங்கபுரம்.**

? மயோபதி என்றால் என்ன?


! மயோபதி (Myopathy) என்பது எலும்புத் தசைகளைப் பாதிக்கின்ற ஒரு பரம்பரை நோய். மரபணுக்களில் உள்ள குறைபாடு காரணமாக இது ஏற்படுகிறது. இக்கோளாறு உள்ளவர்களின் தசைகளில் வளர்சிதை மாற்றப் பணிகள் (Metabolisim) சரிவர நடப்பதில்லை. இதனால் தசைகள் வலுவிழந்து, இயக்கம் குறைந்து, சூம்பிப் போகின்றன. இந்த நோய் எந்த உறுப்பில் எந்தத் தசையைப் பாதிக்கிறதோ அதைப் பொருத்து நோயின் தன்மை வேறுபடும். இந்த நோய்க்கு மருத்துவச் சிகிச்சை அவ்வளவாகப் பயன் தராது. இயன்முறை சிகிச்சை (Physiotherapy) ஓரளவிற்கு உதவும்.




● **ஆர்.வி. மயில்வாகனன்,**
மதுரை – 7.

? உடலுக்கு உடற்பயிற்சி ஏன் அவசியம்? அதனால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன? எந்த உடற்பயிற்சி உடலுக்கு மிகவும் நல்லது?

! உடல் உறுப்புகள் நலமாகச் செயல் புரிவதற்கும் உடற் தசைகள் வலுப்பெறுவதற்கும் உடற் பகுதி (Physical Fitness) மேம்படுவதற்கும் உடற்பயிற்சிகள் அவசியமாகின்றன. சிறு வயதிலிருந்தே முறையாக உடற்பயிற்சிகளைச் செய்து வர வேண்டும். இதனால் பல நன்மைகள் நமக்குக் கிடைக்கின்றன. முக்கியமாக, இதயத்திற்கு அதிக ரத்தத்தைச் செலுத்த உதவுகின்றன. சுவாசப் பைகளுக்கு அதிக பிராண வாயுவைத் தருகின்றன. உடற்தசைகள் ரத்தத்திலிருந்து அதிகப் பிராண வாயுவைப் பெற்றுக் கொள்கின்றன. வளர்சிதை மாற்றப் பணிகள் சரியாக நடக்க உதவுகின்றன. உடற்கழிவுகள் முறையாக வெளியேறத் துணை செய்கின்றன. தசைகள் வலுப்பெறுகின்றன. மூளை உற்சாகம் பெறுகிறது. இவை மட்டுமின்றி உயர் ரத்த அழுத்தம், ரத்தக் கொழுப்பு, மன உளைச்சல் முதலியவற்றைக் குறைப்பதோடு உடல் எடையையும் சர்க்கரை நோயையும் கட்டுப்படுத்தவும் மாரடைப்பைத் தவிர்க்கவும் உடற்பயிற்சிகள் உதவுகின்றன. மொத்தத்தில் இவை நம் உடல்நல உணர்வை அதிகரிப்பதோடு வாழ்நாளையும் அதிகரிக்கச் செய்கின்றன. அடுத்து, உடற்பயிற்சிகளில் ஏரோபிக் (Aerobic), ஐசோடானிக் (Isotonic) ஐசோமெட்ரிக் (Isometric) காலிஸ்தெனிக்ஸ் (Callisthenics) பேசிவ் (Passive) என்று பல வகைகள் உள்ளன. இவற்றில் ஏரோபிக் உடற்பயிற்சிகள் மிகவும் நல்லவை. ஓட்டம், வேகநடை, நீச்சல், கைப்பந்து மற்றும் கூடைப்பந்து போன்ற பள்ளி விளையாட்டுகள் ஏரோபிக் வகையைச் சார்ந்தவை.



எங்கள் ஊருக்கு வாருங்கள்!



• தியாகராஜசுவாமி கோயில்

எங்கும் பச்சை



எங்கள் ஊர் திருத்துறைப்பூண்டிக்கு அருகிலுள்ள கொக்காலடி கிராமமாகும். அனைத்து தேவைகளுக்கும் நாங்கள் திருத்துறைப் பூண்டியை நாடிச் செல்வதால் அதுவும் எங்கள் ஊரே. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளில் இதுவும் ஒன்று. திரு + உறை + பூண்டி அதாவது திருமகள் வாழும் இடம் என்று பொருள். ஒரு காலத்தில் இவ்வூர் கடலால் சூழப்பட்ட நகரமாகவும் முக்கியமான துறைமுகமாகவும் இருந்ததால் இதை திரு + துறை + பூண்டி என்று அழைத்ததாகவும் கூறுவோர் உண்டு. அதற்கு ஆதாரமாக இவ்வூரில் மண்ணைத் தோண்டினால் ஒரு குறிப்பிட்ட ஆழத்துக்கு மேல் உப்பு நீரே கிடைக்கிறது. எங்கள் ஊரில் ஔஷதீஸ்வரர் ஆலயம் தொன்மை வாய்ந்தது.

அருகிலுள்ள வரதராஜ பெருமாள் கோவிலும், அதில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 16 அடி உயர வைராக்கிய ஆஞ்சநேயரும் பக்தர்கள் குறைதீர்த்து வரமளிக்கும் புண்ணிய மூர்த்திகளாவர். எங்கள் ஊருக்கு சென்னையிலிருந்தது வர எக்ஸ்பிரஸ் ரயில் மற்றும் பேருந்து வசதிகள் உண்டு. மேலும் திருவாரூர், வேளாங்கன்னி, நாகூர், பட்டுக்கோட்டை, வேதாரண்யம் ஆகிய ஊர்களுக்கு இணைப்பு ஊராக உள்ளதால் இது சிறந்த வியாபார மையமாகவும் திகழ்கிறது. வேதாரண்யத்தில் நடந்த உப்பு சத்தியாகிரகத்திற்குச் செல்லும்போது இந்த ஊர் வரை ரயிலில் வந்துபின் பாதயாத்திரை புறப்பட்டனர்.

கிறிஸ்தவர்களின் புனிதத்தலமான வேளாங்கன்னி, முஸ்லீம்களின் புனிதத்தலமான நாகூர், கமலாயமும் தியாகராஜ சுவாமி திருக்கோவிலும் உள்ள திருவாரூர் ஆகியவை அருகிலேயே உள்ளன. இது தவிர தஞ்சாவூர், பறவைகள் சரணாலயமான உதயமார்த்தண்டபுரம், உப்புக் காய்ச்சிய இடமான வேதாரண்யம், ராமர்பாதம் உள்ள கோடியக்கரை முதலியவை எங்கள் ஊரைச் சுற்றியுள்ள பார்க்க வேண்டிய இடங்களாகும். மேலும் நாகை துறைமுகம் எங்கள் ஊரிலிருந்து ஒரு மணி நேரப் பயணத்தில் தான் உள்ளது.

வயல்வெளிகள்!

ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட (1942) ஆண்கள் மேல்நிலைப்பள்ளியும், பல மாணவியர் சாதனையாளராக வாழ்க்கையில் வெற்றி பெற அடித்தளம் அமைத்த புனித தெரசா பெண்கள் மேல்நிலைப் பள்ளியும் எங்கள் ஊரின் கல்வித் தாகத்தைத் தணிப்பவை. எங்கள் ஊரில் பல்வேறு ஊர் மக்களும் வந்து கூடும் வெள்ளிக் கிழமை



சந்தை புகழ்பெற்றது. மேலும் 24 மணி நேரமும் இடைவிடாது பொங்கி வரும் வெந்நீர் ஊற்று எங்கள் ஊர் சந்தைப் பேட்டையில் உள்ளது. இதில் குளித்தால் தோல் வியாதி தீரும் என்பது நம்பிக்கை.

எங்கள் ஊரில் முக்கிய அம்சம் மதச் சார்பின்மை. இங்கு ரம்ஜான் நோன்பின் போது மாலைத் தொழுகை ஆரம்பிக்கும் நேரத்தில் மார்கழி மாதத்திற்காக கோவிலில் போடப்பட்டிருக்கும் பாடல்கள் நிறுத்தப்பட்டு விடும். அதேபோல கோவில் தீமிதி உற்சவத் தின்போது தண்ணீர் பந்தல் வைக்கும் பொறுப்பை இன்முகத்தோடு செய்பவர்கள் இங்குள்ள முஸ்லீம் சகோதரர்கள்.

மேலும் கிறிஸ்துமஸ் சமயங்களில் ஆயிரக்கணக்கான இந்துக்களும் சேர்ந்து வேளாங்கன்னி சென்று வழிபடுவது கண் கொள்ளாக் காட்சியாகும். திரௌபதிக் கென்று அமைந்த திரௌபதி அம்மன் கோவிலும் எங்கள் ஊரில் உண்டு. எங்கள் ஊரைச் சுற்றிலும் அழகிய வயல்கள், அருமையான தோப்புகள், குளிர்ந்த குளங்கள், இன்முகத்தோடு உபசரிக்கும் கிராம மக்கள் அனைத்தையும் காண ஆசையா? உடனே வாருங்கள். எங்கள் விருந்தோம்பலை ஏற்றுக் கொள்ளுங்கள்!

– லெட்சுமி,
கொக்காலடி,
திருத்துறைப்பூண்டி.



கட்டபொம்மன், பாரதியார் போன்றவர்கள் தோன்றிய திருநெல்வேலியே எங்கள் சொந்த ஊர். திருநெல்வேலியில் உள்ள சுந்தரபாண்டிபுரம் என்ற அழகிய கிராமம்தான் எங்கள் சொந்த கிராமம். பல காரணங்களால் சென்னைக்கு வந்தாலும் நாங்கள் வருடா வருடம் அங்கு சென்று வருவோம். சுந்தரபாண்டிபுரம் எழில் நிறைந்த கிராமம் என்று உங்

களுக்கே தெரிந்திருக்கும்.

'ரோஜா' திரைப்படத்தில் தோன்றிய வயல்கள் சுந்தரபாண்டிபுரத்தின் வயற்காடுகள்தான்!

சாஸ்தா என்று அழைக்கப்படும் ஐயப்பன் கோவில் அங்குள்ளது. அவர்தான் எங்கள் குலதெய்வம். மனிதரில் ஊனமுற்றோரைப் பார்த்திருக்கிறோம். ஆனால் எங்கள் குலதெய்வம் சாஸ்தாவிற்கும் ஒரு கை கிடையாது.

அதற்கு ஒரு புராணமும் உண்டு. முன்பு வயலில் வேலைகள் செய்து கொண்டிருந்தவர்களுக்கிடையே சண்டை வந்ததில் இவர் கை வெட்டுப்பட்டு விட்டது என்று சிலர் கூறுகின்றனர்.

அதைக் கண்டு எங்கள் முன்னோர்கள் சிலையை மாற்ற எண்ணினார்கள். ஆனால் சாஸ்தா, கனவில் தோன்றி, 'உங்கள் குழந்தைக்கு கை ஒடிந்து விட்டால் உங்கள் குழந்தையை மாற்றி விடுவீர்களா?' என்று கேட்டிருக்கிறார்.

எங்கள் முன்னோர்களுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. சிலையை மாற்றவும் கூடாது. அதை அப்படியே விட்டு வைக்கவும் மனம் ஒப்பவில்லை. அவர்கள் வெள்ளிக் கவசத்தைச் செய்து சாத்தினார்கள்.

ஒரு கை இல்லாவிட்டாலும் எங்கள் சாஸ்தா வேண்டியதைக் கொடுப்பவர் என்பதைச் சொல்லிக் கொள்ள நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

நகரக் காற்று மாசுபட்டு கிடக்கும் இந்தக் காலத்தில் தூய்மையான காற்றும் இயற்கைக் காட்சிகளும் எங்கள் சாஸ்தாவும் உள்ள கிராமத்திற்கு வாருங்கள்!

– பா. கவிதா, பத்தாம் வகுப்பு,
ஸ்ரைன் வேளாங்கன்னி பள்ளி,
தி. நகர், சென்னை – 17.

''ஒரு ஆளுக்கு ஜோசியம் பார்க்கப் பத்து ரூபாய். நீங்க மட்டும் அஞ்சு ரூபாய் தர்றீங்களே?''

''காய்ச்சல் வந்ததிலேயிருந்து நான் பாதி ஆளா இளைச்சிட்டேங்க!''

– கலை நண்பன்.



எங்கள் ஊர் தேனி மாவட்டத்தில் உள்ள சின்னமனூர். பாண்டியர் வீழ்ச்சிக்குப் பின் 17–ஆம் நூற்றாண்டில் மதுரையில் நிலைகொண்ட நாயக்கர் ஆட்சிக் காலத்தில் பாளைய – பட்டரசன் சின்னமநாயக்கன் பெயரால் சின்னமநாயக்கனூர் எனப் பெயரிடப்பட்டது. இச் செய்தி உத்தம பாளையம் ஞானம்மன் திருக்கோவிலில் உள்ள திரிசூலக் கல்லில் சின்னமநாயக்கனூர் எனப்பொறிக்கப்பட்டுள்ளதால் உறுதிப்படுகிறது. இப்பெயரே பின்னாளில் மருவி சின்னமனூர் ஆனது.

நாயக்கர் – நவாபு ஆட்சிகளின் வீழ்ச்சிக்குப் பின் எழுந்த வெள்ளையர் ஆட்சியில் இவ்வூர் ஊராட்சி மன்றமானது. இவ்வூர் குறித்து 945 பாடல்களைக் கொண்ட தலபுராணம் ஒன்றும் உண்டு.


100 ஆண்டுகளுக்கு முன் பெருமாள் கோவிலில் மடைப்பள்ளி கட்டுவதற்காகத் தோண்டிய போது இரு செப்பேட்டுத் தொகுதிகள் கிடைத்தன. இவை மூன்றாம் இராசசிம்ம பாண்டியனால் செய்யப்பட்டவை.


இந்த ஏடுகள் அன்றைய ஆங்கில அரசால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தற்போது இந்த ஏடுகள் மைசூர் நகர அருங்காட்சியகத்தில் இருப்பதாகத் தெரிகிறது. இவ்வேடுகளின் பொழிப்புரை தமிழ் வரலாற்றுக் கழகம் வெளியிட்டுள்ள 'பாண்டியன் செப்பேடுகள் பத்து' என்ற நூலில் உள்ளது.

கி.பி. 990 முதல் கி.பி. 1274 வரையிலான காலத்திற்கு உரிய தமிழக வரலாற்றை சின்னமனூர் பெருமாள், உடையார் திருப்பூலாந்துறை நாயனார் கோவில்களில் உள்ள ஏழு மன்னர்களின் 10 கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

இந்த கல்வெட்டுகளின் வழியே அந்நாளைய கொடைகள், வரி விதிப்புகள், ஒப்பந்தங்கள், ஆட்சி முறைகள், ஊர் அமைவிடம் ஆகியவை தெரிய வருகின்றன. இத்தகைய சிறப்புமிக்க சின்னமனூருக்கு அவசியம் வாருங்கள்!

– க. விக்னேஷ், ஆறாம் வகுப்பு 'பி' பிரிவு, சிவகாமி நாடார் மெட்ரிகுலேஷன் மேநிலைப் பள்ளி, சின்னமனூர், தேனி மாவட்டம்.


என்னிடம் இல்லாதது எது?
கதை: கே. மணிகண்டன்,
பதினோராம் வகுப்பு.
தேவாங்க மேல்நிலைப்பள்ளி,
கோவை.
படம்: சுமன்
கோவைபுரியை பாமர் ராஜன் ஆண்டு வந்தான்.
நாட்டில்—
அரசர் இப்படி வரி விதிச்சு ஏன் நம்மைக் கஷ்டப்படுத் தறார்?
வேட்டையாடி பறவை, விலங்குகளை யும் கூடத் தான் கஷ்டப் படுத்தறார்.
செல்வந்தர்களுக்குத் தான் அரசர் கரிசனம் காட்டறார்.
ஆமாம்! ஏழைகள் எல்லாம் வேற நாட்டிற்குப் போக வேண்டி யதுதான்!
அரசவையில் ஒரு நாள்—
அவையோர்களே தங்களிடம் ஒரு கேள்வி.
மடையன் என்ன சொல்லப் போறானோ...
என்னிடம் இல்லாதது எது?
கேள்வியே தேவை இல்லை. தங்களிடம் அனைத்தும் உள்ளன.
நான் அப்படி நினைக்க வில்லை. ஒருவாரத்தில் எனக்குச் சரியான பதில் வேண் டும்.
இவனுக்குப் புத்தி தான் இல்லை. அதைச் சொன்னால் உயிரை எடுத்து விடுவான்.


மறுநாள் பக்கத்து நாட்டுடன் போர் தொடுத்தான் பாமர ராஜன்.
நல்லாயிருப்பாரா இந்த அரசர்?
ஐயோ! தேவை இல்லாமல் போர் செய்து எவ்வளவு உயிர் இழப்பு!
ஒருவாரம் கழித்து அரசவையில்—
யாராவது பதில் சொல்கிறீர்களா?
அரசே! நான் கூறலாமா?
ம்... சொல் பார்க்கலாம்!
தங்களிடமில்லாதது மனிதாபிமானம்.
என்ன கூறுகிறாய்?


நிதானமாகக் கேளுங்கள் அரசே!
ஏழைகளிடம் அநியாய வரி வசூலித்தீர்கள். உயிரினங்களை வேட்டையாடினீர்கள். தேவையின்றிப் போர் தொடுத்து உயிர்களைப் பலியாக்கிய உங்களிடம் இல்லாதது மனிதாபிமானம் தான்!
இந்தப் பதிலுக்குத் தாங்கள் அளிக்கும் தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன்.
தண்டனை பெற வேண்டியவன் நான்தான். தவறைச் சுட்டிக் காட்டியதற்கு நன்றி. இனி நல்ல அரசரை இந்த நாடு பார்க்கும்.



சரவணன் ரொம்ப நல்ல பிள்ளை. தகப்பனார் பேச்சைத் தட்டி நடக்க மாட்டான். நோயால் படுக்கையில் விழுந்த தந்தை சரவணனை அருகில் அழைத்து ஒரு துண்டுக் காகிதத்தை அவன் கையில் கொடுத்தார். அதைப் பிரித்துப் பார்த்தான்.

1. உயிர்த்துணையின்றி வழி நடக்காதே.
2. சத்திரங்களில் படுக்காதே,
3. நான்கு பேர் வார்த்

அப்பாவின்

தையைத் தள்ளாதே.
4. உள்ளதெல்லாம் மனைவியிடம் சொல்லாதே.

தந்தையின் ஈமச் சடங்குகள் முடிந்தபின் வேலை தேடிப் புறப்பட்டான். அவனுடன் எவரும் வர மறுத்து விட்டார்கள். ஒரு நண்டைப் பிடித்துத் தண்ணீர் கலயத்தில் போட்டு வாயை ஒரு துணியால் கட்டி எடுத்துக்கொண்டு போனான்.

நெடுந்தூரம் நடந்தபின் கால் வலித்தது. சற்றே இளைப்பாறுவோம் என்று ஒரு பெரிய மரத்தடியில் படுத்தான். படுத்தவன் அயர்ந்து உறங்கி விட்டான்.

மாலதி

தண்ணீர்க் கலயத்திலிருந்த நண்டு தன் கால்களால் கட்டியிருந்த துணியைப் பிராண்டியது. பழைய துணியாதலால் நண்டின் கொடுக்குப்பட்டு கிழிந்து விட்டது. வெளியே வந்த நண்டு அவன் காலைக் கவ்வியது. 'திடுக்'கென எழுந்த சரவணன் நண்டை

வாக்கும் வைரங்களும்



மட்டுமா பார்த்தான்! படமெடுத்து நிற்கும் கருநாகத்தையும் பார்த்தான்.

அலறி அடித்துக் கொண்டு குதி கால் பிடரியில்பட ஓடினான். எதிரே வந்த சிலர் அவனைப் பிடித்து நிறுத்தி விபரம் கேட்டனர்.

''நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த என்னை நாகம் வந்திருப்பதை அறிவிக்க நண்டு எழுப்பியது'' என்றான் சரவணன்.

"நண்டாவது! எழுப்புகிறதாவது! உனக்கு ஆயுள் கெட்டி. அந்த மரத்திலுள்ள கழுகும் நாகமும் சிநேகிதமாயிருக்கின்றன. அந்த மரத்தடியில் தூங்குபவரை நாகம் கொத்தும். மனிதர்கள் இறந்த பிறகு கழுகு கொத்தித் தின்னும். நண்டைத் தேடி மரத்தடிக்குப் போகாமல் பயணத்தைத் தொடர்" என்று கூறிவிட்டுச் சென்றனர்.

தந்தையின் முதல் வாக்கியம் தன் உயிர் காத்ததை எண்ணி மெய் சிலிர்த்தபடி நடந்தான் சரவணன். இரவு நெருங்கும்போது ஒரு சத்திரம் தென்பட்டது. இரண்டாவது வாக்கியத்தின்படி சத்திரத்தில் படுக்காமல், களத்து மேட்டில் துண்டை விரித்துப் படுத்தான்.

நள்ளிரவு; கும்மிருட்டு. சத்திரத்திலிருந்து "ஐயோ! அம்மா! நான் கஷ்டப்பட்டு இம்மி இம்மியாய் சேர்த்ததைக் கொள்ளை கொண்டு போறானே! ஐயையோ! அடிக்காதே!" என்ற கூக்குரல்கள் கேட்டன.


சரவணன் நடுங்கியபடி படுத்திருந்தான். "இங்கே ஒருத்தன் படுத்திருக்கான் பாரு" என்றான் ஒரு தடியன்.

"நான் அப்பவே பார்த்து விட்டேன். பாவம், ஏழை. பணம் வைத்திருப்பவன் தைரியமாக இப்படி களத்து மேட்டில் படுக்க மாட்டான். சத்திரத்தில் கொள்ளையடித்தது ஏராளமாய் இருக்கிறது. வா போகலாம்" என்றான் மற்றவன்.

அப்பாவின் இரண்டாவது பொன்மொழி தன் பொருளைக் காப்பாற்றியதை எண்ணி மெய்சிலிர்த்தான் சரவணன்.

மறுநாள் காலை கொள்ளையர்கள் சத்திரத்தில் உள்ள பலரை கொன்றிருப்பதை ஊரார் அறிந்தனர். பஞ்சாயத்தார் கூடி "யார் யார் எந்தெந்த பிணத்தை எடுத்துப் போய் எரிக்கிறார்களோ அந்தப் பிணத்தின் மேல் உள்ளது அதை எரிப்பவர்களுக்குச் சொந்தம்" என அறிவித்தனர்.

சரவணன் நான்கு பிணங்களை எரித்தான். ஒரு மூங்கில் கொம்பொன்றுதான் கிடைத்தது. அழகாயிருந்ததால் அதை எடுத்



''சுசப்பான அனுபவம் காரணமாக, பார்த்துக்கிட்டிருந்த தொழிலை விட்டுட்ட தாகச் சொன்னீங்களே என்ன தொழில் செய்தீங்க?''

''வேப்ப எண்ணெய் வியாபாரம்.''

— கலைநண்பன்

துக் கொண்டான்.

கூலிப்பணத்தையும் பெற்றுக் கொண்டு வழி நடந்தான். ஒரு மாமரத்தில் சற்று உயரத்தில் மாங்காய்கள் இருந்தன. எட்டிப் பார்த்தான். எட்டவில்லை. கம்பால் தட்டினான். கம்பு நழுவி கீழே விழுந்து இரண்டாய் முறிந்தது. அதனுள்ளிருந்து ஒரு சிறு குழல் விழுந்தது. அதைத் திறந்தான். கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் ஒன்பது வைரக் கற்கள் இருந்தன.

திருடர்களுக்கு அஞ்சி யாரோ ஒரு வியாபாரி இப்படி பாதுகாப்புச் செய்திருக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டான் சரவணன். எட்டு ரத்தினங்களை முன் போல் குழலிலிட்டு பத்திரப்படுத்தியவன் ஒன்றை அருகிலுள்ள நகரத்தில் விற்றான். ஒரு லட்சம் பொன்னுக்கு அது விலை போயிற்று.

தந்தையின் மூன்றாவது வாக்கியத்தை எண்ணிப் பரவசப்பட்டான் சரவணன். 'அருவருப்பு அடையாதே! நம்மைப் போல் ஒரு உயிர்' என்று நான்கு பேர் வற்புறுத்தியதால்தானே பிணங்களை எரித்தான்!

அவன் பிறந்த ஊர் எல்லையில் ஒரு பாழடைந்த பிடாரி கோவில் உண்டு. யாரும் வர மாட்டார்கள். அங்கே போய் கோவிலின் கிழக்குப் பக்கம் தோண்டினான். பெரிய கல் தடுத்தது. கஷ்டப்பட்டு அதை நகர்த்தினால் ஒரு ரகசிய அறை தெரிந்தது. மகிழ்ச்சியோடு அதற்குள் வைரங்கள் இருந்த குழலையும் 85,000 பொன்னையும் துண்டில் முடிந்து வைத்து முன் போலவே மூடி அடையாளம் வைத்தான்.

15000 பொன்னுடன் ஊருக்குள் வந்து வீடு வாங்கினான். உழுவதற்கு நிலமும் ஏரும் மாடுகளும் வாங்கினான். நிலத்தில் பாடு பட்டதில் முப்போகம் விளைந்தது. அவனது சிறப்பு கண்டு ஒரு பெரிய தனவந்தர் தன் மகளை சரவணனுக்கு மணம் செய்து கொடுத்தார். வாழ்க்கை ஆனந்தமாய் கழிந்தது.

சரவணன் அந்த ஊரில் மருத்துவமனை, கல்விச்சாலை அமைத்தான். ஏழை எளியவர்களுக்குப் பல உதவிகள் செய்தான். ''இதற்கெல்லாம் ஏது பணம்?'' என்று மனைவி சதா நச்சரித்து வந்தாள். தந்தையின் நான்காவது பொன்மொழியை எண்ணி சரவணன் 'கடவுள் தருகிறார்' என்று சொல்லி விடுவான்.

யாருமறியாமல் ரகசிய அறையிலிருந்து பொற்காசுகளை எடுத்து வந்து செலவழித்தான் சரவணன்.

தன்னை நம்பவில்லை என்று கூறி சரவணனோடு பேசாமல் இருந்தாள் அவன் மனைவி. அதற்கும் மசியாததால் பட்டினி கிடந்தாள்.

சரவணன் 'யாரிடமும் சொல்லக் கூடாது' என்று சத்தியம் வாங்கிக் கொண்டு அவளிடம் ஒளித்து வைத்திருந்த இடத்தைக் கூறினான்.

சரவணன் மனைவி பக்கத்து வீட்டுக்காரியுடன் ஒரு நாள் சண்டையில் "நீதான் பிசுநாரி! எங்களுக்கு இதைப் போல் எட்டு பங்கு செல்வம் இருக்கிறது" என்று சொல்லி விட்டாள்.

அடுத்த வீட்டுக்காரி தன் கணவனிடம் இதைக் கூறி சரவணன் அறியாமல் அவனைப் பின் தொடரும்படி சொன்னாள். அவனும் அப்படியே செய்தான்.

"இந்தப் பக்கத்து வீட்டுக்காரன் ஏன் என் பின்னாலேயே அலைகிறான் என்று தெரியவில்லையே" என்றான் ஒருநாள் சரவணன்.

நடந்ததைக் கூறி மன்னிக்கும்படி கூறிய சரவணன் மனைவி "நல்லவேளை! இடத்தைச் சொல்லவில்லை" என்று பெரு மூச்சு விட்டாள்.


"உன்னிடம் சொன்ன அன்றே இடத்தை மாற்றி விட்டேன். பிறகு அந்த இடத்தை உனக்குச் சொல்கிறேன்'' என்றான் சரவணன்.

"ஐயோ! சாமி! ரகசியம் ரகசியமாகவே இருக்கட்டும். எனக்கு வேண்டாம்'' என்று காதைப் பொத்திக் கொண்டாள் அவள்.


பக்கத்து வீட்டுக்காரன் பாவம், சரவணன் பின்னால் வருஷக் கணக்காய் அலைந்து கொண்டிருந்தான்.

பிராணிகளுக்கு இப்படி ஓர் அறிவு!


ஆழி




பெரு மழை வரும் என்று சிலந்திகள் முன்னதாகவே யூகித்து விடுகின்றன. அப்போது வலை பின்னுவதை நிறுத்தி விட்டுப் பாதுகாப்பான இடத்திற்குச் சென்று விடுகின்றன.




மேலே பறந்து கொண்டிருக்கும் தும்பி என்னும் தட்டாம்பூச்சி, மழை வரப் போவதை அறிந்து, தாழப் பறக்கத் தொடங்கி விடும்!



கன மழை வரப் போவதை வெகுநேரத் திற்கு முன்பே தெரிந்து கொண்டு தேனீக்கள் கூட்டுக்குத் திரும்பி விடுகின்றன!





'ஆரஞ்சு லேடி பேர்ட்' என்னும் வண்டு வானிலையைச் சரியாக யூகித்து விடும்! மரத்திலேயே வாழும் அந்த வண்டு, கடும் குளிர்காலம் வரப் போவதைத் தெரிந்து தரைக்கு இறங்கிப் பதுங்கி விடும்!




வானிலை சாதாரணமாக இருந்தால் எறும்புகள் நேர்க்கோட்டில் வரிசையாகச் சென்று கொண்டிருக்கும். கனத்த மழை வரும் என்று தெரிந்தால், அவை வளைந்து வட்டமான பாதையில் வரிசையாகச் செல்லும். மேலும் அவை தங்கள் முட்டைகளை ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு எடுத்துச் சென்றால் பெரு மழை வரும்!

மோசமான வானிலை இருக்கும் என்று தெரிந்து பாம்புகள் பொந்தை விட்டு வெளியே வருவதில்லை. மிருகக் காட்சி சாலையில் உள்ள பாம்புகளும் கூண்டுக்குள் சுருட்டிக் கொண்டு படுத்து விடுகின்றன!







ஜப்பானில் அடிக்கடி பூகம்பங்கள் ஏற்படுகின்றன. அங்கே மீன் தொட்டிகளில் வளர்க்கப்படும் 'பூனை மீன்கள்' பூகம்பம் ஏற்படுவதை முன்பே உணர்ந்து கொள்கின்றன. அப்போது அவற்றின் உடல் படபட வென்று நடுங்கும். அதைப் பார்த்து, பூகம்பம் வரப்போவதை ஜப்பானியர்கள் தெரிந்து கொண்டு எச்சரிக்கையாகி விடுகிறார்கள்!



ஒரு கிராமத்தில் உள்ள சுண்டெலிகள் எல்லாம் ஒரே சமயத்தில் திடீரென்று மறைந்து விட்டால், அப்பகுதியில் பூகம்பம் ஏற்படப் போகிறது என்று அறிந்து கொள்ளலாம். ஆமாம், சுண்டெலிகள் முன்னதாகவே தெரிந்து கொள்கின்றன!


கடுமையான கோடையிலும் குளிர்காற்று வரப்போகும் திசையை அறிந்து கொள்ள குதிரையால் முடியும்! குதிரை அதற்குத் தகுந்தாற்போல் திரும்பி நிற்கும்!







மீன் தொட்டிகளில் வளர்க்கப்படும் 'பொன் மீன்கள்' வானிலை மாறுதல்களை உடனே தெரிந்து கொள்ளக் கூடியவை. வானிலை சீராக இருந்தால் இந்த மீன்கள் வலமிருந்து இடமாகவும் வானிலை மோசமாகிப் பெரு மழை ஏற்படப் போகிறதென்றால் இடமிருந்து வலமாகவும் நீந்திச் செல்கின்றன!

புயல் வருவதை முன்கூட்டியே உணர்ந்து கொள்ளும் ஆற்றல் யானைகளுக்கு உண்டு. அவை அமைதியின்றி அங்குமிங்கும் ஓடி, பத்திரமான இடத்தைத் தேடிக்கொள்கின்றன. எந்தத் திசையை நோக்கி யானைகள் நிற்கின்றனவோ, அந்தத் திசையிலிருந்துதான் புயல் வீசப் போகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்!






பன்றிகள், வடக்கு நோக்கிச் சுவர்ப் பக்கம் ஒதுங்கினால் நல்ல வானிலை அமையும் என்றும், தெற்கு நோக்கி ஒதுங்கினால் மழை வரும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்!




மழை வரப் போவதை ஆடுகளும் முன்கூட்டியே அறிந்து கொள்கின்றன! ஆங்காங்கே மேயும் ஆடுகள், அடர்ந்த மரத்தின் கீழே ஒன்றுகூடினால் விரைவிலேயே மழை வரும்! காற்றிலுள்ள ஈரப் பதத்தை மோப்ப சக்தியினால் அளவிடும் சக்தி ஆடுகளுக்கு உண்டு!




வானிலை மோசமடைந்து புயல் உருவாகும் போல இருந்தால், நாய்கள் எங்கே சென்றிருந்தாலும் விரைந்து தாம் தங்கும் இடத்திற்கு வந்துவிடும்! நாய்கள் ஒரே இடத்தில் படுக்காமல் வட்ட மிட்டுக் கொண்டிருந்தால் தென் மேற்குத் திசையிலிருந்து மழை வரும்!




புயல் வருவதை 24 மணி நேரத்திற்கு முன்பாகவே புறாக்கள் உணர்ந்து கொண்டு தங்கள் கூட்டுக்குள்ளே முடங்கி விடுகின்றன!






நிலச் சரிவு ஏற்படப் போகிறது என்பதைக் கழுதைகள் உணர்ந்து கொண்டு, அந்த இடத்தை விட்டு ஓடிவிடுகின்றன!

பாலைவனப் பிரதேசங்களில் ஒட்டகங்கள் தங்கள் கழுத்தை அடிக்கடி ஆகாயத்தை நோக்கி வளைத்துப் பார்த்தால், அப்பகுதியில் 'மீன் மாரி' பொழியப் போகிறது என்று தெரிந்து கொள்ளலாம்!



அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப் போட்டியில் மூன்றாம் பரிசு பெறும் மூன்றாவது கட்டுரை



தொழிற்கல்வி

தொழிற்கல்வி நாட்டின் உற்பத்திக்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக உள்ளது.

வேலை வாய்ப்பை அதிகரிக்கச் செய்தல், ஒவ்வொரு பணிக்கும் முறையான பயிற்சி பெற்ற திறமையாளர்களைக் கிடைக்கச் செய்தல், குறிக்கோளும் ஈடுபாடும் இன்றி மேற்படிப்பைத் தொடர்கின்ற மாணவர்களுக்குப் பயனுள்ள மாற்றுக் கல்வியை வழங்குதல் ஆகிய திட்டங்களுடன் மத்திய அரசு தொழிற்கல்வியை அறிமுகப்படுத்தியது.

தமிழகத்தில் பொதுக்கல்வியோடு தொழிற்கல்விக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு முதல் தொழிற்கல்வியில் சேர்ந்து பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே வருகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மேல்நிலை வகுப்புகளில் தொழிற்கல்விப் பிரிவில் அதிகமான எண்ணிக்கையில் மாணவ, மாணவியர் சேர்ந்து பயிற்சி பெறுகிறார்கள். இயந்திர அமைப்பு வல்லுநர், பொறியியல் பகுதிகளை இணைப்பவர், பற்றவைப்பவர் எனப் பல்வேறு துறைகளில் தொழிற்கல்வி உள்ளது. மூன்றாண்டு காலத் தொழிற் படிப்பு வழங்கும் கல்லூரிகள் பல உள்ளன. இவை தமிழகத்தில் தொழிற்கல்வியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியாகும்.

தொழிற்கல்வி மனிதனின் தன்னம்பிக்கையை வளர்க்கிறது. வருமானத்திற்கு வழிவகுத்து நெடு நாள் தேவைகளை நிறைவு செய்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துகிறது. வேலை வாய்ப்பு அலுவல

கத்தில் காத்திருப்போர் பட்டியலைக் குறைக்கிறது. அதனால்தான் நாமக்கல் கவிஞர்.

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்'

- என்று பாடி நமக்கு நல்வழியைக் காட்டினார். ஆகவே நாட்டு மக்கள் அனைவரும் தொழிற்கல்வியைப் பெற்று வாழ்க்கையில் முன்னேற்றம் காணும் முயற்சியில் ஈடுபடுதல் வேண்டும்.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் பிரிவினர் இல்லாத நாடு அமெரிக்கா. நலிந்த பிரிவினருக்குத்தான் தொழிற்கல்வி என்றால் அமெரிக்காவில் தொழிற்கல்வி பயில ஆட்களே இருக்கமாட்டார்கள். ஆனால் அங்கே உயர்நிலைப் பள்ளிகளில் 65% பேர் தொழிற்கல்வியே பயிலுகின்றனர்.

தொழில் துறையில் உயர்ந்து விட்ட நாடு ஜப்பான். அங்கே ஒன்பதாம் வகுப்புக்குப் பின்னர் 3 ஆண்டுகள் தொழிற் கல்வியே படிக்கிறார்கள். பகுதி நேரத் தொழிற் கல்வி, அஞ்சல் வழி தொழிற் கல்விப் பிரிவுகளில் மிகுதியான மாணவர்கள் சேர்ந்து பயிலுகின்றனர்.

இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் பொதுக் கல்வியைக் கற்பதைவிடத் தொழிற்கல்வியில்தான் ஆர்வத்துடன் சேர்ந்து பயிற்சி பெறுகிறார்கள்.

இதனால் உலகத்தில் வளர்ந்துள்ள நாடுகள் அனைத்தும் தொழிற்கல்வியால்தான் முன்னேற்றம் கண்டுள்ளன என்பதை அறியலாம்.

நாடு வளரத் தொழில் வளம் பெருக வேண்டும். தொழில் வளம் பெருகப் பயிற்சி பெற்ற திறமையாளர்கள் தேவை. இத்தகைய திறமையாளர்களை உருவாக்குவது தொழிற்கல்வி.


தொழிற் கல்விதான் வேலை வாய்ப்புக்கும் வருமானத்திற்கும் உற்பத்திப் பெருக்கத்திற்கும் நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் அடிப்படையாக உள்ளது. எனவே அனைவரும் தொழிற் கல்வியைக் கற்றுக் கொண்டு நாட்டின் உற்பத்தியில் பங்குபெறுவோம்!

**- எம். சியாமளா, எட்டாம் வகுப்பு,
சிதம்பரம் செட்டியார் பெண்கள்
உயர்நிலைப் பள்ளி, கோட்டையூர்.**

சாதனைச் சிறுவன்

சென்னையில் உள்ள மைலாப்பூரில் வசிக்கிறார் பன்னிரண்டு வயதான சுகாஸ் சந்த். இவர் ஓவியம் தீட்டுவதில் வல்லவர். ஆண்டுதோறும் அகில இந்திய ஓவியப் போட்டிகள் விஜய் இன்பர்மேஷன்ஸ் என்ற நிறுவனத்தால் ஹைதராபாத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் தொடர்ந்து மூன்று முறை தேசிய விருதும் தங்கப் பதக்கமும் பெற்றிருக்கிறார் சுகாஸ்சந்த். இது தவிர டைட்டன், பர்ஸ்ட் கம்ப்யூட்டர்ஸ், கீதாபவன், ஃபவுண்டன் ஹெட், பாஸ்கின் ராபின்ஸ், பேங்க் ஆஃப் இந்தியா, ஹாவிஸ்கார் இந்தியா மற்றும் தமிழ்நாடு வனத்துறை ஆகிய நிறுவனங்கள் நடத்திய போட்டிகளில் பரிசு பெற்றிருக்கிறார். சுகாஸ் சந்துக்கு ஓவியத்தைத் தவிர பியானோ, வயலின் வாசித்தல், கராத்தே, இந்தியிலும் ஆங்கிலத்திலும் கவிதை எழுதுதல், நடிப்பு என ஏகப்பட்ட திறமைகளும் உண்டு. இது மட்டுமின்றி தமிழ், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளும் தெரியும். கோபாலபுரத்தில் உள்ள டி.ஏ.வி. ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு பயிலும் சுகாஸ்சந்த் படிப்பிலும் கெட்டி. சுகாஸ்சந்த் மேலும் பல கலைகளைக் கற்று சாதனை படைத்து தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பெருமைசேர்க்க வாழ்த்துவோம்!





கோகுலம் சுழல் கோப்பை

கோகுலம் இதழ்களில் ஒரு வருடத்தில் எந்தப் பள்ளி மாணவர்களின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ, அப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது.

செந்துறை, ஆண்டிபட்டி, லால்பேட்டை, பெரியதச்சூர், சென்னை, கூறைநாடு, பெண்ணாகரம் ஆகிய பள்ளிகளிடையே போட்டி கடுமையாக நடந்து வருகிறது. மற்ற பள்ளிகள் முயற்சித்தால் இன்னும் கூட பரிசை வெல்லும் வாய்ப்பு உள்ளது. உடனே படைப்புகளை அனுப்பி வையுங்கள். இன்னும் மூன்றே மாதங்கள் தான் உள்ளன!

கோகுலம் க்விஸ்

கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்து கேள்விகளுக்குச் சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள். விடைகளை எழுதி, முகவரிக் கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் குறிப்பிட்டு அனுப்புங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். சரியான விடை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசி தேதி 30.9.2000.

1. முன்பு கிழக்கு ஜெர்மனியையும் மேற்கு ஜெர்மனியையும் ________ சுவர் பிரித்துக் கொண்டிருந்தது.
2. உமிழ்நீர் உணவை ________ செய்ய உதவுகிறது.
3. அந்தக் காலத்தில் செய்திகளை அனுப்ப ________ பறவை பயன்பட்டது.
4. சாக்ரட்டீஸின் மாணவர், அரிஸ்டாட்டிலின் ஆசிரியர் இந்த கிரேக்க தத்துவஞானி.
5. போரில் காயம் அடையும் வீரர்களுக்கு உதவி செய்யும் நிறுவனம் ________
6. மீன் இனங்களில் மிகப் பெரியது ________
7. திருவள்ளுவரின் மனைவி ________
8. மலைகளின் அரசி என அழைக்கப்படும் தமிழ்நாட்டு கோடை வாசஸ்தலம் ________
9. பாகிஸ்தானின் தலைநகரம் ________
10. பென்சிலின் எழுதும் பகுதி ________ லிருந்து தயாரிக்கப்படுகிறது.

ஆசிரியர்,
கோகுலம்,
47. ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல்,
சென்னை – 97.



விளையாட்டு அரங்கம்



• பி.டி. உஷா



• விஜயலட்சுமி

செஸ் உலகில் இந்தியாவில் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருப்பவர் எஸ். விஜயலட்சுமி. சென்னையைச் சேர்ந்த இவர் இந்தியாவின் முதல் மகளிர் கிராண்ட் மாஸ்டர் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறார்.

ஜூலை மாதம் ஹைதராபாத்தில் நடைபெற்ற விப்ரோ கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் பி. ஹரிகிருஷ்ணாவுடன் மோதி பட்டத்தை வென்றிருக்கிறார், விஜயலட்சுமி. இவருக்கு வயது 21. இந்தியன் ஏர்லைன்ஸில் பணிபுரிகிறார்.

3½ வயது முதல் செஸ் ஆடத் துவங்கிய விஜயலட்சுமியின் பயிற்சியாளர் அவரது தந்தை சுப்பராமன்தான்! விஜயலட்சுமி மட்டுமல்ல அவரது தங்கைகள் மீனாட்சி மற்றும் பானுப்ரியாவும் செஸ் விளையாடி வருகிறார்கள். இதில் தேசிய அளவில் விஜயலட்சுமி முதல் இடத்திலும் மீனாட்சி இரண்டாவது இடத்திலும் உள்ளனர்.

1989ஆம் ஆண்டு தேசிய அளவிலான போட்டிகளில் இவர் விளையாட ஆரம்பித்தார். 1989 ஆம் ஆண்டில் நடந்த பத்து வயதிற்குட்பட்டோருக்கான ஆட்டங்களில் பட்டம் வென்ற விஜயலட்சுமி பத்தாண்டுகள் கடினமாக உழைத்து இன்று சாதனை படைத்திருக்கிறார்.

முதல் கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்ற விஜயலட்சுமிக்கு இந்திய செஸ் கூட்டமைப்பு இரண்டு லட்சம் ரூபாய் வழங்குகிறது.

செஸ் மகளிர் பிரிவில் உலகச் சாம்பியன் ஆக வேண்டியதே லட்சியம் என்று கூறும் விஜயலட்சுமியை நாமும் வாழ்த்துவோம்!

ஓய்வு பெற்ற தங்க மங்கை

தடகளப் போட்டிகளில் இருபது ஆண்டுகளாக விளையாடி வந்த பி.டி. உஷாவைத் தெரியாதவர்களே கிடையாது!

இந்தியாவில் தடகள விளையாட்டுகளில் உஷா செய்த சாதனைகள் ஏராளம். இதுவரை வேறு எந்த வீரரோ, வீராங்கனையோ இவரைப் போன்று சாதனை செய்ததில்லை. ஆசிய தடகளப் போட்டிகளில் 13 தங்கம், 3 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கங்களைக் குவித்த உஷா, 'தங்க மங்கை' என அன்போடு அழைக்கப்பட்டார். 1986 ஆம் ஆண்டு சியோலில் நடைபெற்ற ஆசியப் போட்டியில் மட்டும் 4 தங்கம் மற்றும் 1 வெண்கலப் பதக்கங்களைக் கைப்பற்றினார்.

1980 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் நடந்த சர்வதேச போட்டியில் முதல் முறையாக விளையாட ஆரம்பித்தார் பி.டி. உஷா.

1984 ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் நூலிழையில் வெண்கலப் பதக்கம் பெறும் வாய்ப்பை இழந்தார்.

கேரள மாநிலத்திலுள்ள சிறிய கிராமமான கூத்தாலியில் பிறந்த உஷாவுக்கு வயது 36. 'ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லும் கனவு பலிக்கவில்லை' என்று கூறும் உஷா இனி சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து விட்டார்.

விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்றாலும் உஷா தடகளத்திற்கென பயிற்சிப் பள்ளியை அமைத்து வீரர்களுக்குப் பயிற்சி அளிக்க இருக்கிறார். உஷாவின் பள்ளியிலிருந்து மேலும் பல உஷாக்கள் வெளி வருவார்கள் என எதிர்பார்க்கலாம்!

பி.டி. உஷா படம்: எம்.ஆர். வேங்கடரமணன்



குழந்தை ரூபத்தில் பகவான்!

பதினைந்து திதிகளில் அஷ்டமியையும் நவமியையும் யாரும் கொண்டாடாமல் இருந்தனர். எனவே அஷ்டமியும் நவமியும் விஷ்ணுவைச் சந்தித்து முறையிட்டன. "கவலைப்படாதீர்கள். உங்களை எல்லோரும் கொண்டாடும் விதத்தில் நானே பெருமை சேர்க்கிறேன்" என்று கூறிய விஷ்ணு, நவமியில் ராம அவதாரத்தையும் அஷ்டமியில் கிருஷ்ண அவதாரத்தையும் எடுத்தார். அஷ்டமி திதியன்று நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு தேவகி, வசுதேவரின் எட்டாவது குழந்தையாக கிருஷ்ணர் பிறந்தார். கம்சனுக்குப் பயந்து பெற்றோர்கள் கோகுலத்தில் யசோதை வீட்டில் கிருஷ்ணரை விட்டுவிட்டு, பெண் குழந்தையுடன் சென்றனர். மயக்கத்தில் இருந்த யசோதா மறுநாள் காலை கிருஷ்ணரைப் பார்த்தாள். எனவே திதிபடியும் நட்சத்திரப்படியும் இரண்டு விதமாக கிருஷ்ணர் ஜெயந்தி கொண்டாடப் படுகிறது.

கிருஷ்ணஜெயந்தி அன்று முறுக்கு, சீடை, அதிரசம், திரட்டுப்பால், வெண்ணெய், அவல்... என கிருஷ்ணருக்குப் பிடித்த பட்சணங்கள் செய்யப்படுகின்றன. கிருஷ்ணர் பிறக்கும்போது கம்சன் நறநற வென்று பல்லைக் கடித்தான். கம்சனை அழித்த கிருஷ்ணரின் சந்தோஷத்திற்காக நறநறவென்று கடிக்கக் கூடிய பட்சணங்கள் செய்யப்படுகின்றன. கிருஷ்ணருக்கு நன்றி செலுத்தும் விதத்தில் இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது.

ஒருமுறை கிருஷ்ணர் யமுனா நதிக்கரையில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தார். விஷ்ணு பக்தர்கள் சுதர்ஸன ஹோமம் செய்து கொண்டிருந்தனர். இந்த ஹோமத்திற்காக அவர்களின் மனைவியர் எல்லாம் புளிச்சாதம், தேங்காய் சாதம், எலுமிச்சை சாதம் என பலவித சாதங்களைச் செய்து வைத்திருந்தனர்.

மாடு மேய்க்கும் சிறுவர்கள் எல்லோரும் கிருஷ்ணரிடம் வந்து "பசிக்கிறது" என்றனர். கிருஷ்ணர் அவர்களிடம் "ஹோமம் செய்பவர்களிடம் போய்க் கேளுங்கள்" என்றார். ஹோமம் செய்து கொண்டிருந்த வேதியர்கள் சிறுவர்களைத் துரத்தி விட்டனர். திரும்பி வந்து கிருஷ்ணரிடம் முறையிட்டனர்.

"கொல்லைப்புறமாகச் சென்று பெண்களிடம் கிருஷ்ணன் கேட்டான் என்று கூறுங்கள். சாப்பாடு கிடைக்கும்" என்று கூறி அனுப்பி வைத்தார் கிருஷ்ணர்.

சிறுவர்கள் கூறியதைக் கேட்ட பெண்கள் சந்தோஷப்பட்டு சாதங்களை எடுத்துக் கொண்டு கிருஷ்ணரிடம் வந்தார்கள். எல்லோருக்கும் உணவு பரிமாறப்பட்டது. ஹோமத்தை முடித்த வேதியர்கள் தங்கள் மனைவியரைக் கூவி அழைத்தனர். கணவர்களின் குரலைக் கேட்ட பெண்கள் பயந்து நடுங்கியபடி சென்றனர். அதில் ஒரு பெண் மட்டும் "விஷ்ணுவின் அவதாரம்தான் கிருஷ்ணர். இவருக்குச் செய்தது பகவானுக்குச் செய்தது போல்தான்" என்றாள். கோபமடைந்த கணவன் அடித்தான். "கிருஷ்ணா! கிருஷ்ணா!" என்று கத்திய அப்பெண் ஜோதியாகக் கிளம்பிப் போனாள்.

அதைக்கண்ட மற்றவர்கள் பகவான் குழந்தை ரூபமாகவும் வருவார் என்பதை உணர்ந்தனர். அன்று முதல் இன்று வரை கிருஷ்ண ஜெயந்திக்குச் செய்யும் பட்சணங்கள் படைக்கும் முன் குழந்தைகளுக்காகத் தனியாகச் செய்து கொடுக்கப் படுகின்றன.


கிருஷ்ணர் வேடப்போட்டி

அட்டையில்: **எஸ். ஷிரியா,**
குரோம்பேட்டை, சென்னை.

கிருஷ்ணர் வேடப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட இதர புகைப்படங்கள் அடுத்த இதழில் இடம் பெறும்.

Edited , printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!




விடை: 1. மீனின் கண் 2. ஷூ லேஸ் 3. மழைத்துளி 4. நாய் கழுத்துக் கயிற்றின் நீளம் 5. நாயின் காது.




விடை: 1. பனைமரத்திலிருந்து தேங்காய் விழுதல் 2. சைக்கிளில் ஸ்டாண்ட் இல்லை.

இந்தப் படத்தில் உள்ள தவறுகளைக் கண்டுபிடியுங்கள்!

வண்ணம் தீட்டுங்கள்!





உங்களுக்கு நன்கு அறிமுகமான
பொருட்கள் இங்குள்ளன.
கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?

விடை: 1. பேனா நிப், 2. சாவி, 3. பின், 4. பென்சிலுடன் கூடிய ரப்பர்.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2000*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

